

டீன ஏஜ கதைகள் ஆரம்பம்
கல்கி
KALKI 5-8-1973 45 காசு



வெற்றி தலைக்கேறி விட்டதா என்ன அவருக்கு?

ஃப்ரூக் எஞ்சினியர் புன்னகை புரிகிறர்

"நான் எதையும் தலைக்கேற விடுவ தில்லை. ஆம். புரதம் நிறைந்த ப்ரில்க்ரீமைத் தவிர வேறு எதையும் நான் தலைக்கேற விடுவதில்லை. ப்ரில்க்ரீம் என்னுடைய தலைமுடியை ஆரோக்கிய மாக, நன்கு படிந்த நிலையில் வைத்திருக் கிறது. எப்படியிருக்க நான் விரும்பு கிறேனோ அதுபோலவேதான்."

ப்ரில்க்ரீமில் இருக்கும் புரதம் மயிர்க் கால்களுக்கு வலுவூட்டி, தலைமுடிக்கு நல்ல ஊட்டம் அளிக்கிறது. ப்ரில்க்ரீமினுல் கலையாத முடியுடன் மிடுக்காக நீங்கள் நாள் முழுவதும் விளங் கலாம். தவிர பிசுக்குத்தன்மையோ, ஒட்டிக்கொள்ளும் தன்மையோ அதற்குக் கிடையாது. அது முடியலங்காரத்திற்கோர் நவீன வழி.

ஃப்ரூக் மாதிரியே நீங்களும் புத்திசாலித்தனமானதைச் செய்யுங்கள். புரதம் நிறைந்த ப்ரில்க்ரீமை உபயோகி யுங்கள்.



புரதம் நிறைந்த

ப்ரில்க்ரீம் அழகான முடிக்கு ஆரோக்கியமான வழி.

BFF-3191-TAM-2



பொருளடக்கம்

பிரமாதீச, ஆடி 21 ※ ஆகஸ்டு 5, 1973


மேலட்டை வண்ணப்படம் : எஸ். வி. வேங்கடராமன்


''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



தென்பிராந்திய ரயில்வே, சென்னைக் காரியாலயத்தைச் சார்ந்த ஸ்ரீ வி. சுப்பிரமணியம் அவர்களின் குமாரரும், யுனைடெட் கமர்ஷியல் பாங்கில் பணிபுரிபவருமான சிரஞ்சீவி குருமூர்த்திக்கும், குவாயத் அட்வாள் கமர்ஷியல் ஸ்தாபனத்தைச் சார்ந்த ஸ்ரீ ஆர். கிருஷ்ணன் அவர்களின் குமாரத்தி சௌ. கல்யாணிக்கும் சென்னை அசோக்நகர் ''ராணி அண்ணாத்துரை கம்யூனிடி சென்டரில்'' திருமணம் வெகு விமரிசையாக 4-7-73ல் நடைபெற்றது. நகரின் பல பிரமுகர்கள் திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களுக்கு நல்லாசி வழங்கினர்.

வாழ்க மணமக்கள்.


மண்குதிரையை நம்பி..!
ஐயய்யோ! நான் என்ன பண்ணுவேன்... ஆத்துமழுக்கக்கூடாதா?
சுபிட்சம்
ஏழைமை வெள்ளம்
சோஷலிச பொருளாதாரம்
சாட்டையால் பலமா அடிச்சுப் பாருங்க!
சுதந்திரப் பொருளாதாரம்
என்னத்தைச் சொல்ல!
ஜன சங்கம்
சுதந்திரா
தீவிர இடது சாரி கோஷ்டிகள்


பசுமைப் புரட்சி!
ஆகா! பச்சைப் பசேல்னு என்ன அழகா புதுப்பிச்சிருக்கேன்!
அரசாங்க தானிய வியாபாரம்
பச்சை வர்ணம்
ரூ 560 கோடிக்கு உணவு தானிய இறக்குமதி

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா --பாரதியார்

மலர் 33 -- இதழ் 1

திறமையற்றவர்களின் தில்லி தர்பார்!

விலைவாசிகள் ஏகத்தாறுக உயர்ந்திருப்பது குறித்தும், பண வீக்கம் நாள்தோறும் ஓங்கி வருவது பற்றியும் மக்கள் சபையில் ஸ்ரீ சவான் பேசியுள்ளார். தமது திறமையின்மையை ஒப்புக்கொண்டு அவர் தந்துள்ள வாக்குமூலம் என்றே இந்தப் பேச்சைச் சொல்லிவிடலாம். தாம் சமாளிக்க வேண்டியிருந்த பல்வேறு பிரச்னைகளைச் சமாதானம் கூறுவது போல் நிதி அமைச்சர் அடுக்கியுள்ளார். பங்களா தேசத்திலிருந்து ஒரு கோடி அகதிகள் இந்தியாவுக்கு வந்ததும், பாகிஸ்தானுடன் பாரதம் போர் செய்ததும், பருவ மழை பொய்த்ததும் எல்லாருக்கும் தெரியும். ஆனால் சிரமங்களும் பிரச்னைகளும் இல்லாவிடில் நிதி மந்திரி என்று ஒருவர் இருக்க வேண்டிய தேவையே இல்லையே! பிரச்னைகளைச் சமாளிக்கும்போது நிதி மந்திரி தேசப் பொருளாதாரத்தின் ஆரோக்கிய நிலையையும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டுமல்லவா? நாட்டுப் பொருளாதாரம் சீர்கெடாமல் காப்பாற்ற என்ன முயற்சி எடுத்தார் என்பதைப் பற்றி அவர் வாய் திறக்கக் காணோம்!

அமெரிக்காவும் பிரிட்டனும் சுதந்திர வர்த்தகத்துக்குப் பெருமளவு இடம் தரும் நாடுகள். அந்த நாடுகளில் விலைவாசிகள் அதிகமாக உயர்ந்துவிடாதிருக்கக் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. இவ்வாறே ஊதியங்களும் புழக்கத்திலுள்ள பணத்தின் அளவும் அதிகமாகிவிடாதபடி பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் அந்நாடுகள் முயல்கின்றன. ஆனால் சோஷலிஸ கோஷத்தை எழுப்பி ஏழைமையை ஒழிப்பதாகப் பறைசாற்றும் நமது நிதிமந்திரியோ விலைகளையும் பணவீக்கத்தையும் சிறிதேனும் கட்டுப்படுத்தக்கூடக் கையாலாகாதவராக இருக்கிறார்! அவர் தைரியத்துடன் செயலாற்றியிருந்தால் திட்டச் செலவுகளையும் இதர ஊதாரிச் செலவுகளையும் 1970 லிருந்தே குறைத்துக் கொண்டு வந்திருக்கலாம். சமீபத்தில் ரிஸர்வ் பாங்கு எடுத்த பணப் புழக்கக் கட்டுப்பாட்டை எப்போதோ விதித்திருக்க வேண்டும். மத்திய, மாநில சர்க்கார்களையோ, நிதிநிறுவனங்களையோ கட்டுப்படுத்த எவ்விதச் செல்வாக்கும் இல்லாத நிதி மந்திரி, தவிர்க்கக்கூடிய ஏராளமான ஊதாரிச் செலவுகளையெல்லாம் அனுமதித்துவிட்டார். அரசுடைமையான பாங்குகள் மூலம், உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய நிறுவனங்களுக்கு மட்டுமே கடன் வசதி தந்திருக்க வேண்டும். ஆனால் சோஷலிஸ சித்தாந்தத்தின் கீழ் பாங்குக் கடன் இன்றியே சமாளிக்கக்கூடிய சகல வர்க்கத்தினருக்கும் கடனை வாரி வழங்கிப் பணவீக்கத்தை அதிகரிக்க ஊக்கம் தந்திருக்கிறார் நிதி அமைச்சர். போதாக் குறைக்குப் பாங்குகளும், சர்க்கார்த் துறைத் தொழில் நிறுவனங்களும் ஊழியர்களின் ஊதியங்களை உயர்த்த அனுமதித்தார். வரிகளையும் உயர்த்தி விலைகளை ஏற்றிவிட்டார். ஆக, செய்ய வேண்டியதைச் செய்யாதது, செய்யக் கூடாததைச் செய்தது என்கிற இரு விதங்களிலும் ஸ்ரீ சவானே இன்றையப் பொருளாதாரச் சீர்கேட்டுக்கு நேரடிப் பொறுப்பாளியாகிறார்.

நிதிப்பற்றுக்குறை எதிர்பார்த்ததை விடப் பன்மடங்கு பெருகியிருக்கிறது. இவ்வாண்டில் மூன்றே மாதங்களில் எதிர்பார்த்த 75 கோடி ரூபாய் பற்றுக்குறை 380 கோடியாக உயர்ந்திருக்கிறது! பட்ஜெட் வெளியானபின் எந்த இடர் உற்பாதமும் நிகழாமலேயே இவ்விதம் நேர்ந்துள்ளது. இதிலிருந்து பட்ஜெட் தயாரித்தபோது பல விஷயங்களை ஒளித்தும், தவறாகக் காட்டியும் இருக்கிறார்கள் என்று ஆகிறது. ஒருவேளை நிதிமந்திராலய அதிகாரிகள் மந்திரியையே இவ்வம்சங்களில் ஏமாற்றியிருக்கலாம். இல்லாவிடில் நிதி மந்திரியே நாட்டை ஏமாற்றி உண்மையை மறைப்பதற்கு உடந்தையாக இருந்தார் என்றுதான் அர்த்தம். எவ்விதமாயினும் இந்திய சர்க்காரின் நிதி அமைச்சு முற்றிலும் திறமையற்றவர்களிடம் உள்ளது என்பது நிதர்சனமாகத் தெரிகிறது.

இப்போது ஏற்பட்டுள்ள பணவீக்கத்தால் எதிர்காலத்துக்காக மக்கள் சேமித்து வைக்கும் பணத்தின் மதிப்பு

மாதந்தோறும் இரண்டு அல்லது மூன்று சத விகித அளவுக்குக் குறைந்து வருகிறது. தொழிலாளிகளும் இதர சிப்பந்திகளும் பஞ்சப்படி அதிகமாகப் பெற்றாலும், ரூபாயின் மதிப்பு விழுந்து கொண்டேயிருப்பதால் இதில் உண்மை யான லாபம் ஏதுமில்லை. அதோடுகூட அவர்களது பிராவிடன்ட் நிதி முதலிய சேமிப்புக்களின் மதிப்பும் குறைந்து கொண்டே வருவதைக் கவனிக்க வேண்டும். எனவே இவர்கள் சம்பளத் திலும் போனஸிலும் உயர்வு கேட்டுக் கிளர்ச்சி செய்வதைவிட, தங்களது பிராவிடன்ட் நிதி, பிற்பாடு பெறுகிற பென்ஷன் முதலியவற்றின் மதிப்பு, அதாவது ரூபாயின் பொருள் வாங்கும் சக்தி, குறையாமலிருக்கச் சர்க்காரிடம் போராடுவதே நல்லதாகும். ஒவ் வோர் ஆண்டும் பொருள் வாங்குவ தில் ரூபாய்க்கு உள்ள மதிப்பு எந்த அளவுக்குக் குறைகிறதோ, அதை ஈடு கட்டுகிற அளவுக்கான தொகையைப் பிராவிடன்ட் நிதியிலும், பென்ஷனி லும் சர்க்கார் சேர்த்தாக வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டும். இதே போல் பாங்கில் பணம் போட்டவர் களுக்கும் அதன் மதிப்புக் குறைவை ஈடுகட்ட வேண்டியது அரசாங்கத்தின் தரும நியாயமான பொறுப்பேயாகும். இதுபோன்ற தீவிரமான சீர்திருத்தங் களுக்காகப் போராடினால்தான் எந்த நிதிமந்திரியும் விலைவாசி உயர்வு, பண வீக்கம் முதலியவற்றைத் தடுப்ப தில் முனைந்து நிற்பார். வரிகளைக் குறைக்கவும் முயல்வார்.

* * *

ஸ்ரீ சவான், 'தில்லி சர்க்காரில் நான் ஒருவன் மட்டும்தான் திறமையற்றவனா என்ன?' என்று கேட்டால், அது நியா யமே! அவரைவிடவும் திறமைக் குறைவை விவசாய அமைச்சரிடம் பார்க் கிறோம். வறட்சி நிலையைச் சமாளிக்க இவர் எடுத்த ஒரே நடவடிக்கை கோதுமை வியாபாரத்தை அரசாங்கத் தின் வசமாக்கியதுதான். கோதுமை வியாபாரம் தனியார் கையில் இருந்த போது இன்னின்னார் அந்த வியாபாரத் தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தெளி வாக அனைவருக்கும் தெரிந்தது. ஆனால் அரசாங்க வர்த்தகம் ஏற்பட்டதன் விளை வாக இந்த நிலை மாறி, கறுப்புச் சந்தை நடத்துகிற சமூகவிரோத சக்திகளிடம் கோதுமை வியாபாரம் கைமாறியிருக் கிறது. மக்கள் அனைவரும் உண்பதற்கான தானியம் கிடைக்கிற அளவுக்கு அரசாங் கத்தால் கொள்முதல் செய்ய முடிய வில்லை. இவ்விஷயத்தில் கையாலாகாத வர்களாயிருக்கும்போது இந்த அர சுடைமை நடவடிக்கைக்கு நியாயமே இல்லை. வறட்சி நிலை தோன்றிய வுடனேயே இறக்குமதிக்கு ஏற்பாடு செய் திருந்தாலும் நிலைமையை ஓரளவு சமா ளித்திருக்கலாம். நாட்டில் பல இடங் களில் கிளர்ந்துள்ள அமைதியின்மை யைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் தில்லி சர்க்காருக்கு, மக்கள் வன்முறைகளில் ஈடுபட்டபிறகுதான் விழித்துக் கொள் வது என்பது வழக்கமாகி விட்டது.

* * *

ஜனநாயகத்தில் மந்திரி சபையின் திறமைக் குறைவுக்குப் பிரதமரே முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டுமல்லவா? தில்லி சர்க்காரில் தலைமை தாங்கும் பிரதமரவர்களும் திறமைக் குறைவுக்கு இன்னொர் உதாரணமாகத்தான் திகழ் கிறார். இப்போதுள்ள பொருளாதாரச் சீர்குலைவு இப்படியேதான் நீடிக்கும் என்றும் இதைவிட மோசமாகலாம் என் றும் சிரமங்களைத் தாங்கும் மனப் பக்கு வம் பாரத மக்களுக்கு இருப்பது கண்டு தாம் மகிழ்வதாகவும் கூறுகிற ஒரு பிர தமரைப் பற்றி வேறென்ன சொல்வது?

(ஆதாரம்: திரு க. சந்தானம் ''ஸ்வராஜ்யா''வில் எழுதியது)

வன்முறையும் தொழிற் சங்கமும்

தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சங்கத் தலை வர்களில் ஒருவரான திரு வி.பி. சித்தன் தாக்கப்பட்டதும் கத்தியால் குத்தப்பட்டதும் நாடு எங்குமுள்ள பெரும்பாலான தொழி லாளிகளுக்கும், தொழிற் சங்க இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பெரும் வருத்தத்தை ஏற் படுத்தியுள்ளது. நடந்திருப்பவற்றையும், சம்பவம் நடந்த தினத்துக்கு முன் தினம் தி.மு.க. அமைப்புக்களின் சார்பில் வழங் கப்பட்டுள்ள ஒரு துண்டுப் பிரசுரத்தை யும் பார்த்தால் மனம் பதைக்கிறது. மேற்படி துண்டுப் பிரசுரத்தையும் இணைத்துத் தம்மையும் பிறரையும் பாதுகாக் கும்படியும், வன்முறைகள் எவையும் நடக் காமல் கவனித்துக் கொள்ளும்படியும் திரு சித்தனே 17—7—73 அன்று முதலமைச்ச ருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அவ் வாறிருந்தும் இப்படி நடந்திருக்கிறது என்றால் என்னவென்பது? சுமுகமான அணுகு முறை களை விடுத்துப் பலாத்காரங்களின் மூலம் தொழிற்சங்க இயக்கத்தில் எதையுமே சாதிக்க முடியாது. பயமுறுத்துவதும், தாக்குவதும், யாருக்கும் பெயரையோ புகழையோ தந்து விடாது.



அன்பார்ந்த நேயர்களுக்கு



உங்கள் கல்கி பத்திரிகை, அரசியல், இலக்கிய, சமுதாயத் துறைகளில் தனது முப்பத்திரண்டு ஆண்டு தரமான சேவையைத் தொடர்ந்து இன்று முப்பத்து மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளாக நேயர்களாகிய நீங்கள் காண்பித்து வரும் அக்கறைக்கும் ஆதரவுக்கும் நன்றி செலுத்துவதுடன் தொடர்ந்து இப்பத்திரிகையின்பால் உங்கள் அன்பு அபரிமிதமாகப் பெருக ஆண்டவன் அருள வேண்டும்.

எனது ஆப்த நண்பரும் இப்பத்திரிகையின் முதல் ஆசிரியராக விளங்கியவருமான திரு ரா. கிருஷ்ணமூர்த்தி, 'கல்கி' என்ற புனை பெயரில் எழுதிய 'சிவகாமியின் சபதம்' என்ற மகோந்நதமான சரித்திர நாவல் இந்த இதழிலிருந்து மறுமுறை பிரசுரமாகத் தொடங்குகிறது. முன்பு 'பொன்னியின் செல்வ'னை இரண்டாவது தடவையாகப் பிரசுரித்த போது நேயர்கள் அளித்த உற்சாகமான வரவேற்பு இந்தச் சரித்திர நாவலைப் பிரசுரிக்கும் போதும் இருப்பதைக் கண்டு மனம் பூரிக்கிறேன். முதிய தலைமுறையினர் மீண்டும் படிக்கவும் இளம் தலைமுறையினர் புதிதாய் ரசிக்கவும் தயாராக இருப்பதை உணர்ந்து மகிழ்கிறேன்.

சிவகாமியின் சபதம் புத்தகத்துக்கான முன்னுரையில் (ஜூலை 22ந் தேதி கல்கியில் பிரசுரமாயிற்று) அந்நாவல் முதன் முறையாகக் கல்கியில் பிரசுரமாகத் தொடங்கிய சமயம் இருந்த காகிதத் தட்டுப்பாடு பற்றி என் நண்பர் 'கல்கி' குறிப்பிட்டிருக்கிறார். இப்போது இரண்டாவது தடவையாக 'சிவகாமியின் சபதம்' கல்கியில் தொடர்ந்து வெளிவரவிருக்கும் சந்தர்ப்பத்திலும் முன்போலவே, ஏன் அதைவிடக் கடுமையாகவே காகிதப் பஞ்சம் தோன்றியிருப்பது விந்தைதான்! எல்லாப் பத்திரிகைகளுமே முன்னைக்கு இப்போது பக்கங்களைக் குறைத்து, கையிருப்புக் காகிதத்தை வழக்கத்தைவிட அதிக காலத்துக்கு நீடிக்கச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதனால் கல்கி நேயர்களுக்கு ஏற்படக்கூடிய சிறிதளவு ஏமாற்றத்தைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

இத்தருணத்தில் நமக்குத் தோன்றாத் துணையாக இன்றைக்கும் இருந்து வரும் பூஜ்ய ராஜாஜி அவர்களைக் கனிந்த இதயத்தோடு நினைத்துப் பார்த்து அஞ்சலி செலுத்துகிறேன். கல்கி பத்திரிகை, சத்தியத்தின் சங்கநாதமாக, தூய்மையின் உறைவிடமாக, சுதந்திர சிந்தனைகளின் வடிவமாக, இறையுணர்ச்சிக்கு இடமளிப்பதாக விளங்க வேண்டும் என்று ராஜாஜி அவர்கள் ஆசைப்பட்டார்கள். அவரது ஆசை என்றும் நிராசையாகாது என்பதை இன்று வலியுறுத்திக் கூறவும் மீண்டும் சங்கற்பித்துக் கொள்ளவும் விரும்புகிறேன்.

கல்கி, முப்பத்து மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்நன்னாளில் காஞ்சி ஆசாரியாளின் அருள் சுரக்கும் முகத்தை இதயத்தில் தேக்கி இப்பத்திரிகையின் காவல் தெய்வமாம் விநாயகப் பெருமானைச் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

சதாசிவம்

தமிழ் நாட்டிலே...

தீரன்

காங்கிரஸ் இணைப்பு

திரு காமராஜ் அவர்களின் 71வது பிறந்த தினத்தை ஒட்டிக் காங்கிரஸின் இரண்டு பிரிவுகளும் ஒன்றாக இணைவதற்கான பேச்சுக்கள் நடக்கின்றன. இதற்காக முயல்வதிலும் ஆர்வம் காட்டுவதிலும் இணைப்புக்கான சுமுக நிலையை உருவாக்குவதிலும் முன்னாள் முதலமைச்சர் திரு பக்தவத்ஸலம் பெரும் பங்கு கொண்டுள்ளதாகத் தெரிகிறது. மதுரையில் ஜூலை மாத இறுதியில் பத்திரிகை நிருபர்களிடம் பேசும் போது, ''தமிழ் நாட்டில் உள்ள இரண்டு காங்கிரஸ் கட்சிகளையும் ஒன்றாக இணைக்க வேண்டும் என்று இரண்டு காங்கிரஸ் கட்சிகளையும் சேர்ந்த தொண்டர்கள் பலரிடையே ஒரு கருத்து நிலவுகிறது. அதே சமயம் மற்ற மாநிலங்களில் உள்ள ஸ்தாபன காங்கிரஸின் பெரிய தலைவர்கள் எல்லாரும் இதை எதிர்க்கிறார்கள் என்பதையும் நான் அறிவேன். இந்த இணைப்பு முயற்சி தமிழ் நாட்டுக்கு மட்டும் தானே ஒழிய மற்ற மாநிலங்களுக்கு அல்ல.

தமிழ் நாட்டில் பெயர் குறிப்பிட்டு யாரையும் நான் சொல்ல விரும்பவில்லை. ஆனாலும் திரு காமராஜ் போன்ற தலைவர்கள் இம் முயற்சியை எதிர்க்கவில்லை. அவர்கள் இது பற்றி ஒருசில வார்த்தைகளே பேசுவதால் அதிலிருந்து யூகித்து அறிவது கடினமாக இருக்கிறது'' என்று கூறியிருக்கிறார் திரு பக்தவத்சலம். ஆனால் அதற்கு இரண்டு மூன்று நாட்களுக்குமுன் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு பி. ராமச்சந்திரன் சென்னையில் நடைபெற்ற ஸ்தாபன காங்கிரஸ் செயற்குழுவின் முடிவில் பத்திரிகை நிருபர்களிடம் பேசும்போது, காமராஜ் பிறந்த தினத்தன்று இந்திரா காந்தி வாழ்த்து அனுப்பியதற்கு அரசியல் முக்கியத்துவம் எதுவும் இல்லை என்றும் நட்பு முறையிலும் மரியாதைக்காகவும்தான் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்தார்கள் என்றும், தாம் சுற்றுப் பயணம் செய்த இடங்களில் கட்சி ஊழியர்கள் உற்சாகமாகப் பணி புரிகிறார்கள் என்றும் இணைப்பைப் பற்றி யாருமே கேட்கவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

பூனை கண்ணை மூடிக்கொண்டால்

கடும் அரிசிப் பஞ்சத்தினாலும் அரிசி விலை ஏற்றத்தினாலும் கன்னியாகுமரி மாவட்ட மக்கள் அவதியுற்று, ஹர்த்தாலும் போராட்டமும் நடத்திச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும்போது, ''கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவுப் பற்றாக்குறை இருப்பதாக வெளியாகும் செய்திகள் அடியோடு தவறு'' என்று உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி மறுத்திருப்பது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது.

''திருநெல்வேலிக்கும் கன்யாகுமரிக்கும் நடுவே செக்போஸ்டு அமைப்பதை விடுத்துக் கேரள எல்லைகளில் மட்டும் செக்போஸ்டு அமைக்கலாம். திருநெல்வேலியிலிருந்தும் பிற மாவட்டங்களிலிருந்தும் கன்யாகுமரிக்குள்ளேயே உணவுப் பொருள்கள் நுழைய விடாமல் தடுப்பது சரியில்லை'' என்று திரு காமராஜ் கூறியுள்ள கருத்தின் நியாயத்தைப் புரிந்து கொள்ளாமல், ''அப்படி நுழையவிட்டால் கேரளத்துக்கு அரிசி கடத்தல் அதிகரிக்கும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு மலிவு விலையில் அரிசி கிடைக்காது'' என்று கூறியுள்ளார் உணவு அமைச்சர். அவர் சொல்லியிருப்பதுதான் பிரத்தியட்ச நிலை என்றால் இப்போதே கன்யாகுமரி மாவட்ட மக்களுக்கு மலிவு விலையில் அல்லவா அரிசி கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும்? நிலைமை அப்படி இல்லை என்பதிலிருந்தே திரு காமராஜ் கூறுவதில் உள்ள நியாயம் புலனாகிறது. 'பூனை கண்ணை மூடிக் கொண்டால்...?' என்கிற ரீதியில் இருக்கிறது உணவு அமைச்சரின் பேச்சு.

ஏலத் தொகை ஏற்றம்

பூரண மதுவிலக்கை அமலுக்குக் கொண்டு வராமல் 'கள்ளுக் கடைகளை மட்டும் மூடப் போகிறோம்' என்று அறிவித்திருக்கிற காரணத்தால் தமிழ் நாட்டில் சாராயக் கடைகளின் ஏலத் தொகை பல மடங்கு அதிகரித்திருக்கிறது. சென்ற முறை சேலத்திலும் சுற்றுப்புறங்களிலும் வெறும் 9,33,843 ரூபாய்க்கு ஏலம் போன அதே கடைகள் இந்த முறை 36,15,760 ரூபாய்க்கு ஏலம் போயிருக்கின்றனவாம். அதே போல் வேலூரில் பன்னிரண்டு லட்சத்துச் சொச்சம் ரூபாய்க்குச் சென்ற ஆண்டு ஏலம் போன கடைகள் இந்த ஆண்டு முப்பத்தேழு லட்சத்துக்கு மேல் ஏலம் போயிருக்கின்றன. நிலைமை இப்படி இருக்கும்போது கள்ளுக்கடை மூடலால் நஷ்டம் வரும் என்று புலம்பிக் கொண்டே புதிய 'லெவி'களை வேறு அரசாங்கம் போட்டுவிட்டது. பூரண மதுவிலக்கை அமுலாக்காமல், சாராயவெள்ளத்தையும் பெருக விட்டுக் கொண்டு புதிய லெவிகளையும் சுமத்துவதால் என்ன பயன்? மக்களின் சொல்லொணாத் துயரம்தான் கண்ட பலன்.


அதிகாரிகளும் உடந்தையா?


தமிழ் நாட்டிலிருந்து கேரளப் பகுதிகளுக்கு அரிசி ஏராளமாகக் கடத்தப்படுவது பற்றி திரு பக்தவத்சலம் மதுரையில் கூறியிருக்கிறார். ''தமிழ் நாட்டிலிருந்து கேரளத்துக்கு அரிசி கடத்தப்படுவதற்குத் தி.மு.க. அரசே காரணம். அரசாங்கம் தீவிர கவனம் செலுத்திக் கடத்தலைத் தடுக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். எல்லைப் பகுதிகளில் கடத்தல் நடக்கும் முறையைப் பார்த்தால் அது ஏதோ வழக்கமான வர்த்தக வழிகளில் ஒன்றைப் போல் நடப்பதாகவே நினைக்கும்படி உள்ளது. தலைச் சுமையாகவும், லாரிகளிலும் அரிசி கடத்தப்படுகிறது. விவசாயத்தைவிட இந்தக் கடத்தல் வேலை லாபகரமாக இருப்பதாய் விவசாயிகளே நினைக்கும்படி ஆகிவிட்டது. இதனால் உத்தமபாளையம், கம்பம் பள்ளத்தாக்கில் விவசாய வேலைகளுக்கு ஆள் கிடைப்பதுகூடக் கஷ்டமாகிவிட்டது. தமிழ் நாட்டிலிருந்து ஒரு லாரி லோடு அரிசி கொண்டு போக வாங்கப்பட்ட 'பெர்மிட்'டை வைத்தே ஐந்து லாரி அரிசி கொண்டுபோகும் ஊழலைக் கண்டித்துத் தி.மு.க. உறுப்பினர் ஒருவரே வெளியிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றை நான் பார்த்தேன். ஒரு லாரி டிரிப்புக்கு ரூ. 3000 வீதம் லாரி உரிமையாளர்கள் லாபம் சம்பாதிப்பதாகத் தெரிகிறது. கம்பம் பள்ளத்தாக்கே உபரி அரிசிப் பகுதியாயிருக்கும் போது தஞ்சாவூரிலிருந்து அரிசி வாங்குவதற்கான பெர்மிட்டுகளைக் கம்பம் பகுதி வியாபாரிகளுக்கு ஏன் வழங்கினார்கள் என்று தெரியவில்லை'' என்று கம்பம் பள்ளத்தாக்கில் சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் திரு பக்தவத்சலம் கூறியுள்ளார்.

எச்சரிக்கை அட்டை

தமிழ் நாடு முதலமைச்சர் திரு கருணாநிதி சமீப காலமாக அவருடைய மேஜை மீது ஓர் எச்சரிக்கை அட்டையை எழுதுவித்து வைத்திருக்கிறாராம். அதில் ஜூன் மாதம் நடைபெற்ற தி.மு.க. பொதுக் குழுவில் நிறைவேறிய தீர்மானங்களில் இரண்டாவது தீர்மானம் எழுதப்பட்டிருக்கிறதாம்.

''தி.மு. கழகத்தில் பொறுப்பில் உள்ளவர்கள் மக்களுடைய பொதுப் பிரச்னைகளைத்


மக்கள் அதிருப்தி
எனக்கு சீட்டுமேல மோகம் இல்லே, ஆடிக்கத் தயார்!
தி.மு.க ஆட்சி அதிகாரம்
ரெடி!
மாநில சுயாட்சிப் போராட்டம்


அதை எப்படி எழுதணும்ன…
மொய்னிஹான்
வாஷிங்டன்

தேவையற்ற தலையீடு

ராஜாஜி சிந்தனை

மனிதன் குரலில் தோன்றும் சங்கீதம் பூரணத் தன்மை அடைவதற்கு, கருத்தும், மொழியும், ராகமும், தாளமும், நான்கும் ஒன்றில் ஒன்று சரியாகப் பொருந்தி ஒன்றை ஒன்று பூரணப்படுத்தி நிற்க வேண்டும். வெறும் தாளத்தை மிருதங்கத்தில் கேட்டு மகிழ்ச்சி அடையலாம். ராகத்தையே தனியாகக் கேட்டும் இன்பம் பெறலாம். இசை இல்லாமல் பாட்டைத் தனியாகக் கேட்டு, கருத்தும் மொழிகளும் சந்தோஷம் தரப் பெறலாம். கருத்தும் கவி உருவம் இன்றியே அறிவாளிக்குத் திருப்தி தரக் கூடும். ஆனால் கருத்து, மொழி, ராகம், தாளம் நான்கும் பொருத்தம் பெற்றால், அந்தச் சங்கீதம் பாமரரையும், கல்வி கற்ற பெரியோர்களையும் ஒருங்கே பரவசப்படுத்துகிறது.

★

ஒருவனிடத்தில் ஏதாவது ஒரு பொருள் ஏராளமாக இருக்குமானால் அதைப் பற்றி அவனுக்கு நினைவே வராது. நம்மிடம் இல்லாத பொருளைப் பற்றித்தான் நாம் அதிகமாகப் பேசுவோம். நமக்கு ஏதேனும் நோய் வந்தால்தான், நம் உடலில் ஓடும் இரத்தத்தைப் பற்றி எண்ணுகிறோம். இதயத்தைப் பற்றி எண்ணுகிறோம். வயிற்றைப் பற்றி எண்ணுகிறோம். வயிற்றிலே கெடுதல் செய்யும் பண்டத்தைத் தின்ற பிறகுதான் வயிறு இருப்பது தெரிய வருகிறது. பண்பாட்டின் விஷயமும் இப்படித்தான். பண்பாடென்பது இந்திய மக்களிடையே தொன்று தொட்டு வந்த ஒரு செல்வம். இப்படி ஒரு செல்வம் நமக்கு இருப்பதையே அயலார் வந்து சொன்ன பிறகுதான் நாம் அறிந்தோம்.

தவிர வேறு எந்தப் பிரச்னைகளுக்கும் நேரடியாக அரசு அதிகாரிகளை அணுகாமல், நியாயங்களுக்குப் புறம்பான செயல்கள் எந்தப் பகுதியிலாவது நடைபெற்றால் அவைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும். அரசு அதிகாரிகளைக் குறித்து எந்தவிதமான சிபாரிசுகளையும் செய்வதற்குக் கழகத்தினர் வரக் கூடாது'' என்று அந்த அட்டையில் எழுதியிருக்கிறதாம். நெஞ்சில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டிய இந்த விஷயத்தை வெறும் அட்டையில் எழுதி வைத்துவிட்டால் மட்டும் போதுமா? எவ்வளவு தூரம் முதல்வரின் கட்சி அங்கத்தினர்கள் இதைக் கடைபிடிக்கப் போகிறார்கள்?

இரண்டாவது குடியரசு?

விழுப்புரம் தி.மு.க. மகாநாட்டில் பெரிதுபடுத்தப்பட்ட மாநில சுயாட்சிக் கோரிக்கையை 'இரண்டாவது குடியரசு உதயமாகப் போகிறது' என்கிற பாணியில் விவரித்துள்ளார் ஒரு தி.மு.க. எழுத்தாளர். அதிகார பூர்வமான தி.மு.க. பத்திரிகையிலேயே இப்படி எழுதப்பட்டிருக்கிறது. 'தம்முடைய மாநில சுயாட்சி கோஷத்தைப் பிரிவினை வாதமாக யாரும் திரித்துச் செய்தி போட்டுவிடலாகாது' என முதல்வர் வருத்தப்பட்டார். இப்போது அவர் இதற்கு (Second Republic) என்ன பதில் சொல்லப் போகிறார் என்பதுதான் புரியவில்லை. இது பிரிவினை வாதம் அல்லாமல் வேறு என்னவாம்? தாம் பேசும் போது ஒரு தினுசாகவும், தமது கட்சிக்காரர்கள் பேசும் போது வேறு தினுசாகவும் மாநில சுயாட்சி விளக்கப்படுவதை முதல்வர் அறியாரா?

பசுத் தோலே பசுவாகிவிடாது. புலியும் போர்வைக்குள் மறைந்திருந்தே நீண்ட நாட்கள் ஏமாற்ற முடியாது.

ஊழல் மன்னரே வருக!

தமிழக முதல்வர் திரு கருணாநிதி நெல்லை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்கையில் ஆலங்குளம் பகுதியில் நுழைந்தபோது பல இடங்களில், 'ஊழல் மன்னரே வருக!' 'ஊழல் சாம்ராஜ்யத்தின் ஏகபோக சக்கரவர்த்தியே வருக!' என்றெல்லாம் எழுதி வைக்கப்பட்ட வரவேற்பு வாசகங்கள் அவரை வரவேற்றனவாம். அவற்றைப் பார்த்து எரிச்சல் அடைந்ததுபோல் தோன்றிய முதல்வர் அவ்வூரில் பேசும் போது, ''ஊழல் மன்னரே வருக என்று வழியில் வரவேற்பு எழுதி வைத்திருக்கிறார்கள். நாங்கள் தான் ஊழல் பேர்வழிகள் என்றால் 'ஊழல் பேர்வழிகளே திரும்பிப் போங்கள்' என்று எழுதியிருக்க வேண்டும். அப்படி எழுதாததிலிருந்து 'இனி வரப் போகிறவர்கள்தான் ஊழல் மன்னர்கள்' என்று மக்களே நினைப்பதாகத் தெரிகிறது'' என்று சாமர்த்தியமாகச் சொல்லித் தப்பியிருக்கிறார்.

இப்போதெல்லாம் முதல்வரை அவருடைய சாதனைகளோ, மக்கள் நலனுக்கான(?) பணிகளோ காப்பாற்றுவதைவிட அவரிடம் உள்ள சொற்சாதுரியமும் சவடாலுமே காப்பது போல் தோன்றுகிறது.

பக்தி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

ஒரே பேரறிவுதான் இத்தனை பிரபஞ்சங்களாகவும், ஜீவராசிகளாகவும் தோன்றுகிறது. இந்தத் தோற்றத்தைப் போக்கடித்துவிட்டால் அந்தப் பேரறிவுதான் எஞ்சி நிற்கும். அந்த நிலையில் காரியம் எதுவுமே இல்லை. பிரபஞ்சம், ஜீவராசிகள் என்கிற தோற்றங்கள் இருக்கிற வரையில்தான் பலவிதமான காரியங்கள் ஏற்படுகின்றன. இவற்றைக் கடந்து, இவற்றுக்கு மூலமான பேரறிவை அடைந்துவிட்டால் முடிவில் அறிகிறவன், அறிவு, அறியப்படுகிற வஸ்து என்கிற பேதங்கள்கூட இல்லாமல் எல்லாம் ஒன்றாகி விடுகிறது. அதைத்தான் பிரம்ம சாட்சாத்காரம் என்பது. இதுதான் ஜீவாத்மாவின் மாறுபடாத, சத்தியமான நிலை.

ஆனால் இந்த சத்தியமான நிலையை நாம் தெரிந்து கொள்ளாமல், வெறும் தோற்றமான பிரபஞ்சத்தையும், ஜீவராசிகளையுமே மெய்யென நம்பி வாழ்கிறோம். இதற்குக் காரணம் மாயை. மாயாசக்தியால்தான் ஒரே பிரம்மம் இத்தனை வெவ்வேறு வஸ்துக்களைப் போல் தெரிகிறது. மாயப் பிரபஞ்சம் ஓர் அற்புதமான நியதியில் நடக்கிறது. பல விதமான இயற்கை விதிகள் ஒழுங்காக வகுக்கப்பட்டு, அதன் பிரகாரமே பிரபஞ்சம் நடக்கிறது. காரியமே இல்லாத பிரம்மம் மாயையால் பிரபஞ்சமாகத் தோன்றுகிற போது, சிருஷ்டி, பரிபாலனம், சம்ஹாரம் முதலிய காரியங்கள் எல்லாம் நடக்கின்றன. காரியம் இல்லாத நிலையில் எதை பிரம்மம் என்கிறோமோ, அதையே இந்தக் காரியங்களைச் செய்கிறபோது ஈசுவரன் என்கிறோம். ஈசுவரன், பகவான், கடவுள், தெய்வம், ஸ்வாமி என்று சொல்வதெல்லாம் இதையே.

எப்போது பார்த்தாலும் காரியம் செய்து கொண்டிருப்பதே நமக்கு இயல்பாகி விட்டது. உடம்பால் காரியம் செய்யாதபோதும், வாக்கால் பேசிக் காரியம் செய்யாதபோதும் கூட, நம் மனசு சதா எதையாவது நினைத்துக் கொண்டே இருக்கிறது. இதுவும் காரியம்தான். இந்தக் காரியம் நின்றால்தான், அதாவது மனசில் எண்ணமே தோன்றாமல் இருந்தால்தான், எந்தக் காரியமும் இல்லாத பிரம்ம நிலையை அடைய முடியும். ஆனால் இந்த மனசால் ஒரு க்ஷணம்கூட எதையும் நினைக்காமல் இருக்க முடியவில்லையே! இதை எப்படி நிறுத்தப் பழக்குவது?

இந்தப் பழக்கத்துக்கு வழிதான் பக்தி. காரியமில்லாத பிரம்மத்தை நாமும் காரியமில்லாமலிருக்கிற நிலையில்தான் அநுபவிக்க முடியும். அது முடியவில்லையா? அதே பிரம்மம் சகல பிரபஞ்சங்களையும் நடத்தி வைக்கிற—காரியத்தைச் செய்கிற—ஈசுவரனாக இருக்கிறதல்லவா? இந்த ஈசுவரனையே சதா சிந்தனை செய். காரியத்தை எல்லாம் அதற்கே திருப்பு. உடம்பால் நமஸ்காரம், பூஜை. வாக்கால் ஸ்தோத்திரம், மனசால் தியானம் என்று சகல காரியங்களையும் ஈசுவரனிடம் செலுத்து. அவற்றை ஈசுவரன் அங்கீகரித்து, உன்னை பிரம்மஞானத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பான். இப்படிப்பட்ட இடையறாத ஈசுவர சிந்தனைக்குத்தான் பக்தி என்று பெயர். இதில் அன்பு மிகவும் முக்கியம். அன்போடு அவனை நினைப்பதே பக்தி.

உலகத்திலுள்ள நல்லது — கெட்டது, அழகு — அவலட்சணம், இன்பம் — துன்பம் எல்லாமே பிரம்மத்திடமிருந்து வந்தவை தாம். ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாகி பிரம்மநிலை அடையும்போது நல்லது கெட்டது, அழகு கோரம், சந்தோஷம் துக்கம் என்கிற பேதமில்லை.

ஆனால் இப்போது நாம் இருக்கிற நிலையில் இவை எல்லாம் ஒன்றாகத் தோன்றவில்லை. இந்த நிலையில் ஈசுவரனை எல்லா அழகுகளுக்கும், எல்லா நன்மைகளுக்கும், எல்லா இன்பங்களுக்கும் உருவமாகப் பாவித்து அன்பு செலுத்த வேண்டும். குணமே இல்லாத பிரம்மத்தை நம்மால் நினைத்தே பார்க்க முடியாது. அந்த நிர்குணத்திலிருந்தே சகல குணங்களும் தோன்றியிருக்கின்றன. ஒரு நிறமும் இல்லாத சூரிய வெளிச்சம் கண்ணாடிப் 'பிரிஸத்'தில் பட்டு ஒளிச் சிதறலில் (Refraction) சகல வர்ணங்களையும் வாரிக் கொட்டுகிறதல்லவா? அப்படியே நிர்குணப் பிரம்மம் மாயை என்கிற கண்ணாடியில் பட்டு ஈசுவரனாகி சகல குணங்களையும் வாரிக் கொட்டுகிறது. நிர்குணத்தை நம்மால் நினைக்க முடியாது. ஆனால் குணங்களை நினைக்க முடியும். அனந்தகல்யாண குணங்களும் கொண்ட ஈசுவரன் ஒருத்தனை அன்போடு நினைக்க நினைக்க அந்தக் கல்யாண குணங்கள் நமக்கும் வரும்.

மனசு எதைத் தீவிரமாக, இடைவிடாமல் நினைத்தாலும் அதுவாகவே மாறுகிறது. இதை மனோதத்துவக்காரர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். தோஷங்கள் அற்ற கிருபா சமுத்திரனாகப் பகவானைத் தியானம் செய்து கொண்டே இருப்பதால் நம்முடைய தோஷங்கள் விலகி, நாம் அன்பு மயமாகிறோம். உண்மையான பக்தி வைத்துவிட்டால் அப்புறம் மனசு பாபத்தில் பிரவேசிக்கவே செய்யாது. உலகத்தில் பாப எண்ணங்கள் விலகுவதற்குப் பக்தியைவிட வேறு வழி இல்லை. ஆனால் பக்தி செய்வதற்கு இதுமட்டும் காரணம் இல்லை.

(அடுத்த இதழில்: பக்தி செய்வது எதற்காக?)

உங்கள் மகனின் கனவை நனவாக்குங்கள்



உங்கள் மகன் பெரியவனானதும் எந்தத் தொழில் செய்யப்போகிறான்? என்ஜினியரா? கட்டடக்கலைஞரா? டாக்டரா? வக்கீலா? எதுவானாலும் சரி அதற்கு ஏராளமாகப் பணம் தேவை. அவனது எதிர்காலத்திற்கென்று பணம் சேமித்து வருகிறீர்களா? யூகோ பாங்கில் சேமித்து வாருங்கள்: உங்கள் பணம் பெருகிக் கொண்டே போகும்.

யூகோ பாங்க்
வளம் பெற வழி
வகுத்தளிக்கின்றது

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை அலுவலகம் : கல்கத்தா

UCO.3/71



சிவகாமியின்
சபதம்
முதல் பாகம்
பரஞ்சோதி யாத்திரை
அமரர் கல்கி



முதல் அத்தியாயம்

பிரயாணிகள்

இளவேனிற் காலத்தில் ஒரு நாள் மாலை. மகேந்திர தடாகத்தின் கரை வழியாகச் சென்ற இராஜ பாட்டையில் பிரயாணிகள் இருவர் காஞ்சிமா நகரை நோக்கி நடந்து கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருவர் ஆறடி உயரத்துக்கு மேல் வளர்ந்திருந்த ஆஜானுபாகு; காவி வஸ்திரம் தரித்த பௌத்த சந்நியாசி. கடுமையான தவ விரத அநுஷ்டானங்களினாலோ, வேறு கடினமான காரியங்களில் ஈடுபட்டதனாலோ அந்தப் புத்த பிக்ஷுவின் தேகமானது வறண்டு கெட்டிப்பட்டுக் கடினமாகியிருந்தது. அவருடைய முகத் தோற்றமானது அன்பையோ, பக்தியையோ உண்டாக்குவதாயில்லை; ஒருவித அச்சத்தை ஊட்டுவதாயிருந்தது.

இன்னொரு பிரயாணி கட்டமைந்த தேகமும், களை பொருந்திய முகமும் உடைய பதினெட்டுப் பிராயத்து இளம் பிள்ளை.

பிரயாணிகள் இருவரும் வெகு தூரம் வழி நடந்து களைப்புற்றவர்களாகக் காணப்பட்டார்கள்.

''தலைநகரம் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?'' என்று வாலிபன் கேட்டான்.

''அதோ!'' என்று சந்நியாசி சுட்டிக் காட்டிய திக்கில், அடர்ந்த மரங்களுக்கு இடை இடையே மாட மாளிகைகளின் விமானங்கள் காணப்பட்டன. இளம் பிரயாணி சற்று நேரம் அந்தக் காட்சியை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். பின்னர், புத்த பிக்ஷுவைப்

பார்த்து, ''இங்கிருந்து ஒரு நாழிகை தூரம் இருக்குமா?'' என்று கேட்டான்.

''அவ்வளவுதான் இருக்கும்.''

''அப்படியானால் நான் சற்று உட்கார்ந்துவிட்டு வருகிறேன். அவசரமானால் தாங்கள் முன்னால் போகலாம்'' என்று சொல்லி வாலிபன் கையிலிருந்த மூட்டையையும், தடியையும் பாதை ஓரமாகக் கீழே வைத்துவிட்டு, ஏரியைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தான்.

சந்நியாசியும் அவன் அருகில் மேற்குத் திசையைப் பார்த்துக் கொண்டு அமர்ந்தார்.

மேல் வானத்தின் அடிப்புறத்தில், தங்க நிறமான ஞாயிறு, திருமாலின் சக்ராயுதத்தைப் போல் 'தகதக' வென்று சுழன்று கொண்டிருந்தது. அதன் செங்கிரணங்களினால் மேல் வானமெல்லாம் செக்கர் படர்ந்து, பயங்கரமான போரில் இரத்த வெள்ளம் ஓடிய யுத்த களத்தைப் போல் காட்சியளித்தது. ஆங்காங்கே காணப்பட்ட சிறு மேகக் கூட்டங்கள் தீப்பிடித்து எரிவது போல் தோன்றின.

சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்த திசையில் மகேந்திர தடாகத்தின் பளிங்கு போலத் தெளிந்த நீர், உருகிய பொன்னைப் போல் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

ஆனால், மேற்குத் திசையிலிருந்து சற்றுத் திரும்பி அந்த விசாலமான ஏரியின் வட கரையை நோக்கினால் முற்றும் மாறான வேறொரு காட்சி காணப்பட்டது. அந்தக் கரையில் ஏரிக்குக் காவலாக நின்ற சிறு குன்றுகளின் மாலை நேரத்து நெடிய நிழல் ஏரியின் மேல் விஸ்தாரமாகப் படர்ந்திருந்தபடியால் ஏரி நீர் அங்கே கருநீல நிறம் பெற்று விளங்கிற்று.

நிழல் படர்ந்த ஏரிக்கரை ஓரமாகச் சில இடங்களில் கண்ணைப் பறிக்கும் வெள்ளை நிறம் திட்டுத் திட்டாகத் திகழ்ந்தது. சிறிது கூர்ந்து கவனித்தால் அந்த இடங்களில் வெண் நாரைகள் ஒற்றைக் காலில் நின்று தவம் புரிகின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். சில சமயம் திடீரென்று ஒரு வெண் நாரைக் கூட்டமானது ஜலக் கரையிலிருந்து கிளம்பி ஆகாசத்தில் மிதக்கத் தொடங்கும். ஆகா! அந்தக் காட்சியின் அழகை என்னவென்று சொல்வது? கீழே கருநிறத் தண்ணீர் பரப்பு; மேலே கருநீல வானம்; பின்னால் கரும் பசுமை நிறக் குன்றுகள். இவற்றின் மத்தியில் அந்தத் தாவள்யமான நாரைக் கூட்டம் வான வெளியில் மிதந்து செல்வதுபோல் நெருக்கமாய்ப் பறந்து செல்லும் காட்சி யாருக்குமே மனக் கிளர்ச்சியை உண்டாக்கும். இறைவனுடைய லீலா விபூதிகளில் சிந்தை செலுத்தியவர்களோ மெய்மறந்து பரவசமாகிவிடுவார்கள்.

இவற்றை யெல்லாம் சற்று நேரம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த வாலிபன், தனக்குத் தானே பேசிக் கொள்வது போல், ''இந்தப் பிரமாண்டமான ஏரியை மகேந்திர தடாகம் என்று சொல்வது பொருத்தமில்லை; மகேந்திர சமுத்திரம் என்றுதான் இதைச் சொல்ல வேண்டும்!'' என்றான்.

சந்நியாசி ஏரியை நோக்கிய வண்ணம், ''இந்த மகேந்திர தடாகத்தில் இப்போது தண்ணீர் குறைந்துபோயிருக்கிறது. ஐப்பசி — கார்த்திகையில் மழை பெய்து ஏரி நிரம்பியிருக்கும்போது பார்த்தாயானால் பிரமித்துப் போவாய்! அப்போது நிஜ சமுத்திரம் போலவே இருக்கும்!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார்.

''புறப்பட்டுவிட்டீர்களா, சுவாமி?'' என்றான் வாலிபன்.

''ஆமாம் பரஞ்சோதி! என்னோடு வருவதற்குத்தான் உனக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறதே!'' என்று சந்நியாசி கூறிவிட்டு நடக்கத் தொடங்கினார்.

பரஞ்சோதி என்ற அவ் வாலிபனும் மூட்டையையும் தடியையும் எடுத்துக் கொண்டு அவரைத் தொடர்ந்து நடக்கலானான்.





சாலையில் போவோர் வருவோர் கூட்டம் அதிகமா யிருந்தது. பிரயாணிகள் ஏறிய வண்டிகளும், நெல்லும் வைக்கோலும் ஏற்றிய வண்டிகளும் சாரி சாரியாய்ப் போய்க் கொண்டிருந்தன.

சாலைக்கு அப்புறத்தில் முதிர்ந்த கதிர்களையுடைய செந்நெல் வயல்கள் பரந்திருந்தன. கதிர்களின் பாரத்தினால் பயிர்கள் தலைசாய்ந்து விழுந்து கிடந்தன. ஆங்காங்கே சில வயல்களில் குடியானவர்கள் அறுவடையான கற்றைகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். வயல்களிலிருந்து புது நெல், புது வைக்கோலின் நறுமணம் 'கம்'மென்று வந்துகொண்டிருந்தது.

சற்றுத் தூரம் போனதும் ஓர் அழகிய கிராமம் தென்பட்டது.

அந்தக் கிராமத்தைத் தாண்டியதும் புது நெல் மணத்துக்குப் பதிலாக மல்லிகை, முல்லை மலர்களின் நறுமணம் சூழ்ந்தது. அந்த மணத்தை மூக்கினால் நுகர்வது மட்டுமின்றித் தேக முழுவதனாலும் ஸ்பரிசித்து அநுபவிக்கலாம் என்று தோன்றியது.

''ஆகா!'' என்றான் வாலிபன்.

அவனுக்கு எதிரே கண்ணுக்கெட்டிய தூரம் நந்தவனங்கள். மல்லிகை முல்லைப் புதர்களின் மீது வானத்து நட்சத்திரங்கள் வந்து படிந்தது போல் குண்டு மல்லிகைகளும் முத்து முல்லைகளும் 'களீ'ரென்று பூத்துச் சிரித்துக் கொண்டிருந்தன.

இந்த வெண்மலர்ப் பரப்புக்கு இடையிடையே தங்க நிறச் செவ்வந்திப் பூக்களின் காடும் காணப்பட்டது.

''இவ்வளவு பூவையும் என்ன தான் செய்வார்கள்?'' என்று வாலிபன் கேட்டான்.

''இவற்றில் பாதி கோயில் தெய்வங்களுக்கு அர்ப்பணமாகும். மற்றப் பாதி காஞ்சி நகரத்துப் பெண் தெய்வங்களின் கூந்தலை அலங்கரிக்கும்.... அதோ!'' என்று சட்டென நின்றார் சந்நியாசி.

சரசரவென்று சாலையின் குறுக்கே ஒரு பாம்பு ஊர்ந்து சென்று நந்தவனத்துக்குள் புகுந்து மறைந்தது.

''இந்த மல்லிகை மணத்துக்குப் பாம்புகள் எங்கே யென்று காத்திருக்கும்!'' என்றார் சந்நியாசி.

பாம்பு மறைந்ததும் இருவரும் மேலே சென்றார்கள். சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது.

பரஞ்சோதி 'களுக்' கென்று சிரித்தான்.

''எதை நினைத்துச் சிரிக்கிறாய்?'' என்றார் சந்நியாசி.



பரஞ்சோதி சற்று நேரம் பேசாமல் இருந்துவிட்டு, ''இல்லை, அடிகளே! மத்தியானம் அந்த சர்ப்பத்தைக் கொன்று என்னைக் காப்பாற்றினீர்களே? நீங்கள் புத்த பிக்ஷுவாயிற்றே? ஜீவ ஹத்தி செய்யலாமா என்று நினைத்துச் சிரித்தேன்!'' என்றான்.

''தன்னைக் கொல்ல வந்த பகைவையும் கொல்லலாம் அல்லவா?'' என்றார் புத்த பிக்ஷு.

''ஆனால், பாம்பு தங்களைக் கொல்ல வரவில்லையே? என்னைத்தானே கொல்ல வந்தது?'' என்றான் பரஞ்சோதி ஏளனக் குரலில்.

''என் சிஷ்யனை நான் காப்பாற்ற வேண்டாமா?'' என்றார் பிக்ஷு.

''சிஷ்யனா? யாரைச் சொன்னீர்கள்?''

''ஆமாம்; நீ என் உயிரை ஒரு சமயம் காப்பாற்றினாய். அதற்குப் பிரதியாக.''

''தங்கள் உயிரை நான் காப்பாற்றினேனா? எப்போது?''

''முந்நூறு வருஷங்களுக்கு முன்னால்..''



''என்ன?''

''முன்னொரு ஜன்மத்தில்.''

''ஓஹோ! தாங்கள் முக்காலமும் உணர்ந்த முனிவர் என்பது தெரியாமல் கேட்டு விட்டேன்; க்ஷமிக்க வேண்டும்.''

சந்நியாசி மௌனமாக நடந்தார்.

மறுபடியும் பரஞ்சோதி, ''சுவாமி! இனிமேல் வரப்போகிறது கூடத் தங்கள் ஞான திருஷ்டியில் தெரியுமல்லவா?'' என்று கேட்டான்.

''வரப்போகிறது ஒன்றைச் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்.''

''இந்த நாட்டுக்குப் பெரிய யுத்தம் வரப் போகிறது!''

''பெரிய யுத்தமா?''

''ஆமாம்; மகா பயங்கரமான யுத்தம். பாலாறு இரத்த ஆறாக ஓடப் போகிறது. மகேந்திர தடாகம் இரத்த தடாகம் ஆகப் போகிறது.''

''ஐயோ! பயமாக இருக்கிறதே! போதும் அடிகளே!''

சற்றுப் பொறுத்து மறுபடியும் பரஞ்சோதி, ''நாட்டின் சமாசாரம் எனக்கெதற்கு சுவாமி? என் விஷயமாக ஏதாவது தெரிந்தால் சொல்லுங்கள்!'' என்றான்.

''இன்று ராத்திரி உனக்கு ஒரு கஷ்டம் ஏற்படப் போகிறது.''

''சிவா! நல்ல வாக்காக ஏதாவது சொல்லக் கூடாதா?''

''புத்த பகவானுடைய அருளால் அந்தக் கஷ்டம் நீங்கும்.''

''நான் சைவன் ஆயிற்றே! புத்தர் எனக்கு அருள் செய்வாரா?''

''புத்தருடைய கருணை எல்லையற்றது.''

''அதோ வருவது யார்?'' என்று கேட்டான் பரஞ்சோதி.

மங்கிய மாலை வெளிச்சத்தில் ஓர் அபூர்வ உருவம் அவர்களுக்கு எதிரே வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

''பார்த்தாலே தெரியவில்லையா? திகம்பர சமண முனிவர் வருகிறார்!'' என்றார் புத்த பிக்ஷு.

''சமண முனிவர்கள் இன்னும் இங்கே இருக்கிறார்களா?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

''முக்கால்வாசிப் பேர் பாண்டிய நாட்டுக்குப் போய்விட்டார்கள். மற்றவர்களும் சீக்கிரம் போய்விடுவார்கள்.''

சமண முனிவர் அருகில் வந்தார். அவர் புத்த பிக்ஷுவைப் போல் உயர்ந்து வளர்ந்தவர் அல்ல. கட்டையாயும் குட்டையாயும் இருந்தார். கௌபீனம் ஒன்றுதான் அவருடைய ஆடை; ஒரு கையில் உறி கட்டித் தூக்கிய கமண்டலம் வைத்திருந்தார். இன்னொரு கையில் மயில் தோகை விசிறி; கக்கத்தில் சுருட்டிய சிறு பாய்.

அவர் அருகில் வந்ததும் புத்த பிக்ஷு ''புத்தம் சரணம் கச்சாமி!'' என்றார் சமண முனிவர், ''அருகர் தாள் போற்றி!'' என்றார்.

''இருட்டுகிற சமயத்தில் அடிகள் எங்கே பிரயாணமோ?'' என்று புத்த சந்நியாசி கேட்டார்.

அதற்குச் சமணர், ''ஆகா! இந்த ருத்ர பூமியில் எனக்கு என்ன வேலை? தொண்டை மண்டலம்தான் சடையன் கூத்தாடும் சுடுகாடாகி விட்டதே, தெரியாதா? நான் பாண்டிய நாட்டுக்குப் போகிறேன்'' என்றார்.

''இன்றைக்கு முக்கியமாக ஏதாவது விசேஷம் உண்டோ?'' என்று புத்த பிக்ஷு கேட்க, சமண முனிவர் ''உண்டு; விசேஷம் உண்டு. கோட்டைக் கதவுகளை அடைக்கப் போகிறார்

களாம்!'' என்று சொல்லிக் கொண்டே மேலே விரைந்து சென்றார்.

''ஒரு காலத்தில் இந்தப் பல்லவ ராஜ்யத்தில் சமணர்கள் வைத்ததே சட்டமாயிருந்தது. அவர்கள் கிழித்த கோடு தாண்டாமல் மகேந்திர சக்கரவர்த்தி நடத்துவந்தார். இப்போது...'' என்று கூறிப் புத்த பிக்ஷு நிறுத்தினார்.

''இப்போது என்ன?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

''இப்போது சைவ வைஷ்ணவர்களின் பாடு இந்த நாட்டில் கொண்டாட்டமாயிருக்கிறது.''

''ஓஹோ!'' என்றான் பரஞ்சோதி. பிறகு, ''ஏதோ கோட்டைக் கதவு சாத்துவதைப் பற்றிச் சமண முனிவர் சொன்னீரே, அது என்ன?'' என்று கேட்டான்.

''அதோ பார்!'' என்றார் சந்நியாசி.

சாலையில் அந்தச் சமயத்தில் ஒரு முடுக்குத் திரும்பினார்கள். எதிரே காஞ்சி மாநகரின் தெற்குக் கோட்டை வாசல் தெரிந்தது. கோட்டை வாசலின் பிரும்மாண்டமான கதவுகள் மூடியிருந்தன.

இரண்டாம் அத்தியாயம்

தலைநகரம்

கோட்டை மதிலைச் சேர்ந்தாற் போல் பெரிய அகழி இருந்தது. அதன் அகலம் சுமார் நூறு அடி இருக்கும். குனிந்து பார்த்தால் 'கிடுகிடு' பள்ளமாயிருந்தது. அடியில் இருண்ட நிறமுள்ள ஜலம் காணப்பட்டது.

நம் பிரயாணிகள் வந்த இராஜ பாதையானது அகழியின் அருகில் வந்ததும் இரண்டாகப் பிரிந்து ஒன்று வலப்புறமாகவும், ஒன்று இடப்புறமாகவும் கோட்டை மதிலைச் சுற்றி அகழிக் கரையோடு சென்றது. சாலையோடு வந்த வண்டிகளும், மனிதர்களும் இடப்புறமாகவோ, வலப்புறமாகவோ மதிலைச் சுற்றிக்கொண்டு போனார்கள்.

அகழியின் மேல் ஒரு குறுகலான மரப் பாலம் காணப்பட்டது; அது கோட்டை வாசல்வரை சென்றது.

புத்த பிக்ஷு பரஞ்சோதிக்குச் சைகை காட்டிவிட்டு அந்தப் பாலத்தின் மேல் நடந்து சென்றார். பரஞ்சோதியும் அவரைப் பின்தொடர்ந்தான்.

''இதென்ன, இவ்வளவு சின்னப் பாலமாக இருக்கிறதே! கோட்டைக்குள் வண்டிகளும் வாகனங்களும் எப்படிப் போகும்?'' என்று கேட்டான் பரஞ்சோதி.

''இந்த வாசல் வழியாகப் போக முடியாது. வடக்கு வாசலிலும் கிழக்கு வாசலிலும் பெரிய பாலங்கள் இருக்கின்றன. அவற்றில் யானைகள் கூடப் போகலாம்!'' என்றார் சந்நியாசி.

பாலத்தைத் தாண்டிக் கோட்டை வாசலருகில் அவர்கள் வந்தார்கள். அங்கே ஒரு சேமக்கலம் கட்டித் தொங்கிற்று. பக்கத்தில் ஒரு கட்டையும் கிடந்தது. கட்டையை எடுத்துச் சேமக்கலத்தில் ஒரு தட்டுத் தட்டினார் சந்நியாசி.

மேலேயிருந்து, ''யார் அங்கே?'' என்று குரல் கேட்டது. கோட்டை வாசலின் மேல் மட்டத்திலிருந்து ஒருவன் எட்டிப் பார்த்தான். இருட்டி விட்டபடியால் அவன் முகம் தெரியவில்லை.

''மருதப்பா! நான்தான்!'' என்று சாமியார் சொல்லவும், மேலே எட்டிப் பார்த்தவன், ''தாங்களா? இதோ வந்துவிட்டேன், அடிகளே!'' என்று கூறிவிட்டு மறைந்தான்.

சற்று நேரத்துக்கெல்லாம் கோட்டைக் கதவின் தாள் திறக்கும் சத்தம் கேட்டது. கதவில் ஒரு மனிதர் உள்ளே புகக் கூடிய அளவு துவாரம் தோன்றியது.

புத்த சந்நியாசி அந்தத் துவாரத்துக்குள் புகுந்து சென்று பரஞ்சோதியையும் கையைப் பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டார்.

மறுபடியும் கதவின் துவாரம் அடைக்கப் பட்டது.

பரஞ்சோதி உள்ளே போனதும் நகரின் பக்கம் பார்வையைச் செலுத்தினான். எங்கே பார்த்தாலும் பிரகாசமான தீபங்களால் நகரம் ஒளி மயமாகக் காணப்பட்டது. ஆயிரக் கணக்கான மனிதர்கள் பேசுவதிலிருந்து உண்டாகும் 'கல்' என்ற ஓசை எழுந்தது.

பரஞ்சோதி இதுவரையில் அவ்வளவு பெரிய நகரத்தைப் பார்த்தது கிடையாது. எனவே, பார்த்தது பார்த்தபடி பிரமித்துப் போய் நின்றான்.

புத்த சந்நியாசி கதவைத் திறந்த காவலனைப் பார்த்து, ''மருதப்பா! நகரில் ஏன் கலகலப்புக் குறைவாயிருக்

றது? கோட்டைக் கதவு இதற்குள் ஏன் சாத்தப்பட்டது? ஏதாவது விசேஷம் உண்டா?'' என்று கேட்டார்.

''நன்ருகத் தெரியவில்லை, சுவாமி! இன்று காலையிலிருந்து நகரம் ஒரே கோலாகலமாய்த்தான் இருந்தது...'' என்பதற்குள் பிக்ஷு குறுக்கிட்டார்.


''கோலாகலத்துக்குக் காரணம்?'' என்று கேட்டார்.

''தங்களுக்குத் தெரியாதா? சிவகாமி அம்மையின் நடனம் இன்றைக்குச் சக்கரவர்த்தியின் சபையில் அரங்கேறுவதாக இருந்தது. அதனுல்தான் ஜனங்களுக்கு அவ்வளவு கொண்டாட்டம்!''

''எந்தச் சிவகாமி அம்மை?'' என்று சந்நியாசி கேட்டார்.

''வேறு யார்? ஆயனரின் மகள் சிவகாமிதான்...!''

இதுவரை பேச்சைக் கவனியாதிருந்த பரஞ்சோதி சட்டென்று திரும்பி,



''யார், ஆயனச் சிற்பியாரா?'' என்று கேட்டான்.

''ஆமாம்!'' என்று காவலன் கூறிப் பரஞ்சோதியை உற்று நோக்கிவிட்டு, ''அடிகளே! இந்தப் பிள்ளை யார்?'' என்று பிக்ஷுவைப் பார்த்துக் கேட்டான்.

''இவன் என் சிஷ்யன். நீ மேலே சொல்லு. சிவகாமி அம்மையின் நடனம் அரங்கேறுவதாக இருந்தது. பிறகு?''

''சபை கூடி அரங்கேற்றம் நடந்து கொண்டிருந்ததாம். பாதி நடந்து கொண்டிருந்தபோது, யாரோ தூதுவர்கள் வெகு அவசரச் செய்தியுடன் வந்திருப்பதாகத் தெரிந்ததாம். சக்கரவர்த்தி சபையிலிருந்து சட்டென்று எழுந்து போனுராம். அப்புறம் திரும்பிச் சபைக்கு வரவேயில்லையாம். குமார சக்கரவர்த்தியும், மந்திரி மண்டலத்தாரும் கூட எழுந்து போய் விட்டார்களாம். நாட்டியம் நடுவில் நின்றுபோய் விட்டதாம். அஸ்தமித்ததும் கோட்டைக் கதவுகளை அடைக்கும்படி எனக்குக் கட்டளை வந்தது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். என்னவா யிருக்கலாம், சுவாமி? யுத்தம் ஏதாவது வரக் கூடுமா? ஆனுல் காஞ்சிச் சக்கரவர்த்தியுடன் யுத்தம் செய்யக் கூடிய அரசன் இந்தப் பூமண்டலத்திலேயே இப்போது கிடையாதே?'' என்ருன் மருதப்பன்.

''அப்படிச் சொல்லக் கூடாது, மருதப்பா! இன்றைக்கு மணி மகுடம் தரித்து மன்னாதி மன்னர்களா யிருப்பவர்கள் நாளைக்கு... ஆனுல் அதைப்பற்றியெல்லாம் நாம் ஏன் பேச வேண்டும்? உன் மகன் சௌக்கியமா?'' என்று சந்நியாசி கேட்டார்.

''தங்கள் கிருபை, சுவாமி! சௌக்கியமா யிருக்கிருன்!'' என்ருன் மருதப்பன்.

மருதப்பனுடைய மகனை ஒரு சமயம் பாம்பு தீண்டி அவன் உயிர் பிழைப்பதே துர்லபம் என்று தோன்றியது. அச்சமயம் இந்தப் புத்த பிக்ஷு மணி மந்திர ஔஷதங்களினுல் அந்தப் பிள்ளையைக் குணப்படுத்தினுர். அவரிடம் மருதப்பன் பக்தி கொண்டதற்கு இதுதான் காரணம்.

''என்னுல் ஒன்றுமில்லை, மருதப்பா! எல்லாம் புத்த பகவானின் கருணை. நான் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு மேலே பிக்ஷு நடந்தார். பரஞ்சோதியும் அவருடன் சென்ருன்.

''அடிகளே! கோட்டைக் கதவைச் சாத்தும்படி கட்டளை பிறந்திருக்கும் போது உங்களை மட்டும் காவலன் எப்படி விட்டான்?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

''எல்லாம் இந்தக் காவித் துணியின் மகிமைதான்!'' என்ருர் புத்த பிக்ஷு.

''ஓஹோ! பல்லவ சக்கரவர்த்தியின் இராஜ்யத்தில் காவித் துணிக்கு அவ்வளவு கௌரவமா? ஆனுல் சமணர்கள் மட்டும் ஏன்....?''

''சமணர்கள் ராஜரீக விஷயங்களில் தலையிட்டார்கள். நாங்கள் அந்த வழிக்கே போவதில்லை. இராஜ வம்சத்தினரின் முகத்தைக்கூடப் பார்ப்பதில்லை யென்று வைத்துக் கொண்டிருக்கிருேம். போகட்டும்; உன்னுடைய உத்தேசம் என்ன? என்னுடன் பௌத்த விஹாரத்துக்கு வரப்போகிருயா?''

''இல்லை, சுவாமி! நாவுக்கரசர் மடத்துக்கே போய்விடுகிறேன். வேறு எங்கேயும் தங்க வேண்டாம் என்று என் தாயாரின் கட்டளை.''




"பழைமையான கரகரப்-
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்...!"

கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களை-யும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழைமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனமலைச் சிதைக்கக்கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும் போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி, வாய்நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி வாய் நாற்றத்தை உடனே நிறுத்தி, பற்சிதைவையும் எதிர்க்கிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

நவீன
பல் பராமரிப்பு முறைகளே ***சிக்கனமாக***
இருக்கும்போது பழைமையான
பற்பொடிகளை ஏன் உபயோகிக்க வேண்டும்!

உங்கள் குடும்பத்திற்கு
எகானமி சைஸ் கால்கேட்
பற்பொடியை இன்றே வாங்குங்கள்!
ஒரு டப்பா மாதக்கணக்கில் வரும்!



TP. G. 19 TM

''அப்படியானால் இந்த இடத்தில் நாம் பிரிய வேண்டியதுதான். போய் வருகிறாயா, தம்பி?''

''சுவாமி! நாவுக்கரசர் மடம் எங்கே இருக்கிறது? எப்படிப் போக வேண்டும்?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

''ஏகாம்பரேசுவரர் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கிறது. அதோ பார் கோயில் விமானத்தை!''

பரஞ்சோதி பார்த்தான். வெகு தூரத்துக்கு வெகு தூரம் பரவியிருந்த அந்த விசாலமான நகரில் எங்கே பார்த்தாலும் விமானங்கள் தெரிந்தன.

இந்த வரலாறு நிகழ்ந்த காலத்தில்—அதாவது, ஏறக்குறைய ஆயிரத்து முந்




நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னர்—தமிழகத்துக் கோயில்களின் முன்வாசல் கோபுரங்கள் இப்போது இருப்பது போல் உயரமாக அமைந்திருக்கவில்லை. கோயில் கர்ப்பக்கிருஹத்துக்கு மேலே தான் விமானங்கள் அமைப்பது வழக்கம். இவையும் அவ்வளவு உயரமாக இருப்பதில்லை. மேலும், சிவன் கோயில் விமானங்கள், சமணப் பள்ளிகளின் விமானங்கள், அரண்மனை விமானங்கள் எல்லாம் ஏறக் குறைய ஒரே மாதிரியாயிருக்கும்.

''எங்கே பார்த்தாலும் விமான மயமாகக் காணப்படுகிறதே! நீங்கள் எதைச் சொல்லுகிறீர்கள்?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

''இங்கிருந்து அடையாளம் சொல்லுவது கஷ்டம். இந்த வீதியோடு நேரே போ! ஏகம்பர் கோயிலுக்கு வழி அங்கங்கே விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம். கோயில் சந்நிதியில் வாகீசர் மடம் இருக்கிறது. ஜாக்கிரதை, தம்பி! காலம் விபரீதமாகிக் கொண்டு வருகிறது!'' என்று சொல்லிக் கொண்டே புத்த பிக்ஷு அங்கிருந்து பிரிந்து வேறொரு வீதி வழியாகச் சென்றார்.


வாலிபப் பிரயாணி நேரே பிக்ஷு காட்டிய திக்கை நோக்கிச் சென்றான். அக்காலத்தில் தென் தேசத்திலேயே மிகவும் பிரசித்திபெற்று விளங்கியது காஞ்சிமா நகரம். அந்நகரின் வீதி ஒவ்வொன்றும் தேரோடும் வீதியைப் போல் விசாலமாக அமைந்திருந்தது. வீடுகள் எல்லாம் மாளிகைகளாகவே இருந்தன. ஆங்காங்கே கல்லாலான தூண்களின் மேல் விசாலமான அகல்களில் தூங்கா விளக்குகள் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. வீதிகளில் 'ஜே ஜே' என்று போவோரும் வருவோருமாய் ஏகக் கூட்டமாயிருந்தது. கடைத் தெருக்களின் காட்சியையோ சொல்ல வேண்டாம். காசி முதல் கன்னியாகுமரி வரையில் பரத கண்டத்தில் விளையும் பொருள்களெல்லாம் அந்தக் கடை வீதிகளில் கிடைக்கும். புஷ்பக் கடைகளாக ஒரு பக்கம்; பழக் கடைகளாக ஒரு பக்கம்; பட்சணக் கடைகளாக ஒரு பக்கம்; தானியக் கடைகள் ஒரு பக்கம்; முத்து — இரத்தின வியாபாரிகளின் கடைகள் இன்னொரு பக்கம் — இப்படிக் கடை வீதியானது எல்லையில்லாமல் வளர்ந்து கொண்டே போயிற்று.

பரஞ்சோதி அளவில்லா வியப்புடன் மேற்கூறிய வீதிக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு போனான். ஆங்காங்கே ஜனங்கள் கூட்டமாய் நின்ற இடங்களில் எல்லாம் சிவகாமி அம்மையின் நடன அரங்கேற்றம் நடுவில் நின்று போனதைப் பற்றியும், கோட்டைக் கதவுகளைச் சாத்தும்படி கட்டளை பிறந்திருப்பதைப் பற்றியுமே பேசிக் கொண்டிருந்ததை அவன் கேட்டுக் கொண்டு நடந்தான். சற்று நேரத்துக்கொரு தடவை அவன் எதிரே வந்தவர்களிடம், ''ஏகாம்பரேசுவரர் கோயில் எது?'' என்று கேட்டான். ''அதோ!'' என்று அவர்களும் சுட்டிக் காட்டிவிட்டுப் போனார்கள். ஆனாலும், ஏகாம்பரேசுவரர் கோயிலை அவன் அடைந்த பாடில்லை. புதிது புதிதாக ஒரு பெரிய நகரத்தைப் பார்க்கும் அதிசயத்தில்



NSFC (என்எஸ்எ:ப்ஸி) இப்போது உங்களுக்குத் தயாரித்து வழங்குகிறது நிர்கார்ட். நிர்கார்ட் இந்தியாவின் முதல் நைலான் டயர் கார்ட்: அது மிக்க வலிமையுள்ளது. நீடித்து உழைக்கக் கூடியது.

இதே நைலான் டயர் கார்ட்தான் கன வாகன டயர் உற்பத்தி பாதுகாப்பில் பெரும் முக்கிய பங்கு வகிக்கிறது. இது உட்புறத்திலே கனமான சட்டம் போன்ற வலுவைத் தருகிறது.



nircord®

இந்தியாவின் முதல் நைலான் டயர் கார்ட்

நிர்லான் ஸிந்தெடிக் :பைபர்ஸ் & கெமிகல்ஸ் லிமிடெட்

115, மகாத்மா காந்தி ரோடு, பம்பாய்-1

® ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்.

Interpub/NIR-C-26A/71 Tm


ஒப்பற்ற விம் பளபளப்பு
உங்களுக்கு இப்போது
55 பைசா பேக்கெட்டிலே
நீங்கள் அறிந்த விம். பிசுக்கோ, கீறலோ, கசடோ எதையுமே அணுவளவும் படிய விடாத அதே நுரைவளம், அதே அபார சக்தி. வந்துவிட்டது இன்று கையகலப் பேக்கெட்டிலே. துலக்கிப் பாருங்கள் எவர்ஸில்வர் பாத்திரங்களை— ஒரே ஒரு பேக்கெட் விம், நூற்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களைப் பளிச்சிட வைக்கும் ஒப்பற்ற ஒளிமயமாக— இத்தனைக்கும் 55 பைசாதான்.
Vim
with super foaming action
Cleans shining bright
மாசில்லாத பளபளப்பை வீசிட வைப்பது விம்
தேர்ந்தெடுத்த ஒரு சில நகரங்களில் மட்டுமே கிட்டும்.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.
லின்டாஸ்– V. 408–140 TM

மூழ்கியிருந்தபடியால் பரஞ்சோதியும் கோயிலைச் சீக்கிரமாகக் கண்டுபிடிப்பதில் அவ்வளவு கவலை உள்ளவனாயில்லை.

இப்படி அவன் வீதி வலம் வந்து கொண்டிருக்கையில் திடீரென்று ஓரிடத்தில் ஏகக் கூச்சலும் குழப்பமும் உண்டாவதைப் பார்த்தான். ஜனங்கள் நாற்புறமும் சிதறி ஓடினார்கள். ''கோயில் யானைக்கு மதம் பிடித்துவிட்டது! ஓடுங்கள்! ஓடுங்கள்!'' என்ற கூக்குரலோடு சேர்ந்து, குழந்தைகள் வீறிடும் சத்தம், ஸ்திரீகள் அலறும் சத்தம், குதிரைகள் கனைக்கும் சத்தம், வீட்டுக் கதவுகளைத் 'தடால் தடால்' என்று சாத்தும் சத்தம், மாடுகள் 'அம்மா' என்று கத்தும் சத்தம், கட்டைவண்டிகள் 'கடகட'வென்று உருண்டோடும் சத்தம் — இவ்வளவும் சேர்ந்து சொல்ல முடியாத அல்லோலகல்லோலமாகி விட்டது.

பரஞ்சோதி ஒரு கணம் திகைத்து நின்றான். தானும் ஓட வேண்டுமா, எந்தப் பக்கம் ஓடுவது என்று அவன் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தபோதே அவனுக்கெதிரே நடந்த சம்பவங்களை அவனுடைய கண்கள் கவனித்தன. தெருவில் அவனுக்கு முன்னால் சற்றுத் தூரத்தில் ஒரு பல்லக்கு சென்றுகொண்டிருந்தது. அதில் சௌந்தர்ய தேவதை என்று சொல்லக்கூடிய ஓர் இளம் பெண்ணும் அவளுடைய தந்தையெனத் தோன்றிய பெரியவர் ஒருவரும் இருந்தார்கள். பல்லக்கைத் தூக்கிச் சென்றவர்கள் அவர்களுக்குப் பின்னால் எழுந்த கூச்சலையும் கோலாகலத்தையும் கேட்டுவிட்டுப் பல்லக்கைக் கீழே வைத்துவிட்டு நாற்புறமும் சிதறி ஓடினார்கள்.

அதே சமயத்தில் அவனுக்குப் பின்னால் வெகு சமீபத்தில் மதங்கொண்ட யானை ஒன்றும் பூமி அதிர ஓடி வந்தது.

இதையெல்லாம் கவனித்த பரஞ்சோதி ஒரு கணம் தயங்கி நின்றான். அடுத்த கணத்தில் ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய்ச் சட்டென்று கையிலிருந்த மூட்டையைக் கீழே வைத்து அவசரமாக அவிழ்த்தான். அதற்குள்ளிருந்த வேல் முனையை எடுத்துத் தன் கையில் வைத்திருந்த தடியின் முனையில் செருகிப் பொருத்தினான். பொருத்திய வேலை அவன் வலது கையில் தூக்கிப் பிடித்ததற்கும், மதங்கொண்ட யானை அவன் நின்ற இடத்துக்கு அருகே வருவதற்கும் சரியாயிருந்தது.

அவ்வளவுதான்! பரஞ்சோதி தன் முழு பலத்தையும் கொண்டு வேலை வீசினான். அது யானையின் இடது கண்ணுக்கருகில் பாய்ந்தது. யானையின் தடித்த தோலைப் பொத்துக்கொண்டு உள்ளேயே சென்றுவிட்டது. யானை பயங்கரமாக ஒரு முறை பிளிறிற்று. துதிக்கையால் வேலைப் பிடுங்கிக் காலின் கீழே போட்டு மிதித்தது. பிறகு வேலை எறிந்த வாலிபன் நின்ற பக்கம் திரும்பிற்று.

மதங்கொண்ட யானையின் மீது வேலை எறிந்தால் அதனுடைய விளைவு என்னவாகும் என்பதை அந்த இளம் பிரயாணி நன்கு உணர்ந்திருந்தான். எனவே, யானை தன் பக்கம் திரும்பக் கண்டதும், பல்லக்கு இருந்த திசைக்கு எதிர்த் திசையில் வேகமாக ஓடத்



தொடங்கினான். யானை தன்னுடைய பிரும்மாண்டமான தேகத்தை முழுதும் திருப்புவதற்குள்ளே அவன் வெகுதூரம் ஓடிவிட்டான். ஓடியவண்ணமே திரும்பிப் பார்த்தபோது, யானை வீறிட்டுக் கொண்டு தன்னை நோக்கி விரைந்து வருவதைக் கண்டான். உடனே அங்கே காணப்பட்ட ஒரு சந்தில் திரும்பி ஓடத் தொடங்கினான். சற்று நேரம் திரும்பிப் பார்க்காமல் ஓடிய பிறகு மறுபடியும் ஒரு விசாலமான பெரிய வீதியில் தான் வந்திருப்பதைக் கண்டான். தனக்கு எதிரே ஐந்தாறு யானைகள் மாவுத்தர்களால் ஏவப்பட்டு விரைவாக வந்து கொண்டிருப்பதைப் பார்த்துத் தெருவின் ஓரத்தில் ஒதுங்கினான். மத யானையைக் கட்டுக்கு உட்படுத்தி அழைத்துச் செல்வதற்காகவே இந்த யானைகள் போகின்றன என்பதை



ணர்ந்ததும் ஓடுவதை நிறுத்தி மெதுவாக நடக்கலானான்.

பரஞ்சோதிக்கு அப்போதுதான் தன் தேக நிலை பற்றிய நினைவு வந்தது. அவனுடைய நெஞ்சு 'பட பட'வென்று அடித்துக் கொண்டிருந்தது. உடம்பெல்லாம் வியர்வையினால் சொட்ட நனைந்து போயிருந்தது.

ஏற்கனவே நாளெல்லாம் வழி நடந்ததனால் பரஞ்சோதி களைத்துப் போயிருந்தான். இப்போது அதி வேகமாக ஓடி வந்ததனால் அவனுடைய களைப்பு மிகுதியாயிருந்தது. கால்கள் தளர்ந்து தடுமாறின. உள்ளத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியினாலும், பரபரப்பினாலும் தேகம் நடுங்கிற்று. சற்று உட்கார்ந்து இளைப்பாறாமல் மேலே நடக்க முடியாது என்று தோன்றியது. வீதி ஓரத்தில் காணப்பட்ட சுமைதாங்கியண்டை சென்று அதன் மேல் உட்கார்ந்தான்.

வானத்தில் பூரண சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. இளந் தென்றல் மெல்ல மெல்ல வந்து களைத்துப் போயிருந்த அவனுடைய தேகத்தின் மீது வீசி இளைப்பாற்றியது.

உடம்பின் களைப்பு நீங்க உள்ளம் சிந்தனை செய்யத் தொடங்கியது. 'நாம் வந்த காரியம் என்ன?' என்று எண்ணிய போது, பரஞ்சோதிக்கே வியப்பாயிருந்தது. அந்த மத யானையின் மேல் வேலை எறியும்படியாக அந்தச் சமயம் தனக்குத் தோன்றிய காரணம் என்ன? அது விடம் சிக்கிக் கொண்டிருந்தால், தன்னுடைய கதி என்னவாகியிருக்கும்? — தன்னிடம் உயிரையே வைத்திருக்கும் தன் அருமை அன்னையை மறுபடியும் பார்க்க முடியாமலே போயிருக்கும் அல்லவா?

சிவிகையில் வீற்றிருந்த இளம் பெண்ணின் முகமும் பெரியவரின் முகமும் பரஞ்சோதியின் மனக் கண் முன்பு தோன்றின. ஆம்; மத யானையினால் அவர்களுக்கு ஆபத்து வராமலிருக்கும் பொருட்டே அந்தச் சமயம் அவன் வேலை எடுத்து வீசினான். அவர்கள் யாரா யிருக்கலாம்? ஒரு வேளை அரங்கேற்றம் தடைப்பட்டது குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்களே, அந்தச் சிவகாமி அம்மைதானோ, அந்த இளம் பெண்! பெரியவர் அவளுடைய தந்தை ஆயனராயிருக்குமோ?

இவ்விதம் சிந்தித்தவண்ணமாய்ப் பரஞ்சோதி சுமைதாங்கி மேடையின் மீது சாய்ந்தான். அவனை அறியாமல் அவனுடைய கண்ணிமைகள் மூடிக் கொண்டன. நித்திராதேவி தன் மிருதுவான மந்திரக் கரங்களினால் அவனைத் தழுவலானாள். (தொடரும்)

அடுத்த வாரம்: வண்ணப் படங்கள்
வானமாதேவி, மகேந்திர பல்லவன்


சிலகாமி.


• மாமல்லன் •

ஸ்ரீ கிருஷ்ண கான சபா (ரிஜிஸ்டர்டு)

"கான விஹார்" தி. நகர், சென்னை - 17 போன்: 442806 & 441953

கோகுலாஷ்டமி சங்கீத உத்ஸவம் - ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் -1973

கட்டிட நிதிக்காக.

ஆகஸ்டு

சனி ★ 4ஆ. 5-00 செம்மங்குடி-லால்குடி-சிவராமன்

ஞாயிறு 5ஆ. 3-00 சி. கே. ராமச்சந்திரன் - ஏ.அனந்தகிருஷ்ணன்-ரகு பிரசாத்

★ 6-00 ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி - வி. வி. சுப்ரமணியம் - காரைக்குடி மணி - நாகராஜன்

வெள்ளி 10ஆ. 6-30 ரங்கநாயகி ராஜகோபாலன் (வீணை) - நெல்லை தேவராஜன்

சனி 11ஆ. 6-00 நேதுனூரி-கிருஷ்ணன்-ராம பத்ரன்

ஞாயிறு 12ஆ. 3-00 நீலா ராம்கோபால்-நரசிம்ஹ மூர்த்தி-நாகை சுந்தரராஜன்
6-00 டி. கே. ஜெயராமன் - ருக்மிணி - டி. சிறுவாசன்

செவ்வாய் 21ஆ. 7-00 எம்பார் விஜயராகவாச்சாரியார் அண்ட் பார்ட்டி-ஹரிகதை

புதன் 22ஆ. 7-00 உடையாளூர் ராஜகோபால சர்மா அண்ட் பார்ட்டி - ஹரிகதை

வெள்ளி 24ஆ. 6-30 திருவெண்காடு ஜெயராமன் சேதுராமையா - ஹரிஹரன்

சனி 25ஆ. 6-00 மதுரை சோமு-சந்திரசேகரன்-ரகு-மகாதேவன்-சுந்தரம்-குண்டுபள்ளி
8-15 எம். சந்திரசேகரன்-கன்யாகுமாரி-குருராஜன்

ஞாயிறு 26ஆ. 3-00 சிதா சுப்பிரமணியம்
★ 6-00 பர்வீன் ஸுல்தானா

வெள்ளி 31ஆ. 3-00 உதயசங்கர் ஜோஷி-பத்ம நாபன்-சுருதி
6-00 எம். எஸ். கோபாலகிருஷ்ணன்-எம். எஸ். அனந்தராமன் (இரு வயலின்கள்) டி.வி.கோபாலகிருஷ்ணன்-ஆர்.குருமூர்த்தி

செப்டம்பர்

சனி 1ஆ. 6-00 பி. எஸ். நாராயணஸ்வாமி-வி.வி. சுப்பிரமணியன்-ரகு

ஞாயிறு 2ஆ. காலை 8-15 அருணாசல கவியின் ராம நாடக கீர்த்தனைகள் - மதுரை என். கிருஷ்ணன் அண்ட் பார்ட்டி
3-00 ஜெயா கிருஷ்ணன் - லலிதா - நெல்லை தேவராஜன்

★ 6-00 புன்னட் மாலி - வீரராகவன்-கோயமுத்தூர் ராமஸ்வாமி

வெள்ளி 7ஆ. 6-00 கே. வி. சாருமதி-கன்யாகுமாரி ரகு பிரஸாத்

சனி 8ஆ. 6-00 எம்.டி.ராமநாதன்-திவாகராஜன் முருகபூபதி

ஞாயிறு 9ஆ. 3-00 கடையநல்லூர் வேங்கடராமன்-சங்கர ஐயர்-ராமதாஸ்
6-00 லால்குடி ஜெயராமன், லால்குடி ஸ்ரீ.ஜெ.ஆர்.கிருஷ்ணன் (இருவயலின்கள்)-சிவராமன்-விநாயகராம்

வெள்ளி 14ஆ. 6-30 எம். எல். ராமாதேவி-லக்ஷ்மி நாராயணன்-திண்டுக்கல் ராமமூர்த்தி

சனி 15ஆ. 6-00 ஸ்ரீரங்கம் கோபாலரத்தினம்-அழகிரிசாமி-விஸ்வநாதய்யர்

ஞாயிறு 16ஆ. ரகுமாயி - சிக்கில் பாஸு - என்.எஸ். ராஜம்
6-00 சிட்டிபாபு (வீணை)-அம்பி ஐயர்-லக்ஷ்மணராவ் (தபேலா)

வெள்ளி 21ஆ. 6-30 பிரேமா, ஜெயா-பத்மநாபன்-ராம்தாஸ்-நாகை சுந்தரராஜன்

சனி 22ஆ. 6-00 எஸ். கல்யாணராமன்-எம்.எஸ். கோபால கிருஷ்ணன்-காரைக்குடி மணி

ஞாயிறு 23ஆ. 3-00 கே. சாந்தி-சிவராமன் - ஸ்ரீவத்ஸன்
6-00 எம். எல். வசந்தகுமாரி-கன்யா குமாரி, கிருஷ்ணமூர்த்திராவ்.

வெள்ளி 28ஆ. 6-30 வேகவாஹினி லலிதா - தஞ்சாவூர் சுப்பிரமணியன்

சனி 29ஆ. 6-00 மணி கிருஷ்ணஸ்வாமி-லலிதா-சிவப்பிரகாசம்

ஞாயிறு 30ஆ. 3-00 நிர்மலா சுந்தரராஜன்-முரளி மோஹன்-தஞ்சாவூர் சுப்பிரமணியன்
6-00 ஆர். வேதவல்லி-ஆலங்குடி கணேசன்-ஏ. சங்கரன்

அக்டோபர்

திங்கள் 1ஆ. 7-00 கோட்டூர் ராஜரத்தினம் குழு வினர்-நாகஸ்வரம்

செவ்வாய் 2ஆ. காலை 8-15 எம். சந்திரசேகரன்
3-00 மாலினி கஸ்தூரிரங்கன் - ராம கிருஷ்ணன்-பத்மா
6-00 டி. என். கிருஷ்ணன், பேபி விஜய லக்ஷ்மி (இரு வயலின்கள்)-ராமபத்ரன்-வி. நாகராஜன்

வெள்ளி 5ஆ. 3-00 செதலபதி பாலசுப்பிரமணியன் திருவள்ளூர் பார்த்தசாரதி-பி.ஸ்ரீநிவாசன்
6-00 வி. ராமச்சந்திரன்-கோவை தக்ஷிணா மூர்த்தி-துரை

சனி 6ஆ. 3-00 ஸௌமித்ரா ரத்னம்-ஐயூர்த்தனம்-ஸாய்ராம்
6-00 டி. ஆர். சுப்பிரமணியம்-லால்குடி முருகபூபதி

ஞாயிறு 7ஆ. 3-00 நீடாமங்கலம் வி.வி. சுப்பிர மணியம்-குருமூர்த்தி-லக்ஷ்மி நாராயணன்
6-00 புன்னட் ரமணி - உபேந்திரன் - சௌராஷ்டியா குழுவினர்-ஜலதரங்கம்

ஸீஸன் டிக்கெட்டுகள்: ரூ. 100, 60, 40, 25. இன்சரி டிக்கெட்டுகள்: ★ ரூ. 15, 10, 5 & 3

பகல் 3 மணி கச்சேரிகள் அனுமதி இலவசம். ரூ. 10, 5, 3, 2

பத்மஸ்ரீ பாலமுரளி கிருஷ்ணாவின் தலைமையில் நடைபெறுகிறது



தாக்

படத்தின் நீளத்துக்குள் அடக்க முடியாத பெருங்கதை. அதனைப் படத்துள் அடக்கும் முயற்சி கதைக்கு விறுவிறுப்பைக் கூட்டுகிறது. இந்தப் படத்துக்கு இரண்டு கதாநாயகிகள். ஒருத்தி சோனியா (ஷர்மிளா டாகூர்) இன்னொருத்தி சாந்தினி (ராக்கி). சோனியாவைக் காதல் கடிமணம் புரிந்து கொண்டு உத்தியோக நிமித்தம் குலுவுக்குச் செல்பவன் சுநீல். (ராஜேஷ் கன்னா).

அங்கே சோனியாவின் கற்புக்குப் பங்கம் ஏற்படாமல் பாதுகாக்கப் போய்க் கொலை—களவு என்னும் இரட்டைக் குற்றத்துக்கு ஆளாகிறான். அவனைச் சிறைக்கு இட்டுச் செல்லும்போது இடி விழுந்து 'வான்' விபத்துக்குள்ளாகிறது. இங்கு ஒரு சஸ்பென்ஸ்! சுநீல் பிழைத்து விடுகிறான். பிழைக்காவிட்டால் கதை எப்படிப் பிழைக்கும்?

கதைப்படி, அந்த நேரத்துக்கு அவன் சோனியாவைப் பொறுத்தவரையில் இறந்தவன் ஆகிறான். அவனுடன் நடத்திய இல்வாழ்க்கையின் பயனைப் பெற சோனியா தவறவில்லை. ஆம்! அவள் ஓர் ஆண் மகவுக்கு அன்னையாகிறாள். பிறகு சிறுவர் டன்னி ஒன்றில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறாள். இங்கிருந்து வேலை நீக்கம் பெற அவளது கடந்த கால வாழ்க்கை உதவுகிறது. அதே நேரத்தில் சாந்தினியின் நட்பையும் பெற்றுத் தருகிறது. பலன், சாந்தினியின் வீட்டுக்கு அவள் குடி பெயர்கிறாள். அப்படிக் குடி பெயர்ந்ததால் அவள் வாழ்க்கை வளம் பெறுகிறது. ஆம், பொய் இல்லை. அவள் கணவன் சுநீல் அங்கே கதிர் என்னும் பெயரில் சாந்தினியின் கணவனாகக் காட்சி தருகிறான்.

அப்புறம் தப்பபிப்பிராயம். அதைத் தொடர்ந்து ஐயம்; ஐய நீக்கம். பிறகு பாரதப் பண்பு குலையாத சுப முடிவு!

இது ஒரு குல்ஷன் நந்தாக் கதை. சம்பவங்களுக்கு மேல் சம்பவங்களாகக் கோத்து நிறுத்தி, ஆவலுக்கு மேல் ஆவலைத் தூண்டி, 'கோ இன்ஸிடென்ஸ்'களைக் கொட்டிக் குவித்திருந்தாலும் மனித மனத்துள் ஒரு மனிதனைப் படைத்து அலச முடியாத ஒரு பிரச்னையை அலச முயன்றிருக்கிறார்; அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்.

அவர் வெற்றியில் பங்கு போட்டுக்கொண்டிருப்பவர்கள் நடிகர்கள். ஏற்றுக்கொண்ட பாத்திரத்தின் குணமறிந்து மூன்று பிரதான பாத்திரங்களுமே நடித்திருக்கின்றனர். காதல் காட்சியில் ஷர்மிளா டாகூரும் உள்ளத்து உணர்ச்சிகளுக்கு ஓர் உருவம் தரும் முயற்சியில் ராக்கியும் ஒருவரை யொருவர் விஞ்சி நிற்கின்றனர். இவர்களுக்கு ஈடு கொடுத்து ராஜேஷ் கன்னா நடித்திருக்கிறார் என்றால், இவ்வளவு பேருக்கும் ஈடு கொடுத்து பேபி பிங்கியும், குறிப்பாக மாஸ்டர் ராஜுவும் தங்கள் மழலை நடிப்பால் மனத்தை நிறைக்கின்றனர்.

கதையால் குல்ஷன் நந்தாவும், டைரக்ஷனால் யஷ் சோப்ராவும் இப்படத்தில் இரட்டைக்குப் பிராதான்யம் தந்திருக்கிறார்கள். ஒற்றைக்கு இரட்டையாக இரயில் காட்சி, கோர்ட்டுக் காட்சி ஆகியவை வருகின்றன. எங்கெங்கோ பிரிந்து விட்டவர்கள் போன்று பாத்திரங்களை உலவவிட்டு மாயப் பிரமையை உண்டு பண்ணினாலும் ஒருவரையும் சிதற விடாமல் ஒன்று சேர்த்து வைக்கும் இடத்தில் பிரமையும் இரட்டிக்கிறது!

'தாக்' என்னும் சொல்லுக்குக் கறை, களங்கம் என்று பொருள். கதையில் இடம், காலம் இவற்றில் காணும் கறையைக் களைய அக்கறை காட்டாததற்குக் காரணம், தலைப்புக்கு நியாயம் வழங்கவோ?

— ர. வீ.



உணர்வின் தாகம்

கோமகள்



கிட்டத்தட்ட பாழடைந்த தோற்றம் அளிக்கும் மிகப் பழைய பழுதடைந்த அந்தப் பெரிய கட்டிடத்தினுள் சிறைப்பட நேர்ந்த உயிர்கள் எத்தனையோ உண்டு. உலகச் சிறைக்குள் ஓர் உட்சிறை அது. அங்கு நேற்றுப் பிறந்த குழந்தை முதல், யுவப் பருவம் வந்தடைந்த வாலிபர் வரை ரகவாரியான கூட்டம் உண்டு. அது ஒரு குட்டி உலகம். அதற்கெனச் சில சட்ட திட்டங்கள். அதற்கெனச் சில ஒழுங்கு முறைகள். முதலில் தர்மத்தை நினைத்து ஆரம்பித்து நிர்வாகம் என்ற வெளிப் பூச்சுக்கு இரையாகிவிட்ட ஸ்தாபனம்.

அந்த ஸ்தாபனத்துக்கு ஓரளவு பொருளுதவி செய்யும் சரவணனுக்கு ஒரு புது விதமான ஆசை மனத்தில் தோன்றியது. எத்தனையோ கோயில்கள், குளங்கள், விரதங்கள் என்று நியமங்களை ஏற்று, ஓர் அனாதைக் குழந்தையைத்தான் தத்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு அவர் வந்தபோது தான் சீதா பிறந்தாள். ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணு என்று அவளை வளர்த்த அவர், ஒவ்வோர் ஆண்டும் அவளது பிறந்த நாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவார். செல்வந்தர் வீட்டுக் குழந்தைகள் வந்து விருந்துண்டு அன்பளிப்புக்கள் பெற்றுச் செல்வதுண்டு. இப்போது எட்டாம் ஆண்டு பிறந்த நாள் வருகிறது சீதாவுக்கு. இதை வழக்கம்போல் அல்லாமல் வித்தியாசமாகக் கொண்டாட எண்ணினார் அவர். அவர் பொருளுதவி புரியும் அனாதை இல்லத்துப் பையன் ஒருவனைச் சீதாவின் பிறந்த நாள் அன்று அழைத்து வந்து நாள் முழுதும் அவனை வைத்திருந்து அனுப்பலாம் என்று இட்டமிட்டார் அவர்.

விடியற்கால நேரம். வெண்பனி பஞ்சுத் துகளாய் உதிர்ந்து பாதையை மறைத்துக் கொண்டிருந்தது. சரவணன், அவரது மனைவி கனகா, குழந்தை சீதா மூவரும் புத்தாடை அணிந்து கொண்டு காரில் ஏறினர்.

கார் புரசைவாக்கம் நோக்கிச் சென்றது. செல்லரித்த கேட் திறந்து வழிவிட, அனாதை இல்லத்தலைவி முகமன் கூறி வரவேற்க, சற்று நேரத்தில் அவர்களிடம் வரதன் என்ற சிறுவன் ஒப்படைக்கப்பட்டான். வரதன் காரில் ஏறுவதையே நோட்டமிட்ட மற்றச் சிறுவர்களின் கண்களில் படர்ந்திருந்த அறியாமையும், திகைப்பும் ''எல்லோரும் உள்ளே போங்க'' என்ற தலைவியின் அதிகார முழக்கத்தில் அச்ச ரூபமெடுத்தன.

முன் சீட்டில் வரதன் உட்கார்ந்திருக்கிறான். சற்றுத் தூரத்தில் சரவணன் பளீரென்ற வெளுப்புடன் கம்பீரமாக அமர்ந்திருக்கிறார். அந்த வெண்மை உடையைக் கண்டாலே அவனுள் அச்சம் பிறக்கிறது. பின்னால் இருக்கும் அம்மா எவ்வளவு அழகாக இருக்கிறாள்! அந்த முகத்திலே படர்ந்திருக்கிற கருணையும், பரிவோடு கூடிய சிரிப்பும்.... ஓ! அந்தப் பாப்பா எத்தனை அழகு! எவ்வளவு அகல சரிகைப் பாவாடை....

''தம்பி! உன் பெயர் என்ன?'' சரவணனின் குரலில் அன்பும் பரிவும் ஒலிக்கின்றன.

ஆனாலும் அந்த அன்பை ஏற்றுக் களிக்கவோ, ஏற்றுப் பூரிக்கவோ வரதன் தயாராக இல்லை. தூரத்தில்தான் நிற்கிறேன் என்ற பாவனையோடு பேசாமலிருந்தான்.

பின்னாலிருந்து சீதாவின் இனிய மழலை கேட்டது: ''அப்பா! ஏன் பேசமாட்டேங்கறான்?''


''நாமெல்லாம் அவனுக்குப் புதிதில்லையா?'' என்று சமாதானம் கூறுகிறார் சரவணன்.

''புதுசுன்னு என்னப்பா? பெயர் சொல்லக் கூடாதா? இதோ பாரு... உன் பெயர் என்ன?'' என்று வரதனை விளித்தாள் சீதா.

வெட்கத்தால் நெளிந்தவாறே அவன் ''வரதன்!'' என்று சன்னக் குரலில் முணுமுணுத்தான்.

கார் வீட்டெதிரே நின்றது.

சீதா குதித்தபடி இறங்கி ஓடினாள். வரதன் தயங்கியவாறே பங்களாவைப் பார்த்





தான். காலடியில் மெத்திடும் புல்லிலிருந்து பக்கவாட்டில் மலர்ந்திருந்த மலர்கள், வழு வழுக்கும் தரை, பிரும்மாண்டமான திரைச் சீலைகள், கண்ணாடிகள் கலையழகுடன் மிளிரும் வரவேற்பறை அலங்காரங்கள், பூச்சாடிகள், பொம்மைகள் என்று எல்லாமே அவனைப் பிரமிப்பில் ஆழ்த்தின. இத்தனை பெரிய வீட்டில் இந்த மூன்றே பேர்தானா? இவர் களுக்கு வேலை செய்யும் ஆட்கள் இத்தனை பேரா?

சீதாவின் ஆயா ஓடி வந்தாள்.

''ஆயா! வரதனைக் குளிக்கச் சொல்லிப் புது உடை போட்டு விடு'' என்றாள் சீதாவின் அம்மா கனகா.

அரப்புத் தூளால் உடம்பு அழுக்கைப் போக்கிக் கொண்டிருந்த வரதன் வாசனை கமழும் நுரை பொங்கும் சோப்பின் சுகந்தத்தில் திக்குமுக்காடிப் போனான். மொட்டாத் துணிகள் சொரசொரக்கும் உடம்பில் மென்மையான துணிகள் சிலிர்ப்பை மீட்டின.

மணி ஒன்பது அடித்தது.

தன் வீட்டுக்கு வந்துள்ள ஓர் இளைய விருந்தினன், தன் வாழ்க்கை முறையோடோ, பழக்க வழக்கங்களோடோ சிறிதும் ஒட்டாமல் தூர நிற்கிறான் என்பதை வீட்டின் தலைவர் உணர்ந்தார். அவனுள் ஒரு சகஜ பாவத்தை மூட்டி ஒருசிறிது தன்னம்பிக்கையைத் தளிர்க்கச் செய்ய வேண்டும். அதன் மூலம் அவன் முகத்தின் பிரமிப்பையும், ஒதுங்கும் அச்சத்தையும் விலக்க வேண்டும் என்று விரும்பினார். அந்தச் சிறுவனின் முகத்தில் ஒரு சிறு புன்னகை மட்டும் அவிழ்ந்தால் போதாது. இந்த நாளின் குதூகலத்தால் அவன் மனம் நிரம்பிப் பூரிக்க வேண்டும்.

''வரதா! இங்கே வா!'' என்று அவனைத் தன்னருகே வந்து அமரச் செய்தார் சரவணன்.

பிரமிப்பும் அச்சமும் களையாமலே அவர் அருகில் உட்காருவதைக் கூட ஓர் ஆணையாக எண்ணி வந்து அமர்ந்தான் வரதன்.

சரவணன், கனகா, சீதா, வரதன் நால்வரும் சோபாவில் அமர்ந்திருந்தனர். வெளியே பனிப்பு நீங்கிய இள வெய்யிலின்

மஞ்சள் மாற்றம் கண்டு வெள்ளொளி பரவத் தொடங்கியிருந்தது.

காப்பிக் கெட்டிலையும், கப் சாசர்களையும் அவர்கள் அருகே வைத்தான் பணியாள். கோப்பைகளில் காப்பியை ஊற்றி ஒவ்வொருவரிடமும் தந்தாள் கனகா.

காப்பியின் மணம் நாசியை வருட மனசில் புரண்டெழுந்த ஆவலை அடக்க முடியாமல் அடக்கியவாறே நெளிந்தான் வரதன். அவனருகே நீண்ட காப்பிக் கோப்பையை அவசரமாகப் பற்றி எடுத்தான். எடுத்த வேகத்தில் சிலீரென்று பீங்கான் துண்டுகள் மொசைக் தரையில் தூள் தூளாகச் சிதறின.

வரதனின் முதுகுத் தண்டு சில்லிட்டு விட்டது. அச்சம் நாவை அடக்க, இதழ்கள் நடுங்கக் கண்களில் நீர் திரண்டு விட்டது.

''தெரியாமல்...தவறிடுச்சு....''

கனகா சிரித்தவாறே அவனைத் தட்டிக் கொடுத்தாள். ''பரவாயில்லை தம்பி. நீ அழக்கூடாது!'' என்றார் சரவணன்.

''எம்ப்பா! கப் உடைஞ்சதுக்கு இவன் ஏன் அழறான்?'' என்றாள் சீதா.



வேறொரு கப் வந்தது. அதில் மீண்டும் காப்பியை ஊற்றித் தந்தாள் கனகா.

இந்த முறை வெகு ஜாக்கிரதையோடு அதைப் பற்றிக் காப்பியை உறிஞ்சினான் வரதன். அதன் மணத்திலும், ருசியிலும் கிறங்கிப் போனாலும், சற்று முன் கப்பை உடைத்து விட்ட திடுக்கிடலிலிருந்து அவன் விடுபடவே இல்லை. இத்தனை நேரம் அவனது 'இல்லத்'திலானால், ஆயா கண் காது மூக்கு என்று பாராமல் போட்டுப் புரட்டி எடுத்துவிடுவாளே! அப்புறம் சிஸ்டர் வந்து வேறு பிரம்படியும், வெய்யிலில் நிற்கும் தண்டனையும் தருவாளே! இங்கே அதே தவற்றுக்குத் தண்டனையும் இல்லை, திட்டும் இல்லை. மாறாகப் 'பரவாயில்லை' என்ற சமாதானம். புன்சிரிப்பு மாறாத அன்போடு மீண்டும் ஒரு கப் காப்பி! இது உண்மையா? வாழ்வில் நடக்கக் கூடியதுதானா? ஆசிரமத்தைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் இப்படித்தானா நடக்கும்?

''இன்னும் கொஞ்சம் காப்பி சாப்பிடுறியா?''

''உம்!'' என்று குரல் மெலினமாக ஒலித்தாலும் கண்களில் படர்ந்துள்ள ஆவல்!

மீண்டும் காப்பியைப் பருகியபோது வரதனின் உள்ளத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டிருந்தது. ஆசிரமத்தில் நிறையப் பேர்கள் உள்ளதால் குறைவாக உண்ணத் தருகிறார்கள். இந்த வீட்டில் மூன்றே பேர்தான்! எனவே எல்லாம் நிறையக் கிடைக்கிறது போலும்...

''சீதா! வரதனோடு பேசிக் கொண்டிரு!'' என்றவாறே கனகா உள் வேலைகளைக் கவனிக்கப் போனாள்.

சரவணன் தினசரியைப் புரட்ட ஆரம்பித்தார்.

''வரதா! வா, நாம் மாடிக்குப் போகலாம்!'' என்று அவனை மாடிக்கு அழைத்துச் சென்றாள் சீதா.

விசாலமான ஓசையிடாத படிகள்! அனாதை ஆசிரமத்தின் கிழக்குப் பக்க இருண்ட மாடிப் படிகளில் ஒருவரை யொருவர் முந்திக் கொண்டு ஏறும்போது மரப் படிகளில் சத்தம் அதிரும். பின்னால் வரும் சிஸ்டர் மாடி ஏறியதும் யாராவது ஒருவருக்குக் குட்டு விழும். தலையில் ஆணி வீச்சாக விழும் அந்தக் குட்டு என்றைக்கு யாருக்கு விழும் என்று கணக்கில்லை.

மேலே வராந்தாவின் பிரம்புச் சாய்வில் சீதாவும், வரதனும் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்தனர். வரதனின் கண்கள் விரிந்த வியப்போடு அங்கு கிடந்த பெரிய பெரிய கட்டில்களையும், அவற்றின் மீது மெத்தென்று கிடந்த ரப்பர் மெத்தைகளையும், சுவரில் பிரும்மாண்டமாக மாட்டப்பட்டிருந்த மாடர்ன் ஆர்ட் சித்திரங்களையும் கண்ட வண்ணம் இருந்தன.

''வரதன்! உங்க அம்மா எங்கே?'' என்றாள் சீதா.

வரதனுக்குக் கனவு போல் ஓர் உருவம் தெரிகிறது. இடுப்பின் பக்கவாட்டில் கொசுவத்தைத் தூக்கிச் செருகிக்கொண்டு தொளதொளத்த ரவிக்கையும், காதுகளில் ஓலையும் பரட்டைத் தலையுமாக ஓர் உருவம்... உருவம் கிடக்கட்டும். அவள் கண்களில் கொஞ்சமேனும் பாசமோ, கருணையோ இருந்திருந்தால்...? ஒரு நாளைக்கு ஒருவேளை சோறாவது இட்டிருந்தால்....? பத்துப் பைசாவைக் கொண்டு ஐந்து பைசா மிளகும் ஐந்து பைசா சீரகமும் வாங்கி வரச் சொன்னபோது அதில் இரண்டு பைசாவுக்கு மிட்டாய்க் குச்சி வாங்கி விட்டான் என்பதற்காக இரும்புக் கரண்டியைப் பழுக்கப் பழுக்கக் காய்ச்சி அதன் வெப்பு மினுமினுக்க, அவனை ஆற்றங்கரை வரையில் துரத்திக்கொண்டு ஓடிவந்தாளே... அப்போது அவள் கையிலிருந்து தப்பியவன் தானே திருட்டு ரயில் ஏறி, பசிக்குப் பேயாய் அலைந்து, ஒரு பிச்சைக்காரனின் துண்டு விரிப்பில் கிடந்த காசுகளை அள்ளிக்கொண்டான். அப்போதுதான் அவனை மற்றவர்கள் பிடித்துக் காவலரிடம் ஒப்படைத்தார்கள். ஏதோ ஒரு கோர்ட்டில் விசாரணை... கொஞ்ச நாட்கள் ஜெயில் வாசம்... அப்புறம் அநாதை ஆசிரமத்துக்குள் அடைபட்டு வாழும் வாழ்வு...

''ஏன் அழறே வரதா? உனக்கு அம்மா இல்லையா? செத்துட்டாங்களா?''

''ஆமாம்!'' அழுத்தமாக வந்தது அவன் குரல். கண்ணோரங்கள் மீண்டும் மெல்லக் கலங்கின.

''அப்பா?''

''அப்பாவா?''

ஆட்டுக் கடா மீசையும், தலையில் முண்டாசும், எலும்பான உடலும், சாராய நெடியுமாக அந்த உருவம் நேர் எதிரில் நிற்பது போலிருந்தது. அந்த நினைப்பே அவனைப் பீதிக்குள்ளாக்கிற்று. ''டாய்!'' என்ற அவனது குரலைக் கேட்டாலே குலை நடுங்கும். அவனைக் கண்டாலே வரதன் வீதிக் கடைசிக்கு ஓடிவிடுவான். ஒரு நாளாவது அவனுக்குச் சாப்பாடு போட்டிருப்பானா அவன்?

''அப்பாவும் செத்துட்டாரா?''

''ஆமாம்!''

''உன்னோட அப்பா, அம்மா இரண்டு பேருமே செத்துட்டாங்களா? ஐயோ பாவம்! பின்னே உனக்கு யார் சோறு போடுவா? யார் ஊட்டி விடுவா? யார் டிரஸ் பண்ணி விடுவா?'' மழலை கொஞ்சும் குரலில் கருணை விகசிக்கக் கேட்டாள் சீதா.

''எனக்கு யாரும் ஊட்ட மாட்டாங்க. நானேதான் சாப்பிடுவேன்....'' வரதனின் குரல் வெடித்தது.

''நிஜம்மாவா?''

''ஆமாம்.''

''சீதா! வரதன்! சாப்பிட வாங்க!''

சரவணனும் கனகாவும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தனர்.

'சாப்பிட' என்ற சொல்லைக் கேட்டதுமே வரதன் பரபரப்படைகிறான். மந்திரவசப் பட்டாற்போல் மனம் ஒரு நோக்கில் குவியச் சாப்பாட்டு மேசையை நெருங்குகிறான். புற மனிதர்களைக் கண்டு தூர நின்ற இயல்புகூடக் கரைந்து போயிற்று. அவன் கண்கள் பிரமிப்பில் மலர்ந்தன. வாயினுள் திடீரென்று குவிந்துவிட்ட எச்சிலைக் கூட்டி விழுங்கினான் அவன். வயிற்றினுள் பள்ளம் பறித்தாற் போல் பசி குடைந்தெடுத்தது. ஓ! இவற்றை எல்லாம் சாப்பிடும் இவர்கள் எத்தனை அதிர்ஷ்டசாலிகள்!

விதம் விதமான இன்பண்டங்கள்! இனிப்புக்களில் ஐந்து வகை. காரத்தில் ஏழு வகை. கேக் ரகங்கள் வேறு. பழ வகைகள் வேறு; போதாததற்குச் சில்லிடும் ஃப்ரூட் சாலட்! பருப்புக்கள் மிதக்கவிடும் பாதாம் கீர்!

கனகாவும் சரவணனும் மெல்லப் பேசியவாறே சாப்பிட ஆரம்பித்தனர். சீதா, ''அப்பா!'' என்று மெல்ல விளித்து ஜாடை காட்டினாள்.

வரதன் தட்டில் இருந்த பலகாரங்களில் ஒருமுகமாகி மூழ்கிவிட்டான். அதை உண்ணும் வேகமும், அவன் முகத்தின் ரசனையும், சுற்றுச் சூழ்நிலையையே மறந்துவிட்டு அவன் உணவு உண்பதிலேயே லயித்துவிட்ட போக்கையும் கண்டு அவர்கள் திகைத்துத்தான் போய்விட்டனர். மற்றவர்கள் தட்டில் கொறித்தது போக மீதி நிறையக் கிடந்தது. வரதனின் தட்டில் ஒவ்வொரு வகையும் முழுதாக உண்ணப்பட்டிருந்தன.

கனகா எழுந்து அவனுக்குத் தேவையான இனிப்பு வகைகளை இன்னும் கொஞ்சம் வைத்தாள். அவற்றைச் சாப்பிட்டு நிமிர்ந்த வரதனின் கண்களில் சுடர்விட்ட திருப்தியும், பொலிவும் அந்தத் தம்பதியை மெய்சிலிர்க்க வைத்தன.



'வரி ஏய்ப்பவர்களில் உலகிலேயே அழகானவள்' என்று நடிகை ஜீனா லோலாபிரிகிடாவுக்கு ஒரு பட்டத்தை இத்தாலிய நீதிமன்றம் ஒன்று கொடுத்திருக்கிறது! — பாலி

சாப்பிட்டதும் சீதா காரம் போர்டை எடுத்தாள். வரதனுக்கு ஸ்ட்ரைக்கரை எப்படிப் பிடிப்பது, எப்படி அடிப்பது என்பதைச் சொல்லித் தந்தாள். சரவணன் வெளிநாட்டிலிருந்து வாங்கி வந்திருந்த குழந்தைகள் புத்தகங்களை எடுத்துப் பொம்மை பார்க்கச் சொன்னாள். தன் விளையாட்டுச் சாமான்களைக் காட்டினாள். விளையாட்டுச் சைக்கிளிலும், விளையாட்டு மோட்டாரிலும் அவனை அமர்த்தி ஓட்டச் செய்தாள். வீட்டின் முன்புறம் இருந்த சறுக்கிலும், ஸீ-ஸாவிலும் விளையாடிக் காண்பித்தாள்.

அதன் பின் சிறிது நேரம் சீதா படுத்துத் தூங்கினாள். அப்போது வரதன் சிந்தனையில் மூழ்கி விட்டான்.

காலையில் கண்களில் மின்னலடித்தாற் போல் கூசியவாறே அந்த வீட்டில் அடி எடுத்து வைத்த வரதனின் மனம் கொஞ்சம், கொஞ்சமாக சுதாரித்தவாறே ஒரு சமநிலைக்கு வந்தபோது, இந்தத் தனிமை ஒரு புதிய சிந்தனையைத் தூண்டி விட்டது. இந்தத் தாற்காலிக மகிழ்ச்சியும், நெகிழ்வும் விடைபெறப் போவது போல் ஒரு கலக்கம் ஏற்பட்டது. இந்த வீட்டில் சீதா என்ற ஒரு பெண் அனுபவிக்கும் சுதந்திரங்கள், பணிவிடைகள், அன்பின் நுகர்ச்சிகள் யாவும் அவனுக்கு மட்டும் ஏன் இடைக்கவில்லை? நெஞ்சில் ஊறிக் கிடந்த சுவைகள் இந்நினைவால் கசப்பேறின. களைப்பின் ஆதிக்கம் இமைகளை அழுத்தவாரம்பித்தது.

''வரதா! எழுந்திரப்பா! சாப்பிடலாம் வா!'' என்று தோள்களைப் பரிவுடன் பற்றியவாறே முகத்தில் கருணை பூக்க அழைத்தாள் கனகா.

அந்த அழைப்பின் பரிவும், அந்த முகத்தின் கனிவும், நினைக்க வியப்பாய், பேசத் திகைப்பாய், உணரப் பிரமிப்பாய்த்தானிருந்தது... இன்று ஒரு நாள் மட்டும்தான் அவன் தேவைகளைப் புரிந்து கொள்ளவும், நிறைவேற்றவும் ஒரு தாய் கிடைத்திருக்கிறாள்.



''இந்தப் பிளேனை யாரோ தமிழாக் செய்யறாங்க போல இருக்கே!'' வின்சென்ட் - பாலி

மதிய உணவு — அறுசுவை உண்டி.

காலையில் சாப்பிட்டாற் போலவே மனம், மொழி, மெய் மூன்றும் ஒருமுகமாக லயிக்க உண்டு முடித்தான் வரதன். அந்த உணவின் மீது ஏற்பட்ட பிரியத்திலும், மயக்கத்திலும் அளவு மீறியே அவன் உண்டுவிட்டிருந்தான்.

வாசலில் அடுத்தடுத்து இரண்டு கார்கள் வந்து நின்றன. சீதாவின் பாட்டியும் சித்தியும் அவளைப் பார்க்க வந்திருந்தனர்.

''சீதாக் கண்ணு! உனக்கு பிறந்த நாள் பரிசு இந்தாம்மா!'' என்றவாறே ஒரு புது கலர் பெட்டியையும், பட்டுப் பாவாடையையும் பரிசளித்தாள் சீதாவின் பாட்டி.

''இந்தப் பரிசு ரொம்பப் பிடிச்சிருக்கு பாட்டி!'' என்றாள் சீதா.

சீதாவின் சித்தி அவளைக் கட்டி அணைத்து முத்தமிட்டுவிட்டு, ''என் செல்லக் கண்ணு! மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ்!'' என்றாள்.

''தேங்க்ஸ் சித்தி!'' என்றாள் சீதா.

சீதாவின் தோழிகள் வந்தனர். ஒருத்தி பந்து, ஒருத்தி டேபிள் டென்னிஸ் பேட், ஒருத்தி பிளாஸ்டிக் பூந்தொட்டி, ஒருத்தி கதைப் புத்தகம் என்று தந்தனர். அவர்களுக்கெல்லாம் ஆளுக்கொரு பொம்மையையும், சாக்லேட்டையும் அன்பளிப்பாகத் தந்து அனுப்பினாள் சீதாவின் அம்மா கனகா.

''ஏன் சீதா! உன்கிட்டே நிறையக் கலர் பென்சில், பந்து, மட்டை எல்லாமே இருக்கே? திரும்ப ஏன் இவங்க வாங்கித் தராங்க?''

''அப்படித்தான். பிரசன்ட் பண்ணணும்னு வாங்கித்தான் தருவாங்க!'' என்றாள் சீதா.

அது ஏன் என்று வரதனுக்குப் புரியவே இல்லை. ஆனால் அந்தப்பரிசுகளைத் தந்துவிட்டுப் பாட்டி அரவணைத்ததையும், சித்தி முத்தம் கொடுத்ததையும் அவனால் மறக்க முடியவில்லை. சீதாவை அவர்கள் செல்லமாய்க் கொஞ்சும் பாவனையில் அந்தரங்கமான அன்பின் இழை பளிச்சிடுவதை அவனால் ஏக்கத்தோடு உணர முடிந்தது. அந்தப் பிரிய உணர்ச்சிகளையெல்லாம் ஏற்று எருவாக்கி எத்தனை எழிலோடும், மனக் குறைகள் இல்லாமலும் வளர்கிறாள், சீதா! எல்லோரது ஆதரவையும், அன்பையும் ஏற்று வாழும் அதிர்ஷ்டம் அது! அன்பைத் தந்து, அன்பையே பிரதிபலிப்பாக ஏற்று, சிரிப்பதும், சிரிப்பைப் பரிசாகப் பெறுவதும்...ஓ! இந்த வெளியுலக வாழ்க்கையில்தான் எத்தனை ருசிகள்! எத்தனை சுவாரசியங்கள்!

வரதனின் சிந்தனையில் ஒரு பெரிய தடுமாற்றம் ஏற்பட்டது. நான் மட்டும்...நான் மட்டும் ஏன் பெற்றோரால் ஒதுக்கப்பட்டேன்? வரதன் சிறையிலிருந்து விடுதலை அடைந்த போது, அவனது ஊருக்குத் தகவல் அனுப்பப்பட்டது. ஆனால் அவனை அழைக்கவோ, ஏற்கவோ பெற்றோர் வரவில்லையே, ஏன்?... அவன் கண்களில் மீண்டும் நீர் துளித்தது. மிகப் பெரிய சிந்தனைக் குழப்பம் ஏற்பட்டு விட்டது அவனுள். நான்கு சுவர்களுக்குள் பொத்திப் பொத்தி வளர்க்கப்பட்ட கட்டுப்பாட்டுணர்வு மெல்ல தகர்ந்து விழ ஆரம்பித்தது. மனத்துள் பொருமிப் பீறிடும் உணர்வுகளின் தாக சாந்திக்காக அவன் ஒரு மாறுதலை விழைந்தான். ஆனாலும் நிறைவேறாது என்ற நிராசையின் துடிப்பு அடி இழையாய் நெஞ்சில் ஓடுவதை வேதனையோடு உணர்ந்தான்.

மாலை மணி நான்கு.

புல் வெளியில் போடப்பட்ட இருக்கைகளில் அமர்ந்தவாறே சிற்றுண்டிகளை ருசித்தவர்களின் குதூகலத்தில் ஒரே ஒருவன் ஒட்டவில்லை. இலேசாகத் தவழும் காற்றில் அவன் நெஞ்சு படபடத்தது. ஆயிற்று. இன்னும் சிறிது நேரத்தில் தான் மீண்டும் காலையில் புறப்பட்ட இடத்திலேயே அடைக்கப்படுவோம் என்ற நினைவின் சுமையைத் தாள முடியாமல் தவித்தான் அவன்.

''வரதன்! ஏன் என்னவோ போலிருக்கிறாய்? இன்னும் கொஞ்சம் டீ சாப்பிடுகிறாயா?'' என்றார் சரவணன்.

''வேண்டாம், ஸார்!''

''தலையை வலிக்கிறதா?'' என்றாள் கனகா.

'இல்லை' என்ற பாவனையில் தலையசைத்தான் அவன். பேசினால் அழுகை குமுறிவிடும் போலிருந்தது.

''வரதனுக்கு என்னுடைய பொம்மைகளைப் பிரசன்ட் பண்ணட்டுமா அப்பா?'' என்றாள் சீதா. பதிலுக்குக் காத்திராமலே தன் பொம்மைகளையும், பந்தையும் கொண்டு அவனிடம் தந்தாள் அவள்.

''வேண்டாம்.'' மறுத்தான் அவன்.

''எடுத்துக்கொள் வரதா!'' என்றார் சரவணன்.

''வேண்டாம், ஸார்!''

''உனக்குப் பாப்பா ஆசையாகத் தருகிறாள். எடுத்துக்கோப்பா!'' என்றவாறே அவனைப் பற்றித் தன்னருகே இழுத்தாள் கனகா.

''வேண்டாம்மா!''

''ஏன் வேண்டாம்?''

''நான் அங்கே விளையாட முடியாது.''

''ஏன் விளையாட முடியாது?''

''எனக்கு வேலையே சரியாக இருக்கும். விளையாட விடமாட்டாங்க...''

''த்சொ! த்சொ!'' கனகாவின் மனத்துக்குள் பாசம் உருகியது. ''யார் பெற்ற பிள்ளையோ! எட்டு வயதிலேயே அநாதையாக இருக்கான்!''


''அப்படின்னா இந்தச் சட்டை, கால்சராய்களை எடுத்துக்கோ. அதைப் போட்டுக்கலாமில்லையா?''

''உம்!'' என்று அவன் பிரியத்தை மறுதளிக்க முடியாத பலவீனத்தோடு அதைப் பெற்றுக் கொண்டான்.



SHANTHI
COOLING POWDER
SHANTHI
COOLING POWDER
சாந்தி







சிறிது தூரத்தில் தோட்டக்காரன் ரப்பர்க் குழாயால் செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான்.

''குழாயாலே தண்ணீர் பீய்ச்சினால் சீக்கிரமா வேலை முடிஞ்சுடும். நாங்கள் எல்லாம் வாளியாலே கிணத்திலே இழுத்து ஊத்தணும்!''

''உன்னாலே இழுக்க முடியுமா வரதன்?'' என்று வியப்புடன் வினவினாள் சீதா.

''சின்ன வாளியைக் கட்டி இழுப்பேன். சின்னக் கிணறுதானே?'' என்று அவளால் செய்ய முடியாத ஒரு வேலையைத் தன்னால் செய்ய முடியும் என்ற பெருமிதத்துடன் கூறினான்.

'' என்னங்க ! நாம் இந்தப் பையனை அழைத்து வந்து அவனுடைய ஏக்கங்களை உசுப்பி விட்டோமோன்னு பயமா யிருக்கு. இவனைப் பார்த்தாலே வயிற்றிலே என்னமோ பண்றது. எங்க அப்பா சின்ன வயசிலே நான் ஆப்பிளைக் கடித்துக் கொண்டு கொல்லைப் பக்கம் போனால் 'வேலைக்காரியோட மகன் எதிரில் ஆப்பிளைத் தின்னாதே. இல்லே, அவனுக்குப் பாதி கொடுத்துட்டுச் சாப்பிடு. என்னன்னு தெரியாம இருக்கிறவனுக்கு ஒன்றைக் காட்டி ஏமாற்றக் கூடாது'ன்னு சொல்வாங்க. அதுமாதிரி, சுதந்திரம், செல்வம், அம்மா அப்பா, அன்புங்கறதெல்லாம் என்னன்னு தெரியாதவனை அழைத்து வந்து அந்த உணர்ச்சிகளை யெல்லாம் காட்டி, அவனோட ஏமாற்றங்களைக் கிளறி விட்டோமோன்னு தோணுகிறது எனக்கு...'' என்று கலங்கும் குரலில் கூறினாள் கனகா.

''இதோ பார், கனகா! ஒரு நாளாவது அவனை நம்மால் சந்தோஷமாக வைத்துக் கொள்ள முடிந்ததேன்னு சமாதானம் பண்ணிக்கணும். இதுதான் வாழ்க்கை!'' என்றார் சரவணன்.

காரில் ஏறிக் கொண்டவனுக்கு, 'இவரே என் அப்பாவாக, இந்த அம்மாவே என் அம்மாவாக, சீதா என் தங்கச்சியாக இருந்தால்...? இந்த வீட்டிலேயே நான் இருக்கலாம்... இதே மாதிரி வயிறு முட்ட ருசி ருசியாகச் சாப்பிடலாம். நல்ல நல்ல டிரஸ் பண்ணிக்கலாம். அம்மா கட்டி யணைச்சு முத்தம் தருவாங்க. கோப்பை உடைஞ்சாக் கூடப் பரவாயில்லைன்னு வேறு கோப்பையிலே காப்பி தருவாங்க... ஓ! ஓ! இந்த வாழ்க்கை எவ்வளவு நல்லா இருக்கும்!' என்று எண்ணம் ஓடியது.

அதோ செல்லரித்த கேட். சுற்றிச் சூழ்ந்த மரங்கள், பழுதடைந்த கட்டிடம். அதே காவற்காரன், அதே சிஸ்டர், அதே பையன்கள்! அந்தப் பழைய வாழ்க்கையின் அலுப்பில், அதில் வாழ்ந்தாக வேண்டுமே என்ற வெறுப்பில் அவன் மனத்துள் துக்கம் பாறையாகக் கட்டிக் கொண்டது. பயிற்சி பெற்ற பழைய வேதனை அது.

சிஸ்டரின் ஆணைப் பட்டியல்படி நின்று, அன்றைய இரவு உணவாகத் தேங்காய் போட்ட பச்சரிசிக் கஞ்சியைக் குடித்த பின் வராந்தாவில் படுத்தான் வரதன். ஒரே நாளில் மிகப் பெரிய ஏற்றமான அறுசுவை உண்டிகள்... மிக இறக்கமான கஞ்சி... ஆனால் பீற்றல் பாயில் படுத்ததும் ஓடிவரும் தூக்கம் இன்று ஏன் வரவில்லை?


ஒரு மாபெரும் சுதந்திர உணர்வைப் பற்றிய கனவும் மேம்பட்ட வாழ்க்கை முறைகளைக் கண்கூடாகக் கண்ட ஆத்திரமும் அறுசுவை உண்டிகளை உண்டு அறிய நேர்ந்த ருசி பேதமும் அவனைத் தூக்கத்துக்குத் துரத்தவில்லையோ?

அறிவுப் புலன் மனத்தை வாட்டுகிறது. ஆனாலும் மாற்று வழியின்றித் திகைத்து மருள்கின்றது. உடலுக்கு இந்த வாழ்வு வேண்டும். ஆனால் இது ஒரு வாழ்க்கையா?

உணர்வுக்கு ஒரு தாகம் வந்தாயிற்று. அதற்கு ஒரு மாற்று வேண்டும். ஆனால் வழி?

அவன் உடல் வாழவில்லை. உயிர் சாகவில்லை. ஓசையிடாது வெளிவந்த அவனது விசிப்புக்கள் இருளோடு இருளாகக் கரைகின்றன.

குருநாதருக்கு ஒருநாள் தருக!



ஸ்ரீ காமகோடிப் பெரியவர்களின் அருளாணைப்படி நாசிக் திரியம்பகத்தில், சீடர்களுடன்கூடிய ஸ்ரீ ஆதி சங்கரருக்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ துவாரகா பீடத்து சங்கராசாரிய ஸ்வாமிகள் இரண்டாண்டுகளுக்கு முன் இக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்தார்கள். இன்றைய இரு சங்கரர்களின் தொடர்பு கொண்டு ஆதிசங்கரருக்காக எழும்பியுள்ள இவ்வாலயத்தில் அன்றாட பூஜை தடையின்றி நடைபெறுவது அவசியமல்லவா ? இதை ஒட்டி நிரந்தர பூஜா நிதியம் ஒன்றினைத் திரட்டி, அதன் வட்டியிலிருந்து தினமும் வழிபாடு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு நாள் பூஜைக்கான மூலதனம் ரூ. 117 ஆகிறது. 365 ஆசாரிய பக்தர்கள் தலைக்கு ரூ. 117 அனுப்பினால் திரியம்பகத்திலுள்ள சங்கராலயத்தில் எந்நாளும் முறிவின்றி நித்தியப்படி பூஜை நடந்துவரும். அன்பர்கள் தங்களால் முடிந்த வரை ஒரு நாளுக்கோ, பல நாட்களுக்கோ பூஜைக்கான நிதியம் அனுப்பி வைக்கவேணும். அவர்களுக்கு ஜன்ம நட்சத்திரத்தன்று ஆசாரியப் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். தொகை அனுப்ப வேண்டிய முகவரி: Chairman, Sri Sankara Mutt Committee (Triumbak) 23/295, V... Road Chembur,, Bombay - 400071. □

17. ஓர் இரவில்

ஞானக்குயில்

ஜெகசிற்பியன்

பின்னிரவு நேரம். மணி மூன்று இருக்கும்.

மனித உயிர் ஒவ்வொன்றும் தான் மேற்கொள்ளவிருக்கும் நெடுந் துயிலுக்குத் தவிர்க்க முடியாததொரு தினசரிப் பயிற்சியான குறுந்துயிலில் ஆழ்ந்திருந்த அந்த நள்ளிரவு கடந்த நேரத்தில், அமைதியே அமைதி காணப் போய்விட்டாற்போல் ஒரு ஸ்தம்பித்த தன்மையில் இறுகிக் கிடந்த அம்மூதுமை இரவுப் போதில் அந்தக் கன்னிகா மடத்தின் பின்புறத்தே, நானாவித மரஞ்செடி கொடிகள் அடர்ந்து செழித்து வளர்ந்துள்ள பெரியதொரு தோட்டத்தில் காரிருள் சூழ்ந்து கிடக்க, அத்தோட்டத்தின் ஓரத்தில் உயரமான மதில் சுவரையொட்டிச் சென்ற கொடி வழியொன்றின் பக்கவாட்டில், இருளோடு இருளாய்ப் புதைந்து நின்ற ஒரு வாதுமை மரத்தின் பின்னுலிருந்து கரிய உருவம் ஒன்று வெளிப்பட்டது. அது மெல்ல மெல்லப் பதுங்கிப் பதுங்கி நடந்து முன்னேறி, அங்கு குறுக்கிட்ட ஒரு செம்மண் பாதையில் இறங்கி நின்று, தொலைவில் பனியிலே கரைந்த ஒளியம்போல் மங்கலாகத் தெரிந்த அப்பழைமையான கன்னிகா மடத்துக் கட்டிடத்தைப் பயப் பிராந்தியோடு திரும்பிப் பார்த்து விட்டு மீண்டும் அதே செம்மண் பாதையில் விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தது.

அந்தச் செம்மண் பரப்பிய பாதை அவ்விசாலமான தோட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு இடதுபுறமாகத் திரும்பிக் கிழண்டை மதில் சுவரின் தென் மூலையிலிருந்து ஒரு சின்ன இரும்பு 'கேட்'டின் எதிரே போய் முடிவடையும்.

கன்னிகா மடத்துக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் வேறு சில சாமான்களையும் ஏற்றிக் கொண்டு வரும் கட்டை வண்டிகள், மாட்டு வண்டிகள், மூன்று சக்கர டெம்போக்கள் முதலானவற்றுக்காகவும், தோட்டிகள், சலவையாளர்கள், மற்றும் தச்சர்கள், கொத்தர்கள் வந்து போவதற்காகவும் பிரத்தியேகமாக அமைந்திருந்தது அந்தச் சிறிய பின்புற வாயில். இரும்புக் கம்பிகளாலான அதன் ஒற்றைக் கதவு தேவையானபோது மட்டுமே திறக்கப்படும்; மற்ற நேரமெல்லாம் பூட்டியே கிடக்கும். உயரம் அதிகமில்லாத கதவுதான் அது. உள்ளிருந்து வெளியே, அல்லது வெளியிலிருந்து உள்ளே ஏறிக் குதித்து விடலாம். ஆனால் அப்படி எவரும் எளிதில் செய்து விட முடியாது. காரணம் —

அந்த வாயிலின் பக்கவாட்டில், மதில் சுவரைச் சார்ந்து உட்புறமாக ஒரு சிறிய வீடு இருந்தது. அதன் மேல்கூரை சீமை ஓடு வேயப்பட்டது. ஒரு கதவும், இரண்டு சன்னல்களும் உண்டு. கன்னிகாமடத்தின் தோட்டக்காரனுக்காக ஒதுக்கப்பட்ட வீடு அது. அவன் அதிலே தன் மனைவி, இரு பிள்ளைகளோடு குடியிருந்து வந்தான். அவனுக்குப் பகலில் தோட்ட வேலை; இரவில் காவல் காக்க வேண்டிய பொறுப்பு. இதனால் அந்தப் பின்புற வாயில் கதவின் சாவியும் அவன் வசமே ஒப்படைக்கப் பட்டிருந்தது. மடத்துத் தலைவியின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்; மிகவும் கண்டிப்புப் பேர்வழி; கடமை தவறாதவன்; அவனுக்கு வயசு ஐம்பதுக்கு மேல் ஆகிறது.

இரவில் ஒன்பது மணிக்கு ஒரு முறையும், பன்னிரண்டு மணிக்கு ஒரு முறையும், மூன்று மணிக்கு ஒரு முறையும் — ஆக மூம்



முறை, கையில் தடியும், லாந்தர் விளக்குமாக அந்தக் கன்னிகா மடத்தின் மதில் சுவர் ஓரமாய் உட்புறத்தில் சுற்றி வருவான். தினசரி அவன் தவறாமல் செய்து வரவேண்டிய கடமைகளில் இது ஒன்று. அதன்படி இன்றும் சற்று முன் தனது கடைசி ரோந்து சுற்றலை முடித்துக் கொண்டு வீட்டுக்குள் சென்று கதவைச் சாத்தினான். கையில் கொண்டு வந்த லாந்தர் விளக்கும் அணைக்கப்பட்டது. அவன் படுத்து விட்டான் போலும்.

இருளரக்கி அன்று தன் கரும் போர்வையைப் பரக்க விரித்துப் போட்டு வைத்திருந்தாள். கிருஷ்ண பட்சத்து இரவு. கட்புலனைச் செயலற்றதாக்குவதில் பெரு வெற்றி கண்டு விட்டிருந்த அந்த மையிருட்டில் தானும் பிரவேசித்துப் புரண்டு உருண்டால் அக்கரிய மசியைப் பூசிக் கொண்டு 'கறுப்பாகிவிடுவோம்' என்று அஞ்சியோ என்னவோ அப்போது காற்றுக்கூட அந்தர்தியானமாகிவிட்டிருந்தது. ஒரே புழுக்கம். அவ்வளவு பெரிய தோட்டத்தில் இருந்த அத்தனை மரஞ் செடி கொடிகளும் ஆடாமல் அசையாமல் அப்படியே சித்திரக் கோடுகளாய் நின்றிருந்ததால் சிற்றொலிகூட எங்கும் கேளாமல் அவ்வட்டாரம்முழுக்க ஸ்மசான அமைதியில் புதைந்து கிடந்தது.



இத்தகையதோர் அரிய' வாய்ப்பினையே இவ்வளவு நேரம் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாற்போல் அந்தக் கரிய உருவம் பின்புற வாயிலை நோக்கி — அச்செம்மண் பாதையோரம் சிறு சுவர் போல் நெருக்கமாக வளர்ந்திருந்த 'கேனு' செடிகளை யொட்டிப் பதுங்கிப் பதுங்கி — மெல்ல மெல்ல முன்னேறிக் கொண்டிருந்தது. இன்னும் ஒரு முப்பது கெஜ தூரத்தைக் கடந்தால் அவ்வாயிலை அடைந்து விடலாம்.

''சுகந்தி!''

இருளின் நிழலாய் நகர்ந்து கொண்டிருந்த அவ்வுருவம் இந்தச் சன்னமான குரல் கேட்டுப் பேரதிர்ச்சியுற்றாற்போல் அப்படியே ஸ்தம்பித்து நின்றது. மறு கணம், அந்த உருவத்தின் மீது பளிச் சென்று ஓர் ஒளிப் பாய்ச்சல்! அங்கே—

இரண்டு அங்குல சிவப்புப் பார்டருடன் கூடிய கறுப்புப் புடவை; மணிக் கட்டுவரை கை வைத்துத் தைத்த வெள்ளைச் சட்டை; மூக்கில், காதில், கழுத்தில், கையில் எவ்வித அணிமணியும் இல்லை; முக்காடிட்ட தலை — இப்படியோர் எளிய கோலத்தில் அழகே வடிவான இளம் பெண்ணொருத்தி கையில் ஒரு சிறு துணி முடிச்சுடன் வேர்த்து விறுவிறுத்துப் பயத்தால் கிடு கிடு வென்று நடுங்கியபடி நின்றிருந்தாள்.

இப்போது அவள் மீது பாய்ச்சப்பட்டிருந்த ஒளி பட்டென்று அணைந்தது. அதைத் தொடர்ந்து அப்பாதையின் அருகிலிருந்த பவழமல்லிச் செடியொன்றின் சிறு கிளைகள் அசையும் சலசலப்பொலி. அங்கிருந்து ஒரு நெடிய உருவம் அவளை நோக்கி மெல்ல நடந்து வந்தது.

''சுகந்தி!... நான் யார் என்று தெரிகிறதா?'' — கனிவும் மென்மையும் கலந்த குரல்.

உடனே பதில் சொல்ல முடியாமல் திக்கித் திணறிய அந்தப் பெண், ''தெரிகிறது, மதர்!'' என்று நடுங்கிக் குழறினாள்.

ஆம்; அங்கே வந்த உருவம் வேறு யாருமல்ல; அந்தக் கன்னிகா மடத்தின் தலைவியான ஜீத்தா பே[illegible] என்பவளே தான்! அவள் கையில் ஒரு டார்ச் லைட் இருப்பது அவ்விருட்டிலும் இலேசாகத் தெரிந்தது.

''இப்படி இங்கே வா!''

பாதையோரம் இடுப்பளவு உயரத்தில் பெரிய பெரிய பூக்களுடன் நெருக்க வரிசையாய் வளர்ந்திருந்த கல்வாழைச் செடிகளுக்கு மறுபுறத்தே வந்து நின்று கொண்டாள் அவள். பீதியால் நடுங்கிக்கொண்டிருந்த புஷ்ப சுகந்தி என்ற அந்தப் பெண்ணும் பாதையை விட்டுச் செடிகளை நீவிக்கொண்டு தயங்கித் தயங்கிப் போய் மறுபுறம் பனி படர்ந்த புல் தரையில் நின்றாள்.

''இப்போது நீ இந்த விநாடியில் என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய் சுகந்தி?'' என்று சிரிப்புக் கலந்த மெல்லிய குரலில் கேட்டுக்கொண்டே அவள் அருகில் இன்னும் சற்று நெருங்கி வந்து நின்றாள் மடத்துத் தலைவி.


தலைகுனிந்து நின்று கொண்டிருந்த சுகந்தி இதற்குப் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாயிருந்தாள். ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்து அவ்வப்போதைய உணர்ச்சிகளையும் மனநிலைகளையும் புரிந்து கொள்ள முடியாத வகையில் அங்கே இருள் ஆட்சி செய்து கொண்டிருந்ததால் பேச்சுக் குரலிலிருந்து மட்டுமே ஒருவரது மனவோட்டத்தையும் உணர்ச்சிப் பிரதிபலிப்பையும் மற்றவரால் உய்த்தறிய முடிந்தது.

''அதாவது, இந்த மடத்தை விட்டுத் தப்பி வெளியேறும் உனது இத்தீவிர முயற்சியில் நான் குறுக்கிட்டது பற்றி இப்போது நீ என்ன நினைக்கிறாய் என்று கேட்கிறேன்!''

''எதையும் இப்போது நான் நினைத்துப் பார்க்க முடியாத நிலையில் இருக்கிறேன், மதர்!''

''நான் கேட்பது அதுவல்ல மகளே! இந்த மடத்தில் நீ சற்று முன் இருந்த அறையிலிருந்து எழுந்து இவ்வளவு தூரம் வரும்போது, இப்படி யாராவது எதிர்ப்பட்டு உன்னைத் தடுத்து நிறுத்தினால் அப்போது என்ன செய்யலாம் என்று ஏதேனும் நினைத்திருப்பாய் அல்லவா? அதன்படி இப்போது என்ன செய்ய உத்தேசித்திருக்கிறாய்? அதாவது, என்னிடம் வாதிட்டு எப்படியும் இங்கிருந்து வெளியேறிவிடுவது என்று நினைக்கிறாயா? அல்லது உன் முயற்சியைக் கைவிட்டு உனது முடிவை மாற்றிக்கொண்டு உள்ளே திரும்பிப் போய் விடுவது என்று கருதுகிறாயா?''

''என்னை மன்னிச்சுடுங்க, மதர்!... நான்... நான்...''



''யாரையும் எதற்காகவும் மன்னிக்கும் அதிகாரம் எனக்கு இல்லே, சுகந்தி! தனிப்பட்ட முறையில் நீ எனக்கு ஏதேனும் தீமை செய்திருந்தால் உன்னே நான் மன்னிக்கலாம்; அப்படி எதுவும் செய்யவில்லேயே! மனிதரிடம் கேட்க வேண்டியதை மனிதரிடம் கேள்; கடவுளிடம் கேட்க வேண்டியதைக் கடவுளிடம் கேள்! இப்படி எதை எவரிடம் கோருவது என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால்தான் இந்த உலகத்தில் தவறுகளும் பாவங்களும் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கின்றன. துன்பங்களும் துயரங்களும் நீங்காது நீடித்து இருந்து கொண்டேயிருக்கின்றன.''

''......''

''சரி; என் கேள்விக்குப் பதில் சொல்லாததிலிருந்து அப்படி எதையும் நீ முன் கூட்டியே நினைக்கவில்லே என்று நினேக்கிறேன். அவ்வாருனல் இங்கிருந்து வெளியேறும் உன் முயற்சி எப்படியும் வெற்றி பெற்றே தீரும் என்ற பரிபூரண மான நம்பிக்கையில் வேறு சிந்தனேக்கே இடம் தராமல் வந்திருக்கிருய், 'அப்படித்தானே?''

''ஆமாம், மதர்.''

''ம்... நான் எப்படி இங்கே இந்த நேரத்தில் வந்து உன்னேத் தடுத்து நிறுத்தினேன் என்பது பற்றி உனக்கு ஏதேனும் தெரியுமா?''

''தெரியாது மதர்!''

''இப்படி நடக்கலாம் என்ருவது எதிர்பார்த்தாயா?''

''இல்லே....''

''அதைத் தெரிந்துகொள்ள இப்போது விரும்புகிருயா?''

''.....''

''சொல்கிறேன் கேள்: இன்று மாலே முதலே — நீ ஒடுக்கத் தியானம் முடிந்து எழுந்து வந்ததிலிருந்தே — உன் முகம், உன்னுடைய நடவடிக்கை, உனது பேச்சு ஆகியவற்றில் ஏதோ சில மாறுதல்கள் இருப்பதைக் கூர்ந்து கவனித்து வந்த நான், உள்ளூற ஏதோ சந்தேகப்பட்டு உன்னே மேலும் கவனிக்கத் தொடங்கினேன். நேரமாக ஆக எனது அந்தச் சந்தேகம் வலுக்கவே இன்னும் கவனத்துடன் உன்னேக் கண்காணித்தேன். இரவு நீ படுக்கைக்குச் சென்ற பின்னும் உனக்குத் தெரியாமல் உன் அறைக்கு வந்து ஓர் இளம் கன்னிகா ஸ்திரீயின் கட்டிலில் —அவளே வேருேர் அறைக்கு அனுப்பிவிட்டு — படுத்திருந்து இரவெல்லாம் கண் விழித்தபடி உன்னேக் கவனித்துக் கொண்டிருந்தேன். நீயும் திட்டமிட்ட சரியான நேரத்தில் எழுந்து, சரியான வழிகளே வெகு சாமர்த்தியமாகவே கண்டுபிடித்துக் கடந்து வந்து இந்தத் தோட்டத்தை அடைந்தாய். நானும் உன்னேப் பின்தொடர்ந்து வந்தேன். நீ இந்நேரத்தில் இவ்விடத்தை அடைய எவ்வளவு நேரம் யோசித்து, என்னென்ன திட்டங்கள் போட்டு, எப்படியெப்படி நடித்து, எத்தனே கஷ்டப்பட்டு இரவெல்லாம் கண்விழித்தாயோ அதேபோல் நானும் அத்தனே பாடுகளும் பட்டுத்தான் இங்கே வந்து உன் எதிரில் இதோ நிற்கிறேன்.''

மெல்லச் சிரிக்கும் ஒலி; மடத்துத் தலேவியின் சிரிப்புத்தான் அது. அவள் மேலும் தணிந்த குரலில் சொன்னுள்:

''சுகந்தி! இதுபோன்ற சம்பவம் எனக்குப் புதிதல்ல; நீயும் இம்மாதிரி பலவற்றைக் கேள்விப்பட்டிருப்பாய். இங்கிருந்து ஓடிப் போக முயற்சி செய்த பலரை நானே பிடித்திருக்கிறேன்; மற்றவர்களே விட்டும் பிடிக்கச் செய்திருக்கிறேன். அவர்களுக்கெல்லாம் கடுமையான தண்டனேயும் விதித்திருக்கிறேன். ஆனுல் உன் விஷயம்?....இது எனக்கு மட்டுமல்ல, இந்த மடத்தின் சரித்திரத்திலேயே முற்றிலும் புதிதானது. முதல தடவையாக நடப்பது. ஆமாம்; உன்நிலேயில் இருந்துகொண்டு —அதாவது, இன்னும் ஒருசில நாட்களில் என்னேப்போல் 'நன்'ஞகவிருக்கிற நிலேயில் — எவரும் இதுவரையில் இங்கே இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட்டதே இல்லே. ஆகவே உன் விஷயத்தில் நான், இம்மாதிரியான காரியத்தில் ஈடுபட்ட மற்றவர்களிடம் நடந்து கொண்டது போல் நடந்து கொள்ளப் போவதில்லே. அப்படி ஒரு முடிவுடன்தான் இப்போது உன்னேப் பின்தொடர்ந்து வந்து இங்கே நிற்கிறேன்.''

ஒரு நீண்ட மௌனம். ஒரு நெடிய பெருமூச்சுடன் மீண்டும் மடத்துத் தலேவியே கேட்டாள்: ''அது சரி; நீ ஏன் இங்கிருந்து வெளியேறுவது என்ற முடிவுக்கு வந்தாய்?''

''மதர்!... மதர்!....'' — மேலே பேச முடியாமல் விம்மலும் பொருமலுமாகத் திணறினுள் அந்தப் பெண்.

இதுகாறும் தன் இரு கைகளேயும் பின்னுல் தொங்கப் போட்டுக் கொண்டு ஒரு சிலேபோல் நின்றிருந்த அந்த முதிய துறவினி ஜீத்தா, மெல்ல ஓரடி முன்னுல் வந்து தன் வலது கையை நீட்டி அந்தப் பெண்ணின் தோளில் இதமாகத் தட்டிக் கொடுத்தாள். ''அழாதே சுகந்தி! நான் உன் மதர்தான். என்னேத்


ஸிங்கர்
அளிப்பவை
சிறந்த
பொருட்களே
ஸிங்கர்* ஆயில்
'மல்டி-ப்ரொடெக்டிவ்'
ஆகும்.
அசலான
ஸிங்கர்*
ஊசிகளின் மீது
ஸிங்கர் என்ற
பெயர் உள்ளது.
ALL-PURPOSE
HIGH QUALITY
SINGER oil
12
SINGER
Needles
2020
(15 x 1)
12 SIZE 16
ஸிங்கர் அளிப்பவை சிறந்த பொருட்களே

தான் நீ முதலில் 'அம்மா' என்று அழைத்தாய். பதினேழு வருஷங்களுக்கு முன்னால் தவழ்ந்து எழுந்து தள்ளாடித் தளர் நடையிட்டு நடந்த அந்தச் சின்னஞ் சிறு குழந்தைப் பருவத்தில் நீ முதன் முதலாக உன் நீலக் கண்களை என் கண்களிலே பதித்துக் கொண்டு உன் சிவந்த செப்பு வாய் திறந்து, 'அம்மா' என்று மழலையாய் இசைத்து அழைத்த அந்தக் காட்சி இன்னமும் என் மனத்தில் பசுமையாய் இருக்கிறது. நான் உன்னைப் பெற்றவள் இல்லைதான்; ஆயினும் பெற்றவளைவிட மேலாக உன்மேல் அன்பு செலுத்தியவள், அரவணைத்து வளர்த்தவள், ஆகவே, என்னிடம் நீ எதையும் மறைக்கத் தேவையில்லை. எதுவானாலும் மனம் திறந்து தாராளமாகச் சொல்லலாம்...'' என்று இளகித் தளதளக்கும் குரலில் கூறினாள். பின், ''சரி; இப்போது சொல்! நீ ஏன் இந்த மடத்தை விட்டு ஓடிப் போவது என்ற முடிவுக்கு வந்தாய்?'' என்று சற்றே கண்டிப்புடன் வினவினாள்.

இப்போது கொஞ்சம் தைரியம் வரப் பெற்றவள் போல் மெல்ல அசைந்து நிமிர்ந்து மிக மென்மையான குரலில் கூறினாள் சுகந்தி: ''எனக்கு... எனக்கு 'நன்'னாக விருப்பமில்லை, மதர்!''

இதைக் கேட்டுச் சிறிதும் வியப்போ அதிர்ச்சியோ அடையாதவள் போல், மெல்லச் சிரித்த மடத்துத் தலைவி, ''அப்படியா?...சரி; விருப்பமில்லை என்ற இந்த எண்ணம் உனக்கு எப்போது தோன்றியது?'' என்று கேட்டாள்.

''ஆரம்பத்திலேயே...''

''அதாவது, உன்னை 'நன்'னாக்குவது என்ற முடிவுக்கு நாங்கள் வந்து உன்னிடம் தெரிவித்தபோதா?''

''ஆமாம், அம்மா!''

''நான் இதை ஓரளவுதான் நம்புவேன். ஏனென்றால் நாங்கள் அந்த முடிவை உன்னிடம் சொன்னபோது நீ உடனே மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டாய்; அது நினைவிருக்கிறது அல்லவா?''

''வாஸ்தவம்தான் மதர்! ஆனால் நான் அப்படி என் ஒப்புதலை அப்போது தெரிவித்ததற்குக் காரணம் வேறு.''

''என்ன அது?''

''புத்தி தெரிந்த நாள் முதலே நான் இந்த மடத்தில் ஓர் அநாதை என்கிற எண்ணத்துடன் வளர்ந்து வந்தவள். எனக்கு ஒரு தாய் இருக்கிறாள் என்பது தெரியுமே தவிர, அவள் உயிரோடு இருக்கிறாளா, அப்படி இருந்தாலும் என் நினைவு அவளுக்கு இருக்குமா, என்னை அவள் என்றைக்காவது ஒரு நாள் பார்க்க வருவாளா, வந்து என்னை இங்கிருந்து அழைத்துப் போவாளா என்றெல்லாம் நான் ஒருநாளும் நினைத்ததில்லை; கனவுகூடக் கண்டதில்லை. ஆக, என் வாழ்நாள் முழுக்க இந்த மடத்திலேயே இருக்கப் போகிறவள் என்ற உறுதிப்பாட்டுடன் இருந்ததால், இங்கு என்னைப் போல் அநாதைகளாய் இருக்கும் பல பெண்களிடையே நானும் ஒருத்தியாக இருப்பதை விட அவர்களைக் காட்டிலும் அந்தஸ்து, மதிப்பு, மரியாதை, இன்னும் வேறு சில வசதிகள், சுகங்கள் எல்லாம் கிடைக்கக் கூடிய வாய்ப்பு கன்னிகா ஸ்திரீயாக ஆவதில் இருக்கிறது என்பதை அறிந்து, அந்த ஆசைகளின் உந்துதலாலே நான் 'நன்' ஆக முன்வந்தேன். அதனால் அதை அப்போது கிடைக்க முடியாத நல்ல வாய்ப்பென்றும் கருதினேன். மற்றப்படி...''

''மற்றப்படி?''

''இன்றைக்குச் சாயந்திரம் தியானப் பிரசங்கத்தில் நம் சாமியார் சொன்னதுபோல....''

''சரி, புரிந்து கொண்டேன். ஆனாலும் உன் மனமாற்றத்துக்கு நான் வேறொரு முக்கிய காரணத்தையும் சொல்வேன். அதாவது, இன்று காலை உன்னை இங்கிருந்து அழைத்துப் போவதற்காக வேதமூர்த்தி என்ற ஒரு கனவான் வந்து போனதை நீ எப்படியோ, யார் மூலமாகவோ கேள்விப்பட்டிருக்கிறாய். அவர் உன் தாயார் எழுதிய கடிதம் ஒன்றைக் கொண்டு வந்தார் என்பதையும் அறிந்திருக்கிறாய். அதனாலேயே 'நன்'னாகும் விருப்பத்தைக் கை விட்டு விட்டாய், இல்லையா?''

கல்வெட்டும் எதிர்க்கும் கொடுமை

நற்பொழுது வரதட்சிணை கொடுத்துத் திருமணம் செய்வதைப் பலர் எதிர்க்கிறார்கள். வரதட்சிணைக்கு விஜயநகர மன்னர்கள் ஆட்சியிலேயே தடை விதித்திருக்கிறார்கள் என்ற செய்தியைத் திருவிரிஞ்சிபுர திருமால் கோவில் கல்வெட்டினால் அறிய முடிகிறது.



இரண்டாம் தேவராயன் மூன்றும் ஆட்சியாண்டில் கோயிலில் கூடி அறநிலை நிரப்பும் பத்திரம் செய்து, மேற்குறித்த திருமணப் பரிசு ஒழிப்பினைச் செய்திருக்கிறார்கள். கட்டுப்பாட்டை மீறினால் சாதி விலக்குடன் அரச தண்டனையும் பெறுவர்.

நகவல்: ஸ்ரீரங்கம் ஸ்ரீதரன்


''ஆமாம், மதர்! ஆனால் முன்பு சொன்னவையும் உண்மைதாம்.''

''நாங்கள் உன்னை எந்த நிலையிலும் 'நன்' ஆகும்படிவற்புறுத்தியதில்லையே?''

''அதை நான் மறுக்கவில்லை அம்மா! ஆனாலும் கன்னிகா ஸ்திரீயாக தீட்சை பெறும் நாள் நெருங்கிவிட்ட சமயம் அதுபற்றி மறு பரிசீலனை செய்யும்படி நேரிட்டது. அதற்குக் காரணம், நேற்று மாலை 'நன்'னாவதற்கு முன் நடைபெற விருக்கும் சில சடங்கு சம்பிரதாயங்களை நீங்கள் எனக்கு விளக்கிக் கூறியதுதான். அதாவது, என்னை முதலில் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும் ஒரு மணப் பெண்ணைப் போல் நன்றாகச் சிங்காரித்து நிலைக்கண்ணாடி ஒன்றின் முன் நிறுத்து வீர்கள்; பிறகு அந்த அலங்காரங்களைக் களைந்துவிட்டு 'நன்' உடை தரிக்கச் செய்து அதையும் அதே கண்ணாடியில் பார்க்கச் சொல்வீர்கள். அவ்விரண்டில் எதை விரும்புகிறேன் என்று கேட் பீர்கள். நான் 'நன்'னாக விரும்புவ தாய்ச் சொல்வேன். பிறகு என் தலைக் கூந்தல் மழிக்கப்படும். எனக்கு 'நன்' உடை உடுத்தப்படும். நான் கோயில் பலிபீடத்துக்கு முன்னால் நெடுஞ்சாண் கிடையாய்ப் படுத்துக் கிடப்பேன். என் மீது கறுப்புப் போர்வை ஒன்று போர்த் தப்படும். அப்போது சாவு மணி அடிக் கப்படும்!... இவற்றையெல்லாம் எண் ணிப் பார்த்தேன். பயம் என்னைப் பிடித்து உலுக்க ஆரம்பித்து விட்டது. அந்தப் பயமே என்னுள் ஒருவிதத் துணி வையும் ஊட்டியது. அதன் தூண்டுத லால்தான் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் இந்த மடத்தை விட்டு வெளியே ஓடிப் போய் விடுவது என்ற முடிவுக்கு வந்தேன்.''

சற்று நேரம் அவ்விருவரிடையே ஒரு பயங்கர அமைதி நிலவியது.(தொடரும்)

கவிதா



அவன் கையில் அதென்ன புத்தகம்?

அவன் கால்களைப் பாருங்கள், தெரியும்!

இளம் பருவத்தினருக்கு இன்பம் கூட்டும் விஷயம் இல்லாவிட்டால் கால்கள் அப்படி விஷமம் செய்யுமா? விஜயநிர்மலா டைரக்ட் செய்து, விஜயநிர்மலாவே நடிக்கும் இந்தப் படத்தில் விஜயநிர்மலா வழங்கும் காட்சி இது! சபாஷ் பெறும் டைரக்ஷன்!

அதை அடுத்து...

அவளது கற்பையே சூறையாட வரும் மாதவ மேனன் பலவந்தப்படுத்தும் காட்சி படுகையக் றையை விட்டுப் பாதைக்கே வந்து சகதியைப் பூசிக் கொள்கிறது!

கதைக்குக் கால் இல்லை என்பார்கள். அப் படை அஸ்திவாரம் வலுவாக இல்லாததைத் தான் இப்படிக் குறிப்பிடுகிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால் கவிதை என்னும் இப்படக் கதைக்குக் கால் இல்லை என்று கூறி விட முடியாது. சரியான அஸ்திவாரத்தில் நிற்கும் இந்தப் பிரச்னைக் கதை தனக்குக் கால் இருக்கும் தைரியத்தில் பல இடங் களில் கால் போன போக்கில் போகத் தொடங்கி விடுகிறது. பலன், சிறிய பட மானாலும் பெரிய படத்தைப் பார்த்துச் சோர்ந்து விட்டது போன்ற பிரமை தட்டுகிறது.

சுருக்கமாகக் கதை இதுதான்:

ஸ்ரீதேவி ஓர் ஏழை விதவை. அவளது வறுமையும் பாச உணர் வும் அவளை மாதவமேனன் என்னும் செல்வந்தனின் கைப்பாவையாக்கு கிறது. வளரும் குழந்தை கவிதைக்கு ஆரம்பம் முதலே இது பிடிக்கவில்லை. வளர்ந்த பின்னரோ மாதவ மேனனின் மகன் சேதுவின் காதலியாகிறாள். சிந்தனைக்குச் செலவு வைக் கும் செழுமையான வசனங்கள் இப் பிரச்னைக் கதைக்கு உயிர் ஊட்டுகின்றன.

சேதுவின் தந்தை மாதவ மேனனே கவிதாவின் கற்பைச் சூறையாடும் கட்டத்தில் ஸ்ரீதேவியின் கையால் உயிர் விடுகிறார்.

இப்படி உயிர் ஊட்டி உயிர் விடும் கதை எப்பொழுது முடியும், எப்படி முடியும் என்று ரசிகர்களுக்குப் பிரச்னையைத் தோற்றுவித்தாலும், நடிப்பில் நாலுக்கு இரண்டு பழுது சொல்ல முடியாது; சினிமாத் திரையில் நல்ல நாடக நடிப்பு!

— அஷயம்


இன்ஸ்பெக்டர் விக்ரம் 1
ஒரு நாள் காலை.
கொள்ளைக்காரர்களின் ராஜாவான லால் சிங் பற்றிய
ஆராய்ந்து கொண்டிருந்தார்.
ஸார்! மல்ஹோத்ரா உங்களைக் காண வந்திருக்கிறார்.
உள்ளே அனுப்பு.
மல்ஹோத்ரா படபடப்புடன் வந்தார்.
விக்ரம்! நான் தொலைந்தேன்! எனக்கு உதவி செய்!
பம்பாய்த் திரை உலகப் பெரும் புள்ளி மல்ஹோத்ரா என்பது விக்ரமுக்குத் தெரியும்.
அமைதியா யிருங்கள்.
கொள்ளைக்காரன் என் கதாநாயகியை அபகரித்துக் கொண்டு போய் விட்டான்!
என்னது?
அது உண்மைதான் சார்!
அவளைப் பள்ளத்தாக்குகளில் எங்கேயோ கொண்டுபோய் விட்டான். படத்தின் கடைசிக் காட்சிகளை அவள் இல்லாமல் எப்படி எடுப்பேன்?
எனது திரைப் படம் அநேகமாக முடிந்துவிட்டது. நீ அவளை உயிரோடு திரும்பக் கொண்டுவரவில்லையானால் நான் சர்வநாசமாகிப் போவேன்
என்ன நடந்தது சொல்லு.
எனக்குத் தெரிந்ததைக் கூறுகிறேன்.
(தொடரும்)

டீன் ஏஜ் கதை 1

??!!

வி. சீனிவாசன்

இதுதான் கதை:

[இந்தக் காலத்தில் ''உண்மைக் கதை''களுக்குத்தான் வரவேற்பு அதிகம். எனக்கு உண்மைக் கதை எதுவும் தெரியாததால் ''உண்மைப் பெயர்க் கதை''யை எழுதுகிறேன். இதில் வரும் பாத்திரங்களின் பெயர்கள், மாதம், தேதி, வருடம், கிழமை இடங்களின் பெயர்கள் யாவும் உண்மையே. உண்மையைத் தவிர வேறில்லை. சம்பவம் மாத்திரம்தான் கற்பனை.]

அறிமுகம் :

கதை நடக்கும் இடம்: சென்னை நகரத்தின் ஒரு பகுதி. சென்னை நரகத்தில்தான்! அதில் வசிக்காதவர்களுக்கு அந்த வாய்ப்பு எப்படிக் கிட்டும்?

தியேட்டர்கள், ஷாப்பிங் ஸெண்டர், பார்க் எல்லாம் கதையில் வருகின்றன, 'டீன் ஏஜ்'காரர்களுக்காக. அவை இருந்தால் தானே கவர்ச்சி இருக்கும்?

(''இடங்களெல்லாம் பலமாக இருக்கிறதே. துப்பறியும் கதையா?'' — ஜெயா — என் மனைவி.


''அவசரப் படாதே. அதுதான் ஸஸ்பென்ஸ்.'')

அறிமுகம் தொடர்கிறது:

கதாநாயகி: பழமையும் புதுமையும் கலந்த பெயர்—வசந்தி — ஓ. கே. இதுதான் இப்போது ஃFஷன். (ஃF - நன்றி: துக்ளக்) கதாநாயகியின் வர்ணனை: காளிதாசனின் சகுந்தலாவை நினைத்துக் கொள்ளுங்கள். ஒரு மாற்றம்: டிரெஸ் மாத்திரம் ஃபுல் வாயில் (ஆமாம் துக்ளக் சார்! Fu எப்படி எழுதுவது?) அல்லது Fாரின் நைலக்ஸ்.

கதாநாயகன்: என் பெயரையே வைத்துக் கொள்கிறேன். ஏனென்றால் இது ''உண்மைப் பெயர்க் கதை'' ஆயிற்றே.

வர்ணனை: இந்தக் காலத்தில் அதுவும் ''டீன் ஏஜ்'' கதையில் யார் ஐயா கதாநாயகனின் வர்ணனையைப் படிப்பார்கள்?



மற்ற பாத்திரங்கள்:

[''சீக்கிரம் கதையை ஆரம்பியுங்கள். இப்படி 'போர்' அடிச்சா யாரும் கதையைப் படிக்கமாட்டா!''—ஜெயா]

சரி சரி. இதோ ஆரம்பித்து விடுகிறேன். வேறு பாத்திரங்கள் யாரும் வேண்டாம். No extras

ஆமாம், தலைப்பு?

சரி. கடைசியில் பார்த்துக் கொள்ளலாம்.

வசந்தி ஒரு டைப்பிஸ்ட். சரி. அவள் ஒரு ஸ்டெனோ. (ரூ. 210 - 280 கிரேட். No! No! Promote her) அவள் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையின் Material Control பிரிவில் பணி ஆற்றுகிறாள்.

அவன் Material Control பிரிவின் அதிகாரி.

அன்று சனிக்கிழமை. 30 ஜூன், 1973 (எப்படி, உண்மைத் தேதி முதலியன?)

ஜூலை மாதச் சம்பளம் அன்றே கொடுக்கப் படுகிறது. (இதுவும் உண்மைதான்.)

வசந்தியுடன் அவன் பேசியதே இல்லை. ஆனால் அவர்களின் கண்கள் பலமுறை பேசி இருக்கின்றன. அவள் சம்பளம் வாங்கியவுடன் ராயல் தியேட்டரில் (வில்லிவாக்கம்) ''உலகம் சுற்றும் வாலிபன்'' படம் பார்க்கப் போய்விட்டாள். அவன் அவளைத்....

தொடரவில்லை! (எப்படி சஸ்பென்ஸ்!)

அவன் 40ம் நம்பர் பஸ்ஸில் ஏறி எழும்பூர் ஸ்டேஷனை அடைகிறான். மணி 17.50 (இந்திய நேரப்படி) ''வேகா''வில் காப்பி சாப்பிட்ட அவன் எதிர் சீட்டில் அவள் அமர்ந்திருக்கக் கண்டான்.

ஒரு புன்னகை மலர்கிறது. அவனுடைய பில் கை மாறுகிறது.

ஸ்டேஷன் கௌண்டரில் பெரிய க்யூ. மாம்பலத்துக்கு ஒரு டிக்கெட் பெண்கள் க்யூவில் நின்று அவன் வாங்கிக் கொடுக்கிறான்.

பிளாட்பாரத்தில் ரயில் வந்ததும், பெண்கள் பெட்டியில் வசந்தி ஏறிக்கொண்டு 'டாடா' காட்டுகிறாள். அவனுக்கு ஏமாற்றம்.

நேரம்: 18.10 மணி.

மாம்பலம் ஸ்டேஷன். ஒரே இருட்டு. ''தயவு செய்து இந்த விலாசத்தில் என்னைக் கொண்டு விடுகிறீர்களா? நான் இந்தப் பேட்டைக்குப் புதிசு. வழி தெரியவில்லை''—வசந்தி.

அவன் விலாசத்தைப் படிக்கிறான்.

1001, லேக் வியூ ரோட், மாம்பலம்.

அவன் மனசில் ஒரு திட்டம் உருவாகிறது.

அவன் அவளைத் தொடருகிறான். ஸ்டேஷனுக்கு வெளியே வந்ததும் வசந்திக்குத் திகைப்பு ஏற்படுகிறது. ஆனாலும் தொடர்கிறாள்.

நேரம்: 18.17 மணி.

கதை



''புகைப் படத்தில் இருப்பதை விட இப்போது தலைவழுக்கை சற்று அதிகம்!'' என்ற குறிப்புடன் திரு சீனிவாசன் தம்மைப் பற்றி 'ரயில் கோச்' என்ற இணைப்புப் பெட்டித் தொழிலகத்தின் குடும்ப இதழில் பிரசுரமாகியுள்ள விவரத்தை அனுப்பியுள்ளார். அதன் சுருக்கம் வருமாறு:

சுமார் 39 வயதான திரு சீனிவாசன் பொறி இயல் துறையில் நல்ல அனுபவமும், திறமையும் பெற்றவர். ''மெட்டீரியல் கண்ட்ரோல்'' பகுதியில் 'போர் மென்'னுக்குப் பணியாற்றி வருகிறார். பாகிஸ்தானுடன் போர் மூண்டபோது ஐ. ஸி. எஃப். தேசப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டது. அப்போது 500 லாரிகளுக்கான உடல் பகுதிகளை மிகுந்த சிரமப்பட்டுத் தயாரித்தளித்தார். வில்லிஜீப் ஒன்றினை இணைப்புப் பெட்டித் தொழிலகத்தின் ஆம்புலன்ஸாக உருமாற்றி அளித்தார். பொறி இயல் வல்லுநரான இவர் நாடக இயல், விளையாட்டுத் துறை முதலிய பல கலைத் துறைகளிலும் ஈடுபாடு கொண்டிருக்கிறார்.



பலே பஹாமாஸ்!

மூன்று நூற்றாண்டுகளாகப் பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பஹாமாத் தீவுகள் ஜூலை பத்தாந் தேதி விடுதலை பெற்றன.


அரசியாரின் பிரதிநிதியாக இளவரசர் சார்லஸ் தலைநகர் நாஸ்ஸாவுக்கு வந்திருந்து விடுதலைப் பத்திரங்களை -- அரசியல் சட்டங்களை அளித்தார். "ஒன்னு சொல்றேன், நல்லாக் கேட்டுக்குங்க" என்பது போல் அவர் அருகே அமர்ந்திருப்பவர் பிரதமர் லிண்டன் ஓ. பிண்ட்லிங்.

கொலம்பஸால் கண்டுபிடிக்கப்பட்ட பஹாமாத் தீவுகள் பதினேழாம் நூற்றாண்டில் கடல் கொள்ளைக்காரர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன. ஆனால் தற்போது உலகின் செல்வம் கொழிக்கும் நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது பஹாமாஸ். அயல் நாட்டுப் பயணிகளை ஈர்த்து அந்நியச் செலாவணி சம்பாதிப்பது முக்கிய தொழிலாக இருந்து வருகிறது.

சுதந்திரம் பெற்ற போதிலும் பஹாமாஸ், காமன்வெல்த் நாடுகளில் ஒன்றாக விளங்க மனமொப்பியிருக்கிறது. -- பி. ஐ. எஸ்.

★

ஜெய்பூரில் போதார் ஸ்பின்னிங் மில்லின் நிர்வாகத்தினர் தங்கள் தொழிலாளர் நலனுக்காக ஓர் அழகான கோயிலைக் (பகவான் ராமச்சந்திர மூர்த்தி -- சீதாதேவி) கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் விரும்பிக் கேட்டதனால் நேசமாலே நிர்வாகிகள் இந்த அற்புதக் கோயிலை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்தக் கோயிலில் ஜூலை 2ந் தேதி 'பகவான் பிரதிஷ்டை' சாஸ்திரோக்தமாக நடைபெற்றது.



கிருஷ்ணவேணி தியேட்டர் அருகில் அவள் சற்றுத் தயங்கினாள்.

"இன்னும் ரொம்ப தூரம் போக வேண்டுமா?"

"இல்லை, இல்லை! இதோ பக்கத்தில்தான் இருக்கிறது!" அவன் குரலில் ஒரு நடுக்கம்.

ரோட்டில் இடதுபுறம் திரும்பி நடக்கிறான். அவள் வியப்பு அதிகமாகிறது.

நேரம்: 18.25 மணி.

ராஜகுமாரியில் காட்சி ஆரம்பிக்க இன்னும் ஐந்து நிமிடங்கள்தான் இருக்கிறது. தியேட்டர் அருகில் சிறிது தயக்கம்.

"என் காலெல்லாம் வலிக்கிறது. இன்னும் எவ்வளவு தூரம் நடக்க வேண்டும்?"

"இதோ அருகில் வந்து விட்டோம்."

நடையில் சற்றுச் சுறுசுறுப்பு. வசந்தியின் மனசில் ஒரு ஏமாற்றம்.

நேரம்: 18.40 மணி.

பனகல் பார்க்.

"இங்கே சிறிது இளைப்பாறிவிட்டுச் செல்லலாம்" — ஸ்ரீனிவாசன் கூறுகிறான்.

வசந்தியின் முகத்தில் மகிழ்ச்சியின் ரேகை ஓடுகிறது.

பனகல் பார்க்கின் ஒரு மூலை.

"பாவம்! என்னால் உங்களுக்கு அதிக சிரமம். நீங்கள்கூட இந்தப் பேட்டைக்குப் புதிது போலிருக்கிறது. விலாசத்தைக் கண்டு பிடிக்க இவ்வளவு அலைகிறீர்களே!"— வசந்தி.

"யார் சொன்னது அப்படி? நான் இதே மாம்பலத்தில் பிறந்து வளர்ந்தவன்தான். இதோ இந்த ஆர். கே. எம். பள்ளியில்தான் படித்தேன்" — ஸ்ரீனிவாசன்.

"அப்படியா? பனகல் பார்க்குக்கு நேராக இப்படி உஸ்மான் ரோடு வழியாகவே வந்திருக்கலாமே. ஏன் இப்படிச் சுற்றி வளைத்துக் கொண்டு வந்தீர்கள்?"

"அட! உனக்கு எப்படித் தெரியும் இந்த வழியெல்லாம்? ஊருக்குப் புதிது என்றாயே?"

"நான் உங்களிடம் கொடுத்தது என் வீட்டு விலாசம்தான். என் வீட்டுக்கு எனக்கு வழி தெரியாமல் போய்விடுமா?"

"நான் மாத்திரம் என்ன? எனக்கு இந்தப் பேட்டை மிக நன்றாகத் தெரிந்திருப்பதால் தான் உங்கள் தெருவை மட்டும் விலக்கிவிட்டு மற்ற இடங்களெல்லாம் சுற்றி வந்தேன்."

பிறகு அவர்கள் பேசிக்கொள்ளவே இல்லை. பம்பு உடைந்துபோன பார்க்கின் மற்றொரு மூலைக்குச் சென்றுவிட்டனர்.

* * *

இதைப் படித்த என் ஜெயா "கதை புரியவில்லையே?" என்றாள். ஒரு 'பிளான்' வரைந்து காட்டி ஸ்டேஷனிலிருந்து கதாநாயகியின் வீட்டுக்கு மிகக் குறைந்த தூரமுள்ள நேர் வழியையும், அவர்கள் சென்ற மிக நீண்ட பாதையையும் நான் விளக்கிய பின் "இது எத்தனை நாட்களாக நடக்கிறது? முதலில் வேறே செக்ஷனுக்கு மாற்றல் வாங்கிக் கொள்ளுங்கள்!" என்றாள்.

ஐயா! தயவுசெய்து கதாநாயகனின் பெயரை மாற்றி விடுங்கள்! கற்பனைப் பெயராகவே இருந்து தொலையட்டும்!

ஆமாம், தலைப்பு....."??!!"

சரி இதையே வைத்துவிடுங்கள்: "??!!".

SPECIAL INDEPENDENCE DAY ISSUE

After 26 years of independence, has the Indian woman been reincarnated as Shakti? How has she been treated by the leaders of modern India? As 50 per cent of the country's electorate, how much impact has she had on its policies? To answer some of these questions, Femina brings you three authoritative articles:

SHAKTI IN MODERN INDIA—

The conception of supreme divinity as a woman, a mother, and a womb did not easily find its place in patriarchal Aryan society. However, in modern times, Shakti, as the embodiment of energy is worshipped by those who seek both pleasure and liberation. SHANTA SERBJEET SINGH discusses the manifestations of Shakti in the modern Indian woman. With beautiful colour photographs.

MODERN INDIAN EMANCIPATORS OF WOMEN:

THEIR CREDOS AND PRACTICE
While Gandhi, Nehru and others were publicly decrying the social injustices to which women were subjected, were they applying the same criteria in their family relationships? SUBHASH KIRPEKAR researches their work and presents his analysis.

HOW TO SEEK REDRESS FROM THE ELECTED—

If you have a civic problem, don't withdraw into passivity. Take action by lobbying with your municipal councillor, M.L.A. or M.P. RANI JETHMALANI tells you how

A WORLD TOUR IN A FIRE ENGINE—

Muriel Kilvert used to be everything but a wanderer. An Oxonian, a Cordon Bleu cook and headmistress of schools in the Sudan, Ceylon and the U.K., she is now spending her retirement driving around the world in a fire engine. On a recent stop in Bombay at the end of a 17,000-mile journey, she recounted this story.

PLUS:

SPECIAL NEWS REPORTS FROM ALL OVER INDIA—

From Manwat, a small town in the Parbhani District of Maharashtra, an investigation of six successive sex crimes on women; from New Delhi, an investigation of the accident involving the daughter-in-law of Bansi Lal, former Chief Minister of Haryana; from Hyderabad, the story of a wife whose husband has been in a coma for 10 years.

And a free colour cookery card to our subscribers in 20 foreign countries.

femina

August 17, 1973

உண்டு களித்திடுவீர் மீண்டும்!



ஸான்ஸைம்

அவற்றை விரைவாக ஜீரணிக்கச் செய்கிறது...

ஸான்ஸைம் சிறப்பான 3 வழிகளில் செயல் புரிகிறது

- ஸான்ஸைம் எல்லாவித உணவுப் பொருட்களையும் ஜீரணித்து, சத்துக்களை உட்கிரகிப்பதோடு பசியையும் தூண்டுகிறது.
- ஸான்ஸைமில் உள்ள விசேஷ நுரை எதிர்ப்பு சக்தி வாயுவையும் வலியையும் துரிதமாக போக்குகிறது.
- ஸான்ஸைம் நொடியில் அமிலங்களைச் சமனப்படுத்துகிறது.

2 அல்லது 4 மாத்திரைகள் அல்லது மைக்ரோன் செய்யப்பட்ட ஒரு பொட்டலம் ஸான்ஸைம் பவுடர் ஜீரணக் கோளாறுகளை விருந்து பரிபூரண விடுதலையளிக்கிறது. உலகெங்கும் பாராட்டு பெற்ற ஜீரணத் தூண்டுகோலான மல்டிபென்ஸைம் இன்சுவையும் நறுமணமும் கொண்டது. மேலும் மலச் சிக்கல் ஏற்படாமல் தடுக்கிறது.

ஜீரண பலமே பூரண நலமாகும்.

இலவச விஞ்ஞான வெளியீட்டுக்கு எழுதவும். ஸான்ஸைம் எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கிறது.

இன்றே ஸான்ஸைம் வாங்குவீர்
4 மாத்திரைகள் அடங்கிய எங்கள்
புதிய பாக்கெட் வாங்குவீர்...
விலை 49 காசுகள் மட்டுமே!



யூனி-ஸாங்க்யோ லிமிடெட்.
பம்பாய்-26.

PRATIBHA 2012-7-TAM

தமிழ்நாட்டிற்கு விநியோகஸ்தர்கள்:
M/s கணபதி & கோ, 108/104, லிங்கி செட்டித் தெரு, த.பெ. நெ. 1086, சென்னை-1

ராஜாஜியின் ஜெயில் டைரி

1922 பிப்ரவரி, 17உ

வெள்ளிக்கிழமை: நேற்று இரவு ஆஸ்துமாக் கஷ்டம் அதிகமாக இருந்தது. இந்த மாதிரி பயங்கரமான கஷ்டம் எனக்கு ஏழு வருஷங்களுக்கு முன் தான் ஏற்பட்டிருந்தது. எழுந்து உட்கார்ந்து விளக்கை ஏற்றி, கொஞ்சம் ஜலம் சுட வைத்துக் குடித்தேன். இத்தகைய ஆஸ்துமா நோயாளிகளுக்கு ஏற்ற இடமன்று தனிச் சிறை வாசம். ஆயினும் மனத்தை அடக்கிக் கடவுளிடம் நிற்கச் செய்வதன் மூலம் இந்தக் கஷ்டத்தை ஒருவாறு என்னால் மறந்திருக்க முடிகிறது.

பலாத்காரச் செயல்கள் ஏற்பட்டு விட்டதால் பொதுஜனச் சட்டமறுப்பு இயக்கம் நடத்துவது சாத்தியமில்லை என்றும், அதனால் பர்தோலி இயக்கத்தையும் நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் ஹக்கீம் அஜ்மல்கானும், மௌலானா ஆஸாத் ஸொபானியும் காந்தியடிகளுக்கு அறிவித்திருப்பதாகச் செய்தி வருகின்றது. அத்துடன் அந்தப் பகுதியிலுள்ள சில தொண்டர் படைகளைக் காங்கிரஸ் கமிட்டியார் கலைத்து விட்டதாகவும் செய்தி எட்டுகின்றது. அங்குள்ள அதிகாரிகளின் அடக்குமுறை அதிகமாக இருக்கலாம். அதனால்தான் அப்படிக் கலைத்து விட்டார்களோ என்னவோ? அவ்வாறு இல்லையானால், காங்கிரஸ் தொண்டர்களும் அக்கிரமச் செயல்களில் ஈடுபட்டிருந்தார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. எதுவாயினும் சரி; காங்கிரஸ் காரியக் கமிட்டியார் செய்த முடிவுக்குப் போதுமான காரணங்கள் இருப்பதாகவே தோன்றுகிறது.

இடைவிடாமல் பிரசாரம் செய்தால் பொதுஜனங்களை அஹிம்சை முறையைக் கையாளும்படி பழக்கி விடலாம் என்று காந்தியடிகள் கருதுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்த மாதிரி எத்தனையோ முறை அவர் எழுதி வருகிறார். ஆனாலும் கோபம் மூட்டக்கூடிய காரியம் நிகழ்ந்தவுடன் ஜனங்கள் தலை கால் தெரியாமல் அக்கிரமச் செயல்களில் இறங்கி விடுகிறார்கள்.

எவ்வளவு எழுதினாலும் சரி, எவ்வளவு பிரசங்கித்தாலும் சரி, இப்போதுள்ளதை விட அதிகமான பலனைக் கண்டுவிட முடியாது. தேவையென்னவென்றால் செய்து காட்டுவதும் பரீட்சித்துப் பார்ப்பதும்தான். ஏதோ தூரப் பிரதேசத்தில், ஓர் அக்கிரமம் ஏற்பட்டதற்காக உடனே இயக்கத்தை நிறுத்தி விட்டால் பிறகு பரீட்சார்த்தமாகச் செய்து பார்ப்பதற்குக் கூட இடம் இல்லாது போய்விடும். இப்போது வேண்டியது அஹிம்ஸா முறையைப் பற்றிய அறிவன்று; கட்டுப்பாடான செயலேயாகும். அறிவு கொடுக்க வெறும் பிரசாரம் மட்டும் போதும். கட்டுப்பாடோ, செய்து பழகுவதனால்தான் கிடைக்கும்.



நாம் முதலில் ஆரம்பிக்கும்போது நிதானமாகச் செயல்படாமல் அதிக வேகமாக ஓட ஆரம்பித்து விட்டோம். அதனால்தான் இந்தத் தொல்லைகளும் தோல்விகளும். இப்போது பின்வாங்கி விட்டோம். அதனால் ஏற்படக் கூடிய தீமைகள் அனைத்தும் ஏற்பட்டு விட்டன. பொதுஜனங்களின் மனத்தில் பின்வாங்குவதால் ஏற்படக் கூடிய சோர்வைச் சமாளிப்பது எளிதான விஷயமல்ல.

துளியூண்டு மனுசத்தன்மை

டி.கே.டி.துரைராசன்

ஆசை அறிவைக் கெடுத்துடும்ன்னு சொல்வாங்களே.... அது என் வரையிலே நாத்துக்கு நூறு சரியாப் போச்சு. இல்லாட்டி என் தலையிலே நானே மண்ணை வாரிப் போட்டுப்பேனு?

சிட்டிபாபு சொன்னுன்: ''டேய் முருகேசா! வேணுன்டா..... அந்தகத்தை மறந்துடுடா. ரெட்டைக் குழந்தைக்குத் தாயாயிட்டவ. தாலி அறுத்தவ. இருபத்தேழு வயசு. இப்பவே பாதி கிழவி. அவள் மேலே உனக்கு என்னடா அவ்வளவு ஆசை? மெக்கானிக்கா இருக்கே.... மாசத்துக்கு மூந்நூறு, நானூறுன்னு சம்பாதிக்கிறே. நல்ல இடத்துலே பெண் பார்த்துக்கலாம்!'' - இப்படிக் கிளிப் பிள்ளைக்குச் சொல்ற மாதிரி படிச்சிப் படிச்சிச் சொன்னுன்.

ஆனல் என் புத்தி? அதை ஜோட்டாலே அடிக்கணும். அவன் சொல்லைக் கேட்டேனு? 'அவளாடா பாதி கிழவி? சிலி சிங்காரிச்சி வெளியே வந்தாள்ன்னு சினிமா நடிகை தோத்துப் போகணும்டா. இரட்டைக் குழந்தைக்குத் தாயாயிட்டா என்னடா? உடம்பைப் பாரு..... இன்னும் பத்துக் குழந்தைகளைத் தாங்கும்டா'ன்னு சிட்டிபாபுகிட்டே சொல்லலியே தவிர, என் மனசுக்குள்ளேயே பெருமையாச் சொல்லிக்கிட்டேன்.

ஆமாம். அப்பல்லாம் எனக்குப் பெருமைதான் — விதவையாயிட்டாலும் அந்தப் பேட்டைக்கே ஒரு கவர்ச்சிக் கன்னியா இருக்கிற அந்தகம் என்னை மறு கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்கிட்டாள்ன்னு.

ஆனு அவளும் அவ்வளவு சுலபத்திலே அதுக்கு ஒத்துக்கலே. முதல்லே அந்தப் பேச்சை நான் அவகிட்டே ஆரம்பிச்சதுமே, என்னை எரிக்கடுற மாதிரி ஒரு பார்வை பார்த்தா. அப்புறம், ''ஆக்ஸிடென்ட்டிலே புருஷனைப் பறி கொடுத்துட்டு அலங்கோலமா நிக்கிற என்கிட்டே இப்படி ஒரு பேச்சுப் பேசிட்டியே''ன்னு அழுதா.

அந்தக் கோபமும், அழுகையும், தணியட்டும்ன்னு ஒரு வாரத்துக்கு நான் பேசாம இருந்தேன். அப்புறம் வாழைப் பழத்திலே ஊசி சொருகுகிற மாதிரி மறுபடியும் பேச்சை ஆரம்பிச்சேன்.

'' இந்த மாதிரியெல்லாம் பேசாதே. பேட்டைவாசிங்களெல்லாம் என்ன நினைப்பாங்க''ன்னு கொஞ்சம் எறங்கி வந்த மாதிரி பேசினு.

''அட சிரித்தான் விடு. அப்பா, அம்மா, சொந்தக்காரங்கன்னு நாதி யில்லாதவன் நானு. பேட்டை வாசிகளைப் பத்தி எனக்கென்ன பயம்?''ன்னு ரொம்ப வீருப்பாப் பேசினேன். வெறும் வீருப்பு மட்டும் இல்லே. உண்மையும் அதுதான்.

அதுக்கு அவ பேசாம இருந்தா.

''இந்தா பாரு... ரெண்டு நாள் கழிச்சித் திரும்பவும் வர்றேன். உனக்குச் சம்மதம்ன்னு மல்லிப்பூ வாங்கித் தலையிலே வைச்சிரு. இல்லேன்னு விட்டுடு''ன்னு சொன்னேன்.

'' தாலி அறுத்தவளுக்கு மல்லிப் பூவா?''ன்னு கேட்டா.

''நான்தான் உனக்குத் தாலி கட்டப் போறேனே. அப்பறம் ஏன் தயங்குறே?''ன்னு சொல்லிட்டுச் சூரப்புலி மாதிரி போயிட்டேன். அடுத்த ரெண்டு நாளும் எனக்குப் பாதி சந்தேகம், பாதி சந்தோஷம். வேலையிலேகூட மனசு ஓடலே. எப்படியோ ரெண்டு நாளும் 'தம்' பிடிச்சி இருந்துட்டு மூணு நாள் அவ குடிசைக்குப் போனேன். மல்லிப்பூ வாசனை ஆளைத் தூக்கிச்சி.

'அடி என் ராசாத்தி'ன்னு மனசுக்குள்ளே கூப்பிட்டுக்கிட்டே உள்ளே நுழைஞ்சேன். பூ அவ தலையிலே இல்லே. கையிலேதான் இருந்தது.

''இதபாரு. இந்தப் பூவை நீயே என் தலையிலே வைச்சுவிடு. ஆனு அதுக்கு முந்தி ரெண்டு விஷயத்தை உன்கிட்டே சொல்லிடணும். அதுக்கு நீ ஒத்துக்கிட்டாத்தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்குவேன். சம்மதமா?''

''என்ன விஷயம்னு சொல்லு.''

''ஒரு நல்ல நாளாப் பார்த்து என்னைக் கோயிலுக்குக் கூட்டிக்கிட்டுப் போயி பத்து ஜனங்க மத்தியிலே தாலி கட்டணும்...''

''அப்புறம்?''

''என்னோட ரெட்டைக் குழந்தைங்களை— ரெண்டும் ஆண்தான் — உன்னோட குழந்தைங்க மாதிரி நினைச்சி வளர்க்கணும். செய்வியா?''ன்னு கேட்டா.

எனக்குத்தான் ஆசை தலைக்கேறி யிருந்ததே! மாட்டேன்னு சொல்லப் போறேன். அவ கேட்டு முடிக்கிறதுக்கு முந்தியே 'சரிதான்'னு சம்மதிச்சிட்டேன். அந்த மல்லிப் பூவையும் அவ தலையிலே வச்சேன்.

ஆச்சு. ஒரு நல்ல நாளும் அதுவுமா தாலி கட்டறதுக்காக அவளைக் கோயிலுக்குக் கூட்டிக்கிட்டுப் போனேன்.

அப்பக்கூடச் சிட்டிபாபு சொன்னுனே : ''வேண்டாண்டா... வேண்டாண்டா...உன்னோட சம்பாத்தியமெல்லாம் அந்த ரெண்டு குழந்தைங்களுக்குச் செலவு செய்யறதுக்கே சரியாப் போயிடும்டா. ஒரு காசும் மிஞ்சாதுடா''ன்னு தலைதலையா அடிச்சுக்கிட்டானே.

இந்த அறிவு கெட்ட முண்டம் கேட்டேனு? 'காசென்னடா பெரிய காசு? அந்தகத்தோட அழகுக்குக் கோடி கோடியாக் கொட்டிக் குடுக்கலாமே'ன்னு அவன்கிட்டே

சொல்லலியே. ஆனா மனசுக்குள்ளே நினைச்சுக் கிட்டுத் தாலியைக் கட்டினேன்.

ஆனா அந்த நினைப்பு எத்தனை நாளைக்கு? ஒரு ஆறு மாசந்தான். அதுக்கப்புறம் கொஞ்சம் கொஞ்சமா அந்த நினைப்புக் குறைஞ்சி, மத்த பொண்ணுங்களை விட இவ என்ன அப்படி ஒசத்திங்கிற நினைப்பு வந்திரிச்சி.

ஏன் தெரியுமா? அந்தச் சனியனுங்க... ரெட்டைக் குழந்தைங்கதான்.

குழந்தைங்களா அது? குண்டோதரனுங்க! அஞ்சு வயசுதான் ஆகுதுன்னாலும் பன்னிக் குட்டியாட்டம் நல்லாத் தின்னுட்டுக் கொழு கொழுன்னு இருக்கும்.

ஆரம்பத்திலே அந்தக் குழந்தைங்க மேலே அன்பாத்தான் இருந்தேன். ஆனா அதுகளுக் காகச் சம்பாத்தியத்திலே பாதி செலவாகச் செலவாக, 'என்னடா எவனுக்கோ பிறந்த சனியன்களுக்காக நாம ஏண்டா செலவு பண்ணணும்'ங்கிற நினைப்பு வந்திடுச்சி.

செலவுன்னாலும் சாதாரணச் செலவா?

கட்டிக்கிட்ட புதுசுலே ஒரு நாள் ராத்திரி அஞ்சுகம் கேட்டா: ''ஏன் மச்சான்! 'கான் வென்ட் கான்வென்ட்'ன்னு சொல்றாங்களே, இந்த ரெண்டு பசங்களையும் அங்கே சேர்த்து விட்டா என்ன?''

''சேர்த்துட்டாப் போவுது''ன்னு நான் சொன்னேன். அவ என்ன சொன்னாலும் சரி, அதுக்கு மறு பேச்சில்லே.

''எந்தக் கான்ட்வென்ட்டு?''

''எல்லாம் எங்கிட்டே வுட்டுடு.''


''செலவு அதிகமாகுமோ?''

''அதைப் பத்தியெல்லாம் என்ன இப்போ? யாரையாவது பிடிச்சு ஏதாவது ஸ்காலர் ஷிப் வாங்கிடறேன்''னு சொன்னேன்.

அவ்வளவுதான். அடுத்த நாலஞ்சு நாளா அலையோ அலைன்னு அலைஞ்சு கான்வென்ட் டுலே சேர்த்துட்டேன். ஆனா ஸ்காலர்ஷிப்? ஒரு மண்ணும் கிடையாது. செலவோ ரூபா நோட்டு வெறும் காகிதம் மாதிரி பறந்தது. சேர்த்து வைச்சிருந்த ரெண்டாயிரமும் காலி.

இப்போ?... அறுநூறு ரூபா கடன் இருக்கு. இந்தப் போக்கிலேயே போனா, வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாம இந்த ஊரை விட்டே ஓட வேண்டியதுதான்.





இவ்வளவும் எதனாலே? அந்தக் குழந்தைங்களாலே....!

அஞ்சுகத்துக்காகச் செலவு பண்ணறதைப் பத்தி நான் கொஞ்சம்கூட யோசிக்கலே... என்னு அவ என் பொஞ்சாதியாச்சே! ஆனா அந்தக் குழந்தைங்களுக்காகச் செலவு பண்றதுதான் வேண்டா வெறுப்பா யிருக்கு. எத்தனை நாளைக்கு இதுகளைக் கட்டி மாரடிக்கிறதுங்கிற வெறுப்பிலே ஒரு மாசம் ஸ்கூல் சம்பளம் கட்டாம விட்டுட்டேன்.

உடனே அஞ்சுகம் ஆரம்பிச்சுட்டா: ''இதுக்குத்தான் நான் உன்கிட்டே ஆரம் பத்திலேயே கேட்டுக்கிட்டது. என்னமோ பெரிசா சத்தியம் பண்ணிக் குடுத்த மாதிரி சொன்னியே... கான்வென்ட்டிலே செலவு அதிகமா இருக்குதுன்னு நெனைச்சா கார்ப்ப ரேஷன் ஸ்கூல்லே சேர்த்து விட்டுடு.''

நான் பேசாம இருந்தேன். கார்ப்பரேஷன் ஸ்கூல்லே சேர்த்து விட்டாலும் நமக்குத் தானே கழுத்தறுப்பு. அதனாலே இதுக ரெண்டையும் எப்படியாவது தலை முழுகிடணும்னு ஏதாவது ஓர் அனாதை ஆசிரமத்திலே சேர்த்து விட்டுடலாம்னு நான் யோசனை பண்ணிக்கிட்டிருந்தேன்.

ஆனா அஞ்சுகம் கிட்டே அதை எப்படிச் சொல்றது? அவ கோபிச்சுக்குவாளேன்னு ஒரு நாலஞ்சு நாளா பேசாம இருந்தேன். ஆனா அப்படி எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? ஒரு மாதிரியா மனசைத் தைரியப் படுத்திக்கிட்டு அஞ்சுகத்துக்கிட்டே சொன்னேன்.

''அஞ்சுகம்... அடையாற்றிலே ஏதோ ஒரு ஸ்கூல் இருக்காம். எல்லாம் இலவசமாம். அங்கே இந்த ரெண்டத்தையும் சேர்த் துடலாமா?''

அடையாறுன்னு சொன்னதுமே அவ புரிஞ் சுக்கிட்டா. அந்தப் பேட்டையிலேயிருந்து நாலஞ்சு பசங்க அங்கே போய் இருந்து படிக்கிறாங்க.

''யாருமே இல்லாத அனாதைங்கன்னு நினைச்சுட்டியா என் குழந்தைங்களை?''ன்னு கேட்டா.

''நல்ல ஸ்கூல்னு சொல்றாங்க...''

''அதெல்லாம் இடக்குது. நான் கேட்ட துக்குப் பதில் சொல்லு. அனாதை ஆசிரமத் திலே சேர்த்துட்டா அப்படியே அதுகளைக் கை கழுவி விடலாம்னுதானே நினைக் கிறே?''ன்னு அவ கோபமாவும், குத்தலாவும் கேட்கவுமே எனக்கும் கொஞ்சம் கோபம் வந்தது.

''அப்படித்தான் வைச்சுக்கோயேன்.''

''ஓஹோ! ரெண்டு குழந்தைகளை நான் காப்பாத்தறேன்னு பெரிசா நீட்டி முழக் கினியே....?''

எனக்கு இன்னும் கொஞ்சம் கோபம் வந்தது.

''ஆமாம்டி, நீட்டி முழக்கினேன். அதுக்கு என்ன , இப்போ? எவனுக்கோ பிறந்த குழந்தைகளைக் காப்பாத்தறதுக்காக நான் கடன்காரனுக்க் கஷ்டப்படணுமா?''

அவ்வளவுதான். அந்த ஒரு கேள்வியிலே அவ மூஞ்சி செத்திருச்சி. மறு வார்த்தை பேசாம அழ ஆரம்பிச்சுட்டா. அவ அழற தைப் பார்த்ததும் எனக்கும் மனசு என் னமோ மாதிரி ஆயிடிச்சி.

''இத பாரு அஞ்சுகம்... ஏதோ ஒரு கோபத்திலே கேட்டுட்டேன். கடன் தொல்லை வேறே அதிகமாயிட்டே இருக்கு. அந்த மனக்கஷ்டம் வேறே சேர்ந்துக்கிட்டுது. அழாதே''ன்னு எவ்வளவோ சமாதானம் பண்ணினேன்.

ஆனா அவ சமாதானப்படலே. ராத்திரி முழுக்க அழுதுக்கிட்டிருந்தா. மறுநாள் காலையிலே சொன்னா:

''அதுகளுக்கு ஒரு வாய் கஞ்சி ஊத்தற துக்குக்கூட உனக்குக் கஷ்டமா இருந்தா அனாதை ஆசிரமத்திலேயே சேர்த்துடு. அந்தப் புண்ணியமாவது ஒனக்கு இருக்கட்டும்.''

அப்படி அவ சொன்னதிலே எனக்கு எவ் வளவோ சந்தோஷம்தான். இருந்தாலும் அதை வெளியே காட்டிக்கலே.

''என் மேலே கோபம் இல்லையே?''

''இதிலே கோபம் என்ன இருக்கு? இன் னும் கொஞ்ச நாள் போனா எவன்கூடவோ இருந்தவதானேடி நீன்னு என்னையும் துரத்தி விடுவே''ன்னு சொல்லிவிட்டு அவ திரும்பவும் அழ ஆரம்பிச்சா.

எப்படியோ அந்த ரெண்டு சனியன்களும் ஒழிஞ்ச போறதிலே எனக்கு ரொம்ப நிம்மதி.

* * *

மத்தியானம் ஒரு மணிக்கு அடையாற்றுக் குப் போனேன். மனசுக்குக் கொஞ்சம் தெம் பாக இருந்தது. அந்தக் குழந்தைங்க பாரம் தீர்ந்தாலே கடனும், கவலைகளும் போன

மாதிரிதானே.... அதுக்கப்புறம் அஞ்சகத் தோட இன்னும் ஜாலியா இருக்கலாம்.

அந்த அனாதை ஆசிரமத்திலே போய் அப்ளி கேஷன் தாள்களை வாங்கிக்கிட்டு பஸ் ஸ்டாப் பிலே வந்து நின்னுகிட்டிருந்தேன்.

'ஜலக்... ஜலக்'ன்னு சத்தம் கேட்டது. பாத்தா, பத்துப் பதினஞ்சு சின்னப் பசங்க ஆள் ஆளுக்கு ஓர் உண்டியலைக் குலுக்கிக் கிட்டு வந்தாங்க.

''பசங்களா! நீங்கள்ளாம் எங்கேடா படிக் கிறீங்க?''ன்னு பஸ் ஸ்டாண்டிலே நின்னுக் கிட்டிருந்த ஒரு பெரியவர் கேட்டார்.

ஒரு பையன் அடையாறு அனாதை ஆசிர மத்தோட பேரைச் சொன்னான்.

''ஆமா, எதுக்குடா உண்டியல் குலுக்கு றீங்க?''ன்னு பெரியவர் கேட்டாரு.

''சேலத்திலே பெரிய மழை பெஞ்சு வெள்ளமா வந்து, ஓர் அனாதை ஆசிரமமே இடிஞ்சு போயிடிச்சு. அங்கே உள்ள பசங்க ரொம்பக் கஷ்டப்படறாங்க. அவங்களுக்காக நிதி சேர்க்கிறோம்''ன்னு ஒரு வெடகப் பையன் சொன்னான்.

அவ்வளவுதான்!

எனக்கு மனசுக்குள்ளே முள் குத்தினமாதிரி இருந்தது. 'இதுகளோ அனாதைங்க...இவனு களுக்கும் சேலத்திலே இருக்கிற அந்த அனாதைகளுக்கும் என்ன சொந்தம்–பந்தம்? இருந்தாலும் இந்த வேகாத வெயில்லே உண்டி குலுக்கி நிதி சேர்க்கிறாங்களன்னு...?'

என் மூளையிலே ஏதோவொன்னு இடி இடின்னு இடிச்ச மாதிரி இருந்தது.

அஞ்சுகம் மூத்தி ஒருத்தனுக்கு மனைவியாக இருந்து ரெண்டு குழந்தைங்களைப் பெத் துட்டு இப்ப எனக்குப் பெஞ்சாதி ஆயிட்டா. இந்த ஓர் உறவைக்கூட நெனைக்காமெ, அந்த ரெண்டு குழந்தைங்களையும் அனாதை கள்ன்னு சொல்லிக் கைகழுவப் போறோமே... இது நியாயமா?ன்னு எனக்கு வேதனையா இருந்தது.

அந்த வேதனையோட அப்ளிகேஷன் தாளைப் பார்த்தேன். அது என்னைப் பார்த்துக் கேலி பண்ணிச் சிரிச்ச மாதிரி இருந்தது. சுக்கல் சுக்கலாக் கிழிச்சுக் காத்திலே பறக்க விட்டேன்.

ஹாக்கியில் பஞ்ச பாண்டவர்கள்!



திரு பாஸ்கரன்

ஒரு குடும்பத்தில் ஒன்றிரண்டு பேர் ஹாக்கி விளையாட்டில் புகழ் பெறலாம். ஆனால் ஒரே குடும்பத்தில் ஐவர் ஹாக்கி விளையாட்டில் ஈடுபட்டிருப்பது அரிதினும் அரிது. பெங்களூர் ராஜ்ய ஓட்டப் பந்தய வீரர், ஆல்ரௌண்டர் ஸ்போர்ட்ஸ் மன் பி. வாசுதேவனின் குமாரர்கள் ஐவர் ஹாக்கியில் புகழ்பரப்பிவருகிறார்கள்.

இம்மாதம் ஆம்ஸ்டர்டாமில் நடைபெறப் போகும் உலக ஹாக்கிப் பந்தயத்துக்குச் செல்லும் குழுவில் இடம் பெற்றிருக்கும் இருபத்திரண்டு வயதான வி.பாஸ்கரன் இவரில் ஒருவர்!

பன்னிரண்டு வயதிலே பாஸ்கரன் சென்னை வெஸ்லி பள்ளியில் படிக்கும் போதே ஹாக்கி ஆட்டத்தில் ஈடுபட்டார். லயோலா கல்லூரியில் பி. ஏ. பட்டதாரி ஆனபோது ஹாக்கியில் பல பந்தயங்களின் வெற்றிக் கோப்பைகளையும் பெற்று நிபுணர் ஆனார். 1970ம் வருஷம் ஆஸ்திரேலியாவுக்கு இந்திய சர்வகலாசாலை ஹாக்கிக் குழுவில் ஒருவராகச் சென்றுவரும் வாய்ப்பு கிட்டியது. மியூனிக் ஒலிம்பிக் போட்டிக்கு 'ஸ்டாண்ட் பை' ஆட்டக்காரராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார்! பாடியாலாவில் பாஸ்கரன் உலகக் கோப்பைக்காக ஹாக்கி நிபுணர்களிடம் பயிற்சி பெற்றார்.

இவரது மூத்த சகோதரர் வி. பிரபாகரன் ஸ்டேட் பாங்க் ஹாக்கிக் குழுவின் காப்டன். அடுத்த மூத்த சகோதரர் வி. ராஜசேகரன் இந்தியன் ஏர்லைன்ஸ் ஆட்டக்காரர். தேசியப் போட்டிகளில் நேரு நினைவுத் தங்கக் கோப்பை பெற்ற இந்திய ஏர்லைன்ஸ் குழுவின் ஆட்டக்காரர்களில் இவர் ஒருவர். இருவருமே தேசிய ஹாக்கிப் போட்டிகளில் கீர்த்திபெற்றவர்கள்.

இளம் சகோதரர்களான வி. ஜெயசேகரனும் வி.வாஸிகரனும் ஹாக்கியில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் இளம் சிங்கங்கள். வி.ஜெயசேகரன் சென்னை சர்வகலாசாலைக்காக ஆடுகிறார். கடைக்குட்டி வி.வாஸிகரன் தமிழ்நாடு பள்ளி மாணவர்கள் ஹாக்கிப் போட்டியில் ஈடுபட்டு வருகிறார்.


ஹாக்கியில் 'பஞ்சபாண்டவர்' பெருமை சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது.

ஆம்ஸ்டர்டாமில் உலகக் கோப்பைக்கான ஹாக்கிப் பந்தயத்தில் கலந்து கொள்ளச் செல்லும் குழுவுக்கு ஸர்விஸஸைச் சேர்ந்த கணேஷ் தலைமை தாங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இக் கோஷ்டியில் தமிழக ஆட்டக்காரர் பாஸ்கரன் இடம் பெற்றிருப்பது நமக்கெல்லாம் பெருமை. இழந்துவிட்ட புகழை இந்திய ஹாக்கி கோஷ்டியினர் நிலை நிறுத்தப் பாடுபடுவார்கள் என்பதில் ஐயமில்லை. வெற்றி பெற வாழ்த்துவோம்!

— குண்டுமணி



துர்வாச முனிவர் தூரத்து உறவோ?



எங்கள் வீட்டுப் பிரஸிடெண்ட்

எங்கள் வீட்டுப் பிரஸிடெண்ட் என் தகப்பனார்தான். பாரத ஜனாதிபதி கிரி அவர்களுக்கும் என் தகப்பனாருக்கும் ஒரு விஷயத்தில் மிகுந்த ஒற்றுமை உண்டு. இவரும் எப்போதும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டேயிருப்பார். இவர் உத்தியோகம் அந்த மாதிரி. ஒன்று மாற்றி ஒன்றாகப் பல வியாபார நிறுவனங்களில் விற்பனைப் பிரதிநிதியாகப் பணியாற்றிக்கொண்டு வருபவர்.

துர்வாசமுனிவர் ஒருவேளை என் அப்பாவுக்குத் தூரத்து உறவோ என்ற சந்தேகம் எங்கள் வீட்டில் எல்லோருக்குமே அவ்வப்போது எழுவது உண்டு. அவருக்குக் கோபம் வருவது அவ்வளவு சகஜம். ஒரு சந்தர்ப்பத்தில், "போங்கடா! போங்க! எக்கேடு கெட்டுப் போங்க!" என்று சொல்லிக் கொள்ளாமல் குடும்பம், வேலை எல்லாவற்றையும் விட்டு விட்டுப் போய் விட்டார். எங்கேயிருக்கிறார் என்றே பல நாட்கள் தெரியவில்லை. அப்புறம் ஜெம்ஷெட்பூரிலிருந்து வீட்டுக்குப் பணம் அனுப்பத் தொடங்கினார். அங்கேயே ஒரு வேலையையும் தேடிக் கொண்டார் என்பது அப்புறம்தான் தெரிந்தது. கொஞ்ச நாட்கள் கழித்து இங்கேயே வந்துவிட்டார்.

இவருக்குச் சாப்பாடு பரிமாறும் போது எங்க அம்மா நடுங்கிக் கொண்டேதான் இருப்பாள். கொஞ்சம் தேவைக்கு அதிகமாக வேகத்துடன் பரிமாறினாலும் போச்சு! "என்னை அலட்சியமா பண்றே?" என்று சீறிக் கொண்டு அப்படியே பாதிச் சாப்பாட்டில் எழுந்து போய் விடுவார்.

கோபத்திலே சூரர் மாதிரி, ரசிகத் தன்மையிலும் சூரர். நல்ல சாப்பாட்டை ரசித்துச் சாப்பிடுவார். நல்ல சங்கீதத்தை ஆனந்தமாக அனுபவிப்பார். அந்த நாட்களில், எஸ். ஜி. கிட்டப்பா, அரியக்குடி, இவர்களின் இசை என்றால் இவருக்கு உயிர். இப்போதும் சபாவில் நல்ல கர்நாடக சங்கீதக் கச்சேரி என்றால் ஒரு டிக்கெட்டை அவருக்குக் கொடுத்துவிட வேண்டும். நாடகம், பேலே மியூசிக் முதலியவற்றுக்குப் போட்டிக்கு வரமாட்டார். திரைப் படங்களுக்குக்கூட இப்போதெல்லாம் இவர் போவதில்லை. முன்பு ஒரு காலத்தில் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவர்தானும்!

எங்கள் பிரஸிடெண்டுக்கு ஆக்ஸிடெண்ட் யோகம் உண்டு. சமீபத்தில் மதுரைக்கு அலுவலக நிமித்தமாக முகாம் போயிருந்தார். அங்கே வேலையை முடித்துக் கொண்டு பழனிக்குப் போக வேண்டும். பழனிக்குப் போக ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்ஸில் டிக்கெட்கூட ரிசர்வ் செய்து விட்டார்.

அந்த நேரத்தில் இவருடைய நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்தித்திருக்கிறார். அந்த நண்பர், "என்னையா பார்த்தசாரதி! இன்றைக்குப் பார்த்துப் பழனிக்குக் கிளம்பியிருக்கிறீர்? அங்கே இன்றைக்கும் நாளைக்கும் ஏகப்பட்ட கல்யாணங்கள். முகூர்த்த நாட்கள். தங்குவதற்கு இடம் எப்படிக் கிடைக்கும்? அப்புறம் போகலாம்!" என்று வற்புறுத்திச் சொல்லி வாங்கியிருந்த டிக்கெட்டை ரத்துச் செய்ய வைத்தார். என் தகப்பனார் பிரயாணம் செய்யவிருந்த பஸ், அன்று பழனிக்கும், திண்டுக்கல்லுக்கும் இடையே மற்றொரு பஸ்ஸுடன் மோதி அத்தனை பிரயாணிகளும் ஆஸ்பத்திரியில் அடைக்கலம் புக வேண்டியதாயிற்றாம்! மறு நாள் இவர் நல்லபடியாகப் பழனி போய்ச் சேர்ந்தாராம்.

அரியலூர் விபத்தில் ஆற்றோடு போயிற்றே ஓர் எக்ஸ்பிரஸ் ரயில் வண்டி! அதே எக்ஸ்பிரஸில் இவர் திருச்சிராப்பள்ளிக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ரிசர்வேஷனுக்கு ஆன மட்டும் அலைந்து முயற்சி செய்திருக்கிறார். டிக்கெட் கிடைக்கவில்லை. கோபத்துடன் மறு நாட் காலை வண்டிக்குத்தான் கிளம்ப வேண்டும் என்று திரும்பிவிட்டார். இவரை ஏற்றிக் கொள்ளாமல் அன்று கிளம்பிய தூத்துக்குடி எக்ஸ்பிரஸ், திருச்சிராப்பள்ளியை அடையவேயில்லை!



சென்னையில் இருக்கும் நாட்களில், ஒவ்வொரு ஞாயிறு, செவ்வாய், வியாழன் கிழமைகளில், அடாது மழை பெய்தாலும் மயிலாப்பூர் கபாலி கோயில் குளத்தில் போய் மூழ்கி எழுந்து வருவார். இது வெகுநாளைய வழக்கம். தினசரி தம் துணிகளைத் தாமே நனைத்துத் துவைக்க வேண்டும் என்ற கொள்கை உண்டு.

ஐந்தாறு வருடங்களுக்கு முன் ஒரு நாள் திடீரென்று கால்நடையாகவே திருவல்

லிக்கேணியில் உள்ள எங்கள் வீட்டிலிருந்து திருப்பதிக்குக் கிளம்பினார். திங்கட்கிழமை காலை நாலே முக்கால் மணிக்குக் கிளம்பினார். திங்கள் செவ்வாய் முழுதும் நடந்து புதன் கிழமை அதிகாலை மூன்றே முக்கால் மணிக்கு மேலத் திருப்பதியை அடைந்துவிட்டார். இது அவருக்கு நாற்பத்தி ஏழாவது திருப்பதி 'டிரிப்'. நடந்து போய் வந்ததால் இந்த நம்பரை நன்றாக நினைவு வைத்திருக்கிறார்!

சாப்பாட்டின்போது ஒரு கப் ரசம் அவசியம் வைத்தாக வேண்டும். ரசமில்லாத சாப்பாட்டில் அவருக்கு ரசனை கிடையாது. அவருக்கும் நன்றாகச் சமைக்கத் தெரியும்.

நுங்கம்பாக்கத்தை அடுத்த ஆத்திரேயபுரத்தில் என் மாமா ஒருவர் இருக்கிறார். பம்பாயில் அவர் தம்பி வீட்டில் நடக்கும் விசேஷத்தை ஒட்டி அதே நாளில் தம் வீட்டில் ஒரு சிறு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். என் திரிசதி, லலிதா சகஸ்ர நாமம், அபிராமி அந்தாதி இவை இவருக்கு மிகவும் பிடித்தவை.

இவர் திருச்செந்தூரில் முகாம் செய்திருந்தபோது கண்ட காட்சி ஒன்றை அடிக்கடி சொல்வார். ஒரு செல்வந்தரான குஜராத்திக்காரரின் இரண்டு வயதுக் குழந்தைக்குப் பேசும் சக்தியே வரவில்லையாம். அவரிடம் விரதமிருந்து திருச்செந்தூர் முருகனை வலம் வந்து வணங்க யாரோ சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குஜராத்திக்காரரும் குடும்பத்துடன் திருச்செந்தூரில் வந்து தங்கியிருந்தார்.

ஒரு நாள் அவர் குழந்தையைத் தூக்கிக் கொண்டு பிராகாரத்தில் வலம் வரும்போது அவர் பிடியிலிருந்து நழுவிக் குழந்தை கீழே விழுந்துவிட்டது. குழந்தையின் தந்தை பதறிப் போய், தாம் உச்சரித்து வந்த வார்த்தையான ''முருகா! முருகா!''வை இரைந்து சொல்லி அலறிக் குழந்தையை எடுக்கக் குனிந்திருக்கிறார். அப்போது அது வரை வாய் திறந்து பேசாத அந்தக் குழந்தையும் தன் மழலை மொழியால் 'முருகா' என்றதாம்.

குஜராத்திக்காரரின் பிரார்த்தனை நிறைவேறிய காட்சியை நேரடியாகப் பார்த்ததை என் தந்தை உற்சாகத்துடன் சொல்வார்.

பணத்துக்கு எங்கள் வீட்டு பிரஸிடெண்ட் ஒரு நாளும் முக்கியத்துவம் கொடுத்ததில்லை. வீட்டுச் செலவுக்குப் பணம் வேண்டும் என்று கேட்டால், ''ஏண்டா, இப்படிப் பணம் பணம் என்று அடிச்சுக்கிறீங்க?'' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டுப் போவார்! அவர் சுபாவம் அப்படி! நல்ல வேளை, என்

பேட்டி அளித்தவர்:
அவரது குமாரி ஸ்ரீமதி பிச்சம்மாள்

பிரஸிடெண்ட்:
திரு ஏ. ஆர். பார்த்தசாரதி


தாயார் மற்றும் சில பெண்கள் எல்லோரும் காலையில் அங்கே போவதாக ஏற்பாடாகியிருந்தது. என் அப்பா மாத்திரம் முதல் நாள் மாலையிலேயே அங்கே போய் விட்டார்.

காலையில் திருவல்லிக்கேணியிலிருந்து என் அம்மா தலைமையில் இளம்பிய கோஷ்டி, தவறான பஸ்ஸில் ஏறி, தவறான ஸ்டாப்புகளில் இறங்கி ஆயாசத்துடன் ஆத்திரேயபுரத்தை அடைந்த போது மணி பத்து. அதற்குள் என் அப்பாவும் மாமாவும் சேர்ந்து அமர்க்களமாகச் சமையலை முடித்து வைத்திருந்தார்கள்.

அநேகமாக இந்தியாவில் உள்ள அத்தனை க்ஷேத்திரங்களுக்கும் போய்விட்டு வந்திருக்கிறார். வாய் எப்போதும் ஏதாவது ஸ்தோத்திரங்களை முணுமுணுத்துக் கொண்டே இருக்கும்:



வானம் இடித்தாலும்
இடிக்கும்,
வசந்தம் வீசினாலும் வீசும்!
இந்தக் குடும்பத் தலைவரின்
சுபாவம் அப்படி!
ஆக்ஸிடெண்ட்
யோகம் உள்ளவர்!
அப்படியென்றால்?
படித்தால் புரிகிறது!



பெரிய சகோதரன் நல்ல உத்தியோகத்தில் அமர்ந்திருந்தும், வாழ்க்கை சுகமாக, பிரஸிடெண்டின் இமர் 'ஆர்டினன்ஸ்'கள் இல்லாமல் ஓடுகிறது.

அவருக்கு எப்போது கோபம் வரும் என்று எங்களுக்குத் தெரியாதாகையால் நாங்கள் அவரிடம் எச்சரிக்கையாகவே இருப்போம்! வானம் இடித்தாலும் இடிக்கும்! வசந்தம் வீசினாலும் வீசும்!

— கோமதி ஸ்வாமிநாதன்



திருமதி

சியாமளா ராஜகோபால்

திருச்சிராப்பள்ளி

தோற்றம் :	மறைவு :
4-1-1916	4-8-1968

"தெய்வம் தொழாஅள்
கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"



'காங்கிரஸ் தலைவர் சர்மா அவர்கள் சமீபத்தில் மாஸ்கோ போய் வந்தார். தொடர்ந்து குஜ்ரால் போனார். பின்னால் ஜெகஜீவன்ராம் சென்றார். நடுவில் நம் எம்.ஜி.ஆரும் போய் இருக்கிறார். ''இவர்கள் எல்லாரும் போகவில்லையென்றால் அந்த விமானத்தில் வேறு யார் போவார்கள்? ஆள் வேண்டாமா?'' என்கிறார்கள் பொதுவாக. உண்மைதான். டெல்லி — மாஸ்கோ செல்லும் ஏர் இந்தியா விமானம் எப்போதும் காலியாகத்தான் செல்கிறது. சமீபத்தில் என் நண்பர் ஒருவர் அலுவலக அதிகாரிகளுடன் ரஷ்யா போய்த் திரும்பி வந்த போது அந்தப் பெரிய விமானத்தில் அவர்கள் ஐந்து பேர்கள்தாம் இருந்தனர். ஆனால் விமானப் பணியாட்கள் ஏழுபேர்கள்!

செந்திரி
19—7—73 நாராயணன்

நான் ஓர் உதவி ஸ்டேஷன் மாஸ்டர். கடந்த இருபத்தைந்து வருடங்களாக எந்த ஒரு பிரமோஷனும் இல்லாமல் அடிப்படையிலேயே உயர்ந்த சம்பளம் ரூ. 240 பெற்று வருகிறேன். என்னைப் போல் மற்றும் பலர் இருக்கின்றனர். தொழில்துறையைப் பற்றியும் தொழிலாளர் முன்னேற்றம் பற்றியும் நிறைய பேசும் நமது சர்க்கார் ஆதிக்கத்தின் கீழ் உள்ள மிகப் பெரிய ஸ்தாபனத்தில் பணி புரியும் 'முக்கிய மூன்று', 'பெரிய மூன்று' என்று போற்றப்படும் ஸ்டேஷன் மாஸ்டரின் நிலை இப்படி உள்ளது.

காரணம்? ஒவ்வொரு கட்டத்திலும், தேர்விலும் பின்தங்கியவர்களுக்குச் சலுகை தருவதாகக் கூறி மேல் நிலைகளில் அவர்களை நியமித்துள்ளனர்.

அடிப்படையாக ஆள் எடுக்கும்போது நூற்றுக்கு நூறு அவர்களையே எடுக்கட்டுமே. மற்ற வகுப்பினர்கள் நாசமாகப் போகட்டுமே என்று எண்ணத் தோன்றுகிறது. வேலையில் சேர்ந்த பிறகு இந்த மாதிரி 'இடைச்செருகல்'களால் எங்கள் மனம் பாதிக்கப்படுகிறது.

திறமை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு கொள்கை வகுக்கும் காலம் என்றோ?

இந்த லட்சணத்தில் ஸ்டேஷன் மாஸ்டர்களான எங்களுக்கு இலவச வீடு கிடையாது. மற்றும் நகரங்களில் உள்ளவர்கள் அனுபவிக்கும் பல வசதிகள் கிடையாது. குடிக்க நல்ல தண்ணீர் கிடையாது.

சீர் உடையைப் பற்றிச் சொன்னால் வெறு தமாஷ். சர்க்கஸ் கோமாளிகள்தான்! பேசாமல் துணியாகத் தந்துவிட்டால் என்ன?

மூகாசா பரூர் எஸ்.கிருஷ்ணமாச்சாரி
19—7—73 உதவி ஸ்டேஷன் மாஸ்டர்

தமிழ் நாட்டரசின் அறநிலையப் பணியாளர் இறைவனுறையும் திருக்கோயில்களில் தங்கள் மொழிப் பற்றை வெளியிடத் தீவிரமாக முனைந்திருக்கிறார்கள். அண்மையில் திருச்செங்காட்டங்குடி செல்ல நேர்ந்த போது அங்கே சிறுத்தொண்டர் வழிபட்ட ஸ்ரீ உத்திராபதீசுவரர் கோயிலில் சுற்றுப் பிராகாரங்களில் உள்ள மூர்த்திகளை விளக்கும் பெயர்களிலெல்லாம் தொடக்கத்திலுள்ள ''ஸ்ரீ''யை அழித்திருப்பதைக் கண்டேன். பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள்கூடக் கோயிலுக்குள் புகுந்து தம் தொண்டர்களை இத்தகைய திருப்பணி செய்ய ஏவியதாக நினைவில்லை. வடமொழி எழுத்துக்களை அழிப்பதில் உள்ள ஆர்வம் அபாயகரமானது. தமிழில் வழிபாடு செய்ய முனையும் உரிமை சமஸ்கிருதப் பெயர்களை மாற்றும் அதிகாரமாக மாறிவிடக் கூடாது. அது ஆகம விரோதமாகும்.

அறநிலைய இலாகா நடத்தும் பத்திரிகை 'திருக்கோயி'லில் மாண்புமிகு தலைவர்களின் படங்களையும் செய்திக் கதிரையுமே அதிகமாகக் காண்கிறோம். அந்த 'ஆர்ட்' காகிதத்தில் ஆண்டவனின் உருவங்களை அச்சிடும் பெருந்தன்மை அருகிவிட்டது.

விற்பனையாகாத ''தமிழரசு''ப் பத்திரிகைகளை வேறு, அற நிலையங்கள் அனைத்தும் கட்டாயமாக வாங்கிப் 'படித்து' வருகின்றன!

இத்தனை எழுதினாலும் எடுத்துச் சொன்னாலும் இந்தப் போக்கை மாற்றிக் கொண்டுவிடுவார்கள் என்ற நம்பிக்கை கொள்வதற்கில்லை என்றாலும் இதையெல்லாம் சொல்லாமல் இருக்க முடியவில்லை என்பதனால் எழுதுகிறேன்!

சீநிவாசநல்லூர்
20—7—73 வா.கோ.பா.



''இந்த வேலையில்லாத் திண்டாட்டம் பண வீக்கம் இதெல்லாம் நினைச்சா பயமா இருக்கு!''

— விக்கெண்ட் - பாலி


விடிந்தால் பின்னே வீட்டுக்காரர்கள் வந்து இறங்கி விடுவார்கள். அப்புறம் யாருக்கும் தலைகால் புரியாது. வேளா வேளைக்குக் காப்பி, சாப்பாடு, பிள்ளையின் அத்தை, சித்திகள் கேட்கும் கேள்விகள், அவர்கள் சீர்வரிசைகளை நோட்டம் பார்க்கும் பார்வைகள், பெண்ணுக்குப் போட்டிருக்கும் நகை நட்டுக்களை ஆராயும் ஆராய்ச்சிகள்... அப்பப்பா! மாளமுடியாது!

சங்கரி — இரவு முழுதும் தூங்காதவள் — எழுந்து படுக்கையில் உட்கார்ந்தாள். அருகே அகிலா — கல்யாணப் பெண் நிச்சிந்தையாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அகிலாவின் குணமே அலாதி. எது எப்படிப் போனாலும் அவளுக்குத் தூக்கம் வந்துவிடும். எந்த விஷயத்திலும் அவளை அதிகமான துக்கமோ ஆனந்தமோ பாதிப்பதில்லை. இவள் எப்படிநாளைக்குப் புகுந்த வீட்டில் இருக்கப் போகிறாள்? சங்கரிக்கு வலது பக்கமாக, இரண்டாவது பெண் ராஜி முனகும் குழந்தையைத் தட்டிக் கொண்டிருந்தாள். குழந்தைக்கு ஆண்டு நிறைவு போன மாதம்தான் நடந்தது. அதற்குள் ராஜிக்கு அவசரம். அடுத்த வருடம் இந்த நாட்களில் இன்னொரு குழந்தையையும் தட்டப் போகிறாள்.

சங்கரி அலுப்புடன் எழுந்தாள். ஹாலில் இன்னும் எத்தனையோ பேர் படுத்துக்கொண்டிருந்தார்கள். நாத்தனார், அவளுடைய இரு பெண்கள், ஒரு பெண்ணுடைய நான்கு வயதுப் பிள்ளை, புகுந்த வீட்டு அத்தை, பிறந்த வீட்டிலிருந்து வந்த அக்கா, சித்தி, சித்தியின் பெண்....

ஹாலைத் தாண்டிச் செல்லும் போதுதான் பக்கத்து அறையில் விளக்கைப் போட்டுக் கொண்டு மூத்த பெண் கற்பகம் நிற்பது தெரிந்தது. ஒரு கணம் சங்கரிக்கு மனம் விம்மி தொண்டை அடைத்துக் கொண்டது. இரண்டாவது பெண்ணுக்கு இரண்டாவது குழந்தை பிறக்கப் போகிறது. மூன்றாவது பெண்ணுக்கு நாளைக்குக் கல்யாணம். இவள்? இருபத்தெட்டு வயதில் இன்னும் தனி மரமா? குமாஸ்தா உத்தியோகத்திலிருந்து கிடைக்கிற முந்நூற்று ஐம்பது ரூபாயையும் அப்பாவிடம் கொடுத்து, சில்லறைச் செலவுகளுக்கு அன்றாடம் கையேந்தி வாங்கிக் கொள்ளுகிற கற்பகத்துக்கு விடிவே கிடையாதா?

சங்கரியின் இதயத்தில் குத்திய முள் வலித்தது. கற்பகத்துக்கு ஒரு வாழ்வு பிறக்காததற்கு யார் காரணம்? நாலுபேர்கள் விதி என்று நுனி நாக்கால் உதிர்த்துவிட்டுப் போகிறார்கள். ஆனால் சங்கரிக்குத் தெரியும்,



கதவு திறந்தது



சிறப்புச் சிறுகதை

பி.வி.ஆர்.

கற்பகம், தானே வலியப் போய் விதியை அழைத்து வந்து, தன் மடியிலேயே போட்டுக் கொண்டு துவண்டு போகிறாள் என்று. மனத்தால் வரித்துவிட்ட பிள்ளையை அவள் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறாளோ இல்லையோ, அவனைப் பற்றி இன்னும் தன்னுள் புலம்பிக் கொண்டிருக்கிறாளோ இல்லையோ, சங்கரிக்குத் தெரியாது. பெற்ற தாயாரிடம் கூட, தன் மனத்தைத் திறந்து சொல்லாதவள் கற்பகம். அவளுடைய வாழ்க்கை வாசல் என்று திறக்கப் போகிறது?

கற்பகம் இருந்த அறைக்குள் சங்கரி பிரவேசித்தாள்.

''கப்பு?''

''என்ன அம்மா?''

''சிக்கிரம் எழுந்திட்டியா?''

''மூன்று மணி....'' அம்மாவைப் பார்க்காமலேயே அவள் பிளாஸ்டிக் டப்பாக்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

''என்ன செய்யறே?''

''அதுதான் பார்த்துக் கொண்டிருக்கிறாயே? இந்த அலிலாவுக்கு எதிலும் ஒரு பொறுப்புக் கிடையாது. பிள்ளை வீட்டுக்காரர்கள் ஏழு மணிக்கு வந்து விடுவார்கள். இந்த அறையில் தான் நவதானியங்களையும் சீர்ப் பாத்திரங்களையும் வைக்கணும்னு சொல்லியிருந்தோம்... நான் ஒன்பது பிளாஸ்டிக் டப்பாக்களைப் பல வர்ணங்களில் வாங்கிண்டு வந்தது தான் மிச்சம். யாரும் அரிசி பருப்புக்களை எடுத்து வைக்கவில்லை. கல்யாண மானாலும் ஆச்சு, ராஜி இந்த வீட்டில் எந்த அக்கறையும் காட்டறதில்லை. நீயும் அங்கே இங்கே ஓடிண்டிருக்காய்... அலிலாவைத்தான் நமக்குத் தெரியுமே...''

''ராஜி கல்யாணத்தின்போதும் இப்படித் தான் ஓடி ஓடி உடைஞ்சு போனாய்...... இப்பவும்....''

''சரி அம்மா. உனக்கு ஏதாவது வேலை இருந்தால் போய்ப் பாரு. எனக்கு நிறைய இருக்கு, செய்ய....''

''உனக்கு யார்தான் என்னிக்குத்தான் செய்யப் போகிறாளோ?'' சங்கரி தனக்குள்ளேயே சொல்லிக் கொள்ள நினைத்தபோதிலும், வார்த்தைகள் முணுமுணுப்பாகவே வெளிவந்தன.

''அம்மா! நானும் மிளகாய்ப்பொடிமாய்த் தொண தொணக்காதே... என் கழுத்திலே ஒரு தாலி ஏறலை என்பதைத் தவிர எனக்கு என்ன குறைச்சல்?''

சங்கரிக்கு அவளுடைய வார்த்தைகளைக் கேட்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. ஒரு பெண்ணுக்கு எவ்வளவு குறைகள் இருந்தாலும், தாலி ஒன்றுதான் நிறைவை அளிக்கும் என்பதைக்கூடவா கற்பகம் புரிந்து கொள்ளவில்லை? இல்லை, புரிந்துகொண்டு தான் இப்படிப் பேசுகிறாளோ?

இன்று நடக்கவிருக்கும் ஜான வாசமோ, நாளைய கல்யாணமோ சங்கரியின் மனத்தில் சிந்தனையைக் கிளறவில்லை. ஆறு ஆண்டுகளுக்கு முன் இதே வீட்டில் இதே போன்ற கல்யாண ஏற்பாடுகள் நடந்த கதைதான் கண் முன்னால் நின்றது. அந்தக் காட்சியில் தன்னைப் பறி கொடுத்துக் கொண்டே அவள் குளியல் அறையை நோக்கி நடந்தாள்.

அன்றும் இதே போல் கற்பகம் சீர் வரிசைகளை ஒழுங்காக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு எல்லாம் துப்புரவாக



இருக்க வேண்டும். துவைத்து வைத்த நான்கு முழம் துண்டு. அது கிழிசலாக இருந்தால்கூட ஒழுங்காக மடித்து வைத்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவள் தன்னுடைய கல்யாணத்துக்காக வாங்கியிருந்த கூறை, நிச்சயதார்த்தப் புடவைகளிலிருந்து, எவர்சில்வர் ஸ்பூன் வரை எல்லாச் சாமான்களையும் ஏதோ கண்காட்சிக்கு அமைப்பது போல அடுக்கிக்கொண்டிருந்தாள். வெள்ளிப் பாத்திரங்கள் ஒரு பக்கம், அதற்குப் பின் எவர்சில்வர். பாய்லரும், பித்தளைச் செம்புகளும் ஓர் ஓரத்தில். புடவைகளும், ரவிக்கைகளும் மற்றத் துணிமணிகளும் தனியாக ஒரு பீரோவில். குடித்தனத்துக்கு வேண்டிய தானிய வகைகளை அடையாளச் சின்னங்களாகக் கற்பகமே பல்வேறு ஜாடிகளில் போட்டு வரிசைப்படுத்தினாள்.

மொத்தத்தில் அந்த அறை கற்பகத்தின் மன ஒழுக்கத்தின் சின்னமாகத் திகழ்ந்தது.

சங்கரி பல் தேய்த்து விட்டுச் சமையற்கட்டை நோக்கி நடந்தாள். கொல்லைத் தாழ்வாரத்தில் சமையற்காரர்கள் தங்கள் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். ஓரிரண்டு ஈர விறகுகள் புகையைக் கக்க, ஓரிருவர் தங்கள் கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தார்கள்.

அவள் தன் மனத்தில் புகைத்துகொண்டிருக்கும் புகையினூடே அந்த நாளை நினைத்துப் பார்த்தாள். நினைவிலேயே நெஞ்சம் துவண்டது.

பிள்ளை வீட்டுக்காரர்கள் ஒரு விசேஷ பஸ்ஸில் வரப்போகிறார்கள். சென்னையிலிருந்து பிற்பகல் இரண்டு மணிக்குப் புறப்படப் போவதாகவும், இரவைத் திருச்சியில் கழித்துவிட்டு, மறுநாள் அதிகாலையில் புறப்பட்டுச் சுமார் பதினொரு மணிக்குக் கோயமுத்தூருக்கு வந்து சேரப் போவதாகவும் தகவல் வந்தது. இந்த பஸ் ஏற்பாடே சங்கரிக்கு ஆரம்பத்திலிருந்து பிடிக்கவில்லை. சாயங்காலம் ஜானவாசம். அன்று காலை பதினொரு மணிக்கு வருவது என்றால்? பஸ் சரியாக வர வேண்டுமே? ஏதோ கோளாறினால் ஒரு மூன்று நான்கு மணி நேரம் தாமதமானால்கூட விபரீதம்தான். தெய்வத்தை நினைத்துக்கொண்டு சங்கரி நேரத்தைத் தள்ளினாள். கற்பகம் எதைப் பற்றியும் கவலைப்படாமல் மறுநாள் தனக்குக் கல்யாணம் என்பதைக் கூடச் சிந்திக்காதவளைப் போல் நடந்து கொண்டது கூடப்பெற்ற வயிற்றுக்கு எரிச்சலாயிருந்தது.

பதினொரு மணிக்கு பஸ் வரவில்லை. போன்தான் வந்தது. கரூர் ரோட்டில் காவிரியின் ஓரமாக ஓடும் குறுகிய ரஸ்தாவில் ஒரு திருப்பத்தில் பஸ் லாரியுடன் மோதிவிட்டது. மாப்பிள்ளையின் அத்தை புருஷருக்கும், பிள்ளையின் மாமிக்கும் பலத்த காயம். டிரைவர் ஸ்தலத்திலேயே...

கல்யாண வீடே ஒரு நிசப்தத்தில் ஆழ்ந்தது. சங்கரியின் தம்பி காரை எடுத்துக்கொண்டு பறந்தான். அவன் போய் ஒன்றும் நடக்கப்போவதில்லை. இருந்தாலும் போனான். அவன் இரவு திரும்பியபோதுதான், பிள்ளை வீட்டுக்காரர்கள் அத்தையின் புருஷருடைய சடலத்துடன் சென்னைக்குத் திரும்புகிறார்கள் என்ற செய்தி கிடைத்தது.

சங்கரி அழுதாள். கணவர் நாராயணனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. திக்பிரமையுடன் அவர் உட்கார்ந்து விட்டார். மேளக்காரர்கள், சமையல்காரர்கள், பந்தல் போட்டவர்கள் எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

கற்பகம் மட்டும் மாய்ந்து போகவில்லை. கல்யாணத்துக்காக ஏழு நாள் லீவு போட்டிருந்தவள், சரியாக ஒன்பது மணிக்கு வேலைக்குப் புறப்பட்டாள்.

''என்ன கப்பு?''

''ஒன்றுமில்லை அம்மா! ஆபீஸுக்குப் போறேன். லீவைக் கான்ஸல் செய்யப் போறேன்.''

''இன்னிக்கு எதுக்கும்மா ஆபீஸ்?''

''இங்கே என்ன வேலை? கல்யாணம்தான் நடக்கவில்லையே?''

''கப்பு...''

''நான் வரேன், அம்மா.''

கற்பகத்தின் போக்கே சங்கரிக்குப் புரியவில்லை. இதற்குக் காரணம் பெண்ணின் நெஞ்சழுத்தமா, உதாசீனமா, அல்லது அலட்சியமா? நாள் முழுதும் அவள் வீட்டில் கண்ணீர் விட, பெண் ஏதும் நடக்காதது போல் காரியாலயத்துக்குச் செல்கிறாளே!

எதுவும் நம் கையில் இல்லை. நம் கையில் இல்லாத எதைப் பற்றியும் கவலைப்பட்டுப் புண்ணியமில்லை. இந்த வேதாந்தத்தில்தான் தன் பெண் ஊறிப் போயிருக்கிறாள் என்று சங்கரி சிந்தித்தாளே தவிர வேறு எதுவும் அவளால் செய்ய இயலவில்லை.

நாட்கள் சென்றன. பஸ் விபத்தின் எதிரொலிகள் அடங்கிய பின், மீண்டும் கடிதம் வரும் என்று நாராயணனும், சங்கரியும் எதிர்பார்த்தார்கள். ஒரு மாதம் வரையில் கல்யாணப் பந்தலையும் பிரிக்கவில்லை. ஆனால் ஒரு மாதத்துக்குப் பின் கடிதம் வந்தது. பிள்ளையின் தாயார் அபசகுனத்தைக் காரணமாகக் காட்டி, கல்யாணத்தையே நிறுத்திவிட்டாள். பெண்ணுக்கு வேறு இடம் பார்த்துக்கொள்ளலாம் என்றும், பிள்ளை கேதாரத்துக்கு வேறு பெண் பார்க்கிறோம் என்றும் கடிதத்தில் தெளிவாக எழுதியிருந்தார்கள்.

மெள்ள மெள்ளச் சங்கரியும் நாராயணனும் தேறினார்கள். வேறு இடங்களில் ஜாதகம் வாங்கினார்கள். ஒரு கல்கத்தாப் பிள்ளையை முடிவு செய்யவும் நினைத்தார்கள். பின்னே, பெண்ணைப் பார்க்க வேண்டியதுதான் பாக்கி.

இதுவரையில் மௌனமாகவே இருந்த கற்பகம், நறுக்குத் தெறித்தாற்போல் தன் மனத்தை ஒருசில வார்த்தைகளில் திறந்து காட்டினாள்.

''என்னை இனி வேறு ஒரு பிள்ளை பார்க்கப் போவதுமில்லை; என் கழுத்தில் தாலி கட்டப் போவதுமில்லை. கேதாரம் பார்த்தான். பிடிச்சது என்றான். நான் பார்த்தேன். பிடிச்சது என்றேன். அவ்வளவுதான். பிடிச்சது கிடைக்கவில்லை என்பதற்காகக் கிடைப்பதைப் பிடித்துக்கொண்டு அனுபவிக்க விருப்பமில்லை.''

சங்கரியும் நாராயணனும் ஸ்தம்பித்துப் போனார்கள். அதன் பின் மூன்று வருடங்களுக்கு முன் ராஜியின் கல்யாணம் நடந்தது. மூத்த பெண் ஏன் கல்யாணம் வேண்டாம்

என்று சொல்லுகிறான் என்று சம்பந்தி வீட்டார் விசாரிக்கத்தான் விசாரித்தார்கள். வாய்க்கு வந்த பதிலைச் சொல்லிச் சமாளித்துக்கொண்டாள் சங்கரி.

இப்போது மூன்றும் பெண் அகிலாவுக்குக் கல்யாணம் நடக்கப் போகிறது. இன்னும் ஒரு மணி நேரத்தில் பிள்ளை வீட்டுக்காரர்கள் ரயிலில் வந்து இறங்குவார்கள். இவர்களும் சென்னையிலிருந்து தான் வருகிறார்கள். அன்றும் பிள்ளை வீட்டுக்காரர்கள் ரயிலில் வந்திருக்கக் கூடாதோ?

வீட்டில் முதல் விளக்காகப் பிறந்தவள் ஜோதியுடன் பிரகாசித்துக் கொண்டிருப்பாளே?

சங்கரி ஒரு வாய் காப்பியைக் குடித்துவிட்டு, கற்பகத்துக்கு ஒரு தம்ளர் எடுத்துக் கொண்டு வந்தாள்.

அவள் அந்த அறையை அடையவும், கற்பகம் கையில் இரண்டு சோளிகளுடன் வெளியே வரவும் சரியாக இருந்தது.

''கப்பு! என்ன இது கையிலே?''

''அகிலா நேத்துச் சொன்னாள், சோளியின் இறக்கம் அதிகம்னு. கை வேறு நீளமாக இருக்கு.''

''அதுக்கு?''

''டெய்லர் கிட்டப் போறேன்.''

''இப்போ எங்கே திறந்திருப்பான்?''

''அவன் வீடு பக்கத்திலேதான். வீட்டிலேயே ஒரு மெஷின்கூட இருக்கு. அரை மணி நேரத்திலே வந்துடறேன்...''

''அதுக்கு இது தான் நேரமா கப்பு? இந்தக் காப்பியைக் குடி...''

''தா. குடிச்சிட்டே போறேன்.''

''போக வேண்டாம். எல்லாம் மத்தியானம் பார்த்துக் கொள்ளலாம். நிறைய நேரம் இருக்கு..''

''உனக்குத் தெரியாதும்மா. பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்துவிட்டால் நம்ப வேலை எதையும் செய்ய முடியாது. நீ பேசாமல் இரு. அகிலா தூங்கி

எழுந்திருந்தால் இதை இன்னும் சரி செய்யவில்லையா என்று கத்துவாள்.''

காலித் தம்ளரை அம்மாவின் கையில் கொடுத்துவிட்டு, கற்பகம் விரைந்தாள்.

சரியாக ஏழு மணிக்குப் பிள்ளை வீட்டுக்காரர்கள் நான்கைந்து டாக்ஸிகளில் வந்து இறங்கினார்கள். அவர்களுக்கென்று ஒதுக்கி வைத்திருந்த நகைக்கடைச் செட்டியார் வீட்டில் கற்பகம், அவளுடைய தாயார், ராஜி, நாராயணன் முதலானோர் காத்திருந்து வரவேற்றார்கள்.

வந்திருந்தவர்களை அழைத்துக் கொண்டு அம்மாவும் அப்பாவும் உள்ளே செல்ல, கற்பகம் இன்னும் நின்று கொண்டிருந்தாள். கடைசி டாக்ஸியிலிருந்து இன்னும் யாரும் இறங்கவில்லை. சாமான்களை வேறு இறக்கியாக வேண்டும்.

முதலில் வந்த டாக்ஸிகள் நகர்ந்த பிறகு, கடைசி டாக்ஸி வீட்டு வாசல் முன் நின்றது.

அதிலிருந்து நான்கைந்து குழந்தைகளும் ஒரு வயது வந்த ஸ்திரீயும் இறங்கினார்கள். அவ்வளவு தான் என்று கற்பகம் மூச்சு விட்டபோது, திடீரென்று அவன் இறங்கினான்.

ஒரு கணம் கற்பகத்துக்கு மூச்சு நின்றது. கண்கள் இருண்டன. தலை சுற்றியது.

கேதாரம் ஒரு கட்டையைத் தோள்பட்டையிடையில் தாங்கிக் கொண்டு வந்தான். வலது காலுக்கு இணையாகக் கட்டை நடந்தது.

வாசலில் நின்ற கற்பகத்தைக் கவனிக்காமல் வந்த கேதாரம், வாயிற்படியண்டை ஒரு விநாடி நின்று காரிலிருந்து சாமான்கள் இறங்குகின்றனவா என்று திரும்பிப் பார்த்தான்.

நெஞ்சின் வேலையை மறைத்துக்கொண்டு, கற்பகம், ''வாருங்கள்... அதை நான் கவனித்துக் கொள்கிறேன்!'' என்றாள்.

கேதாரம் ஏறிட்டுப் பார்த்தான். ஒரு கணம்

அவன் முகத்தில் ஆச்சரியமும் திகைப்பும் பிரதிபலித்தன.

''நீ ஆர் கற்பகம்...? அலிஸாவின் அக்கா!''

''ஆமாம்... வாருங்கள்!''

''மாப்பிள்ளை என்னுடைய ஸ்டூடண்ட்... நான் வந்தால்தான் ஆச்சு என்றான். தவிர்க்க முடியவில்லை.''

கேதாரம் சிரித்தான். சிரிப்பு மன்னிப்புக் கோருவது போல் ஒலித்தது.

''ரொம்ப சந்தோஷம்... வாருங்கள்... அந்தப் பையை என்னிடம் கொடுங்கள்...படி கொஞ்சம் உயரம். மொஸாய்க் வேறே... வழுக்கும்... ஷால் ஐ ஹெல்ப் யு?''

''நோ. தாங்க்ஸ்... நான் மானேஜ் பண்ணிக்கிறேன்... உன் அப்பா அம்மா எல்லாரும் சௌக்கியமா?''

''ஓ. யெஸ்...''

அவன் முடிப்பதற்கும் மாப்பிள்ளை அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது.

''சங்கர்...! ஷி இஸ் கற்பகம்... ப்ரைட்ஸ் ஸிஸ்டர்.''

''ஓ... க்ளாட் டு மீட் யு... உங்களைப்பற்றி எனக்கு நிறையத் தெரியும்... பெண் பார்க்க வந்தன்னிக்கு உங்களைப் பார்ப்போம் என்று எதிர்பார்த்தேன். ஆனால்....''

''தப்பு என்மேல்தான். நான் ஆபீஸுக்குப் போய்விட்டேன்.''

''இவர் என் புரொபஸர்... குரு... ஆமாம் குரு என்றால் எல்லா விஷயங்களிலும் குரு தான்'' என்றான் சங்கர்.

''ஆல் ரைட்... ஆல்ரைட்... வழியை அடைச்சுண்டு நிக்காதே. மாப்பிள்ளை மாதிரி நடந்துகொள்...''

''அது எப்படி சார்...?''

''தெரியாது...இதுக்கு நான் குரு இல்லை.''

கற்பகம் வாய் விட்டுச் சிரித்தாள்.

சங்கர் நகர்ந்தான். கேதாரம் திண்ணையைத் தாண்டி ரேழியைக் கடந்து கூடத்தை அடையும்வரையில் மௌனமாக இருந்தான். பிறகு மெல்ல, ''மிஸ் கற்பகம்... உங்களுடன் ஓரிரண்டு வார்த்தைகள் தனியாகப் பேச வேண்டும்!'' என்றான்.

''எதைப் பற்றி?''

''என் புரொபஸரைப் பற்றி!''

''அவருக்கு என்ன?''

''அந்த பஸ் ஆக்ஸிடெண்ட்...''

''அதற்கு என்ன?''

''ஆக்ஸிடெண்ட் அவர் காலை மட்டும் பாதிக்கவில்லை... மனத்தையும் ரொம்பப் பாதித்திருக்கிறது. கால் ஒடிந்த பின், உங்களைக் கல்யாணம் செய்துகொள்ள முன்வருவது உங்களை ஏமாற்றுவது போலாகும் என்று மறுத்து விட்டார். சுயநலம் என்று பிறர் குற்றம் சாட்டுவார்களோ என்று அவருக்கு மனம் உதைக்கிறது...''

''விபத்துக்கள் இல்லாத வாழ்க்கைகள் இல்லை, மிஸ்டர் சங்கர்... கண்ணுக்குத் தெரியாத விபத்துக்களும் நடக்கின்றன தெரியுமா?''

''எனக்குப் புரிகிறது.''

''காப்பி சாப்பிட்டீர்களா?''

''நீங்கள்?''

''எங்களைப் பற்றி நீங்கள் கவலைப்படக் கூடாது. உங்களைப் பற்றித்தான் நாங்கள் இன்றைக்குக் கவலைப்பட வேண்டும்... வாருங்கள் போகலாம்!''

''உங்கள் வாழ்க்கையில் பிறர் கண்ணுக்குத் தெரியாமல் ஏற்பட்டிருக்கிற விபத்து உங்களை எவ்வளவு தூரம் பாதித்திருக்கும் என்பதை என்னால் உணர முடிகிறது, மிஸ் கற்பகம்!''

''தாங்க்ஸ். போவோமா?''

''இந்த விபத்துக்கு அப்புறம் கூட, என் புரொபஸரின் குணத்தையும் அறிவையும் மதித்து எவ்வளவோ பேர் பெண் கொடுக்க முன்வந்தார்கள்... இந்த ஆறு வருஷங்களில் அவர் மனதில் சலனமே ஏற்படவில்லை...இது உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்கா தீர்கள்... அவருடைய நகத்துக்கு நான் சதை யாக இருந்து வருகிறேன். இப்போது அவர் கீழ்தான் வேலையும் செய்கிறேன்.''

''குட்... வெரி குட்... உள்ளே உங்களுக் காக எல்லோரும் 'காத்துக் கொண்டிருப் பார்கள்... டிபன் இலையில் ஆறிப்போய்க் கொண்டிருக்கிறது...''

''விஷயம் ஆறிவிட்டது என்று நாம் மறந்துவிடவோ, ஒதுக்கிவிடவோ, உதாசீனப் படுத்தவோ வேண்டாம்...இல்லியா?''

''ஆறினதைச் சுடவைக்கப் பார்க்கிறீர்கள், மிஸ்டர் சங்கர். ஆனால் எனக்கு எதுவுமே சூடாக இல்லை. அதனால் ஆறுகிறது என்கிற பேச்சுக்கே இடமில்லை!''

''என்ன கப்பு, இங்கேயே நின்று பேசிக் கொண்டிருக்கிறாய்...மாப்பிள்ளையைக் காப்பி டிபன் சாப்பிட அழைச்சுண்டு வா...!''

திடீரென்று அம்மாவின் குரல் கேட்கவே, கற்பகம் திரும்பினாள். சங்கரும் பின் தொடர்ந்தான்.

''புரொபஸரின் அம்மா அப்பாகூடப் பக்கத்திலே மேட்டுப்பாளையத்தில்தான் இப் போது இருக்கிறார்கள். அங்கே பெண் வீட் டுக்கு வந்திருக்கிறார்கள்...''

சங்கருடைய வார்த்தைகள் கற்பகத்தின் காதில் விழுந்ததே தவிர ஒலிக்கவில்லை.

மத்தியானம் ஒரு மணிக்குச் சங்கரி அவசர அவசரமாகக் கற்பகத்தைத் தேடிக்கொண்டு வந்தாள்.

''என்னம்மா, ஏன் இப்படிப் பறக்கிறே?''

''அந்தக் கேதாரம் வந்திருக்கிறாரோ இல்லையோ?''

''ஆமாம், அதுக்கு என்ன?''

''இப்போ, இந்த மாப்பிள்ளை என்ன காரி யம் செய்திருக்கான் தெரியுமோ?''

''என்ன?''

''மேட்டுப்பாளையத்துக்கு ஒரு டாக்ஸியை அனுப்பி, அவருடைய அம்மா, அப்பா, பெண் எல்லாரையும் வரவழைத்திருக்கான். இப்போ அவர்கள் உன் அப்பாவுடன் பேசிக்கொண் டிருக்கிறார்கள்.''

''பேசட்டுமே!''

''என்ன பேசுகிறார்கள் தெரியுமா?''

''பெண் கேட்கிறார்களாக்கும்?''

''ஆமாம்டி... உனக்கு எப்படித் தெரி யும்?......''



''நான் வெகு நாட்கள் ஊரில் இல்லையே; ஊரில் வம்பு பேச என்ன அடிபட்டது? சீக்கிரம் சொல்லுடி!''

''எப்படியோ!''

''நீ என்ன சொல்றே?''

''நான் புதுசாச் சொல்றதுக்கு என்ன இருக்கு...?''

''ஒரு கால் ஊனம்னு புதுக் காரணம் வேறே இருக்கு, உனக்கு...?''

''அம்மா... உனக்கு விவேகம் போராது... கால் ஊனத்தைப் பத்தி நான் நினைக்கவே யில்லே...அவர் மனசு ஊனமா யில்லே என்பது எனக்குத் தெரியறது...''

''அப்போ?''

''புதுசா நான் என்ன சொல்லணும்...? அன்னிக்குச் சொன்னதுதான் இன்னிக்கும்.''

''ஏண்டி இப்படிப் பேசறே... வரனை பார்க்கக் கூடாதுன்னு எங்க கையைக் கட்டிப் போட்டே... இந்தப் பிள்ளையை அன்னிக்கு உனக்குப் பிடிச்சிருந்தது...அவருக்கு இன் னும் உன்னைப் பிடிச்சிருக்கு. நீதான்...''

''எனக்குப் பிடிக்கலேன்னு நான் எப்போ சொன்னேன்?''

''இப்பத்தானே... புதுசா சொல்றதுக்கு ஒன்னுமில்லேன்னு சொன்னியே...''

''ஆமாம் அம்மா! இன்னமும் அதைத் தான் சொல்றேன். அன்னிக்கு இவரைப் பிடிச்சதுன்னுதானே சொன்னேன்...''

சங்கரி ஒரு கணம் சிலையாக நின்றாள். பெண்ணை அப்படியே வாரிக் கட்டிக்கொள்ள அவளுக்குக் கை துடித்தது.

கற்பகம் சொன்னாள்:

''பிடிச்சது கிடைக்கவில்லை என்பதற்காக, கிடைப்பதைப் பிடித்துக் கொண்டு அனுப விக்க மாட்டேன் என்று உனக்குத் தெரியும் அம்மா! இப்போ பிடிச்சதே கிடைச்சிருக்கு. ஒரு தடவை நழுவிப் போனது கைக்கே வந்த போது நான் ஏன் அம்மா கதவைத் திறந்து வரவேற்கப்படாது? நான் தயார்!''

சங்கரிக்கு நிலை கொள்ளவில்லை. 'இதே முகூர்த்தம்' என்று தனக்குள் இரைந்து கொண்டே அவள் ஓடினாள்.


தந்தி விலாசத்தில்
ஐந்து வார்த்தைகளுக்குக்
கட்டணம்
கிடையாது
நீங்கள் அனுப்பும் தந்தியின் விலாசம்
நீளமாக இருக்கிறதா?
அதற்காகக் கவலைப்பட வேண்டாம்.
அவ்விதம் இருப்பின், விலாசத்தின் முதல்
ஐந்து வார்த்தைகளுக்குக் கட்டணம் வசூலிக்
கப்படுகிறது. ஆனால் அடுத்த ஐந்து வார்த்தை
களுக்குக் கட்டணம் கிடையாது. வார்த்தை
கள் பத்துக்கு மேற்பட்டால், அந்தக் கூடுதல்
வார்த்தைகளுக்குக் கட்டணம் உண்டு.
விலாசத்தில், பட்டணத்தின் பெயருக்கு
அடுத்ததாக பின்-கோடை குறிப்பிடுங்கள்.
அதற்கு கட்டணம் கிடையாது.
விலாசம், சரியாகவும், முழுமையாகவும்
இருந்தால் தந்தி விரைவாகப்
பட்டுவாடா ஆகும்.
இதை மறவாதீர்கள்.
davp 73/173

மனம் திருந்தினேன்

அள்ளியும் கொடுக்கும் அடியோடும் பறிக்கும்!

"நான் முதன் முறையாகக் குதிரைப் பந்தயத்துக்குப் போனது 1941ம் ஆண்டில். அன்று மீலாடி நபி பண்டிகை. விடுமுறை நாள். எனக்குத் திருமணம் ஆன புதிது. என்னுடைய அதிர்ஷ்டம் எப்படி என்று பரீட்சை பார்க்க வேண்டுமென்று ஓர் ஆசை! கிண்டிக்குப் போனேன். 'டபிள்' டிக்கெட் ஒன்று வாங்கினேன். ரூ. 597 கிடைத்தது. அந்தப் பணத்தில் என் மனைவிக்கு எட்டுச் சவரன்கள் வாங்கிக் கொடுத்தேன். இப்படி ஆரம்பமாகிய எனது குதிரைப் பந்தய மோகம் முப்பது வருட காலம் தொடர்ந்து நீடித்தது" என்று தமது அநுபவத்தை விவரிக்கிறார் திரு பி. நாராயணசாமி.

சென்னை நகராண்மைக் கழகத்தில் சுமார் முப்பத்து நான்கு வருடங்கள் ஓவர்சீயராகப் பணியாற்றி 1969ல் ஓய்வு பெற்றுள்ள திரு நாராயணசாமிக்கு ஆறு பிள்ளைகள். பெண்கள் இல்லை. நுங்கம்பாக்கத்தில் சொந்த வீடு. ஒரு பகுதியைக் குடக்கூலிக்கு விட்டிருப்பதன் மூலம் கிடைக்கும் வாடகைப் பணம், பென்ஷன் தொகை இவற்றைக் கொண்டு கௌரவமாகவாழ்ந்து வருகிறார்.



"என் பிள்ளைகளின் சம்பாத்தியத்தை நம்பி நான் வாழ விரும்பவில்லை. அது என் சுய கௌரவத்துக்கு இடம் தராது. 'பிளான்' எழுதிக் கொடுத்து இப்போதும் ஓரளவு என் குடும்பத் தேவைக்கு என்னால் சம்பாதித்துக் கொள்ள முடிகிறது" என்கிறார் தன்னம்பிக்கையுடன்.

"இப்போது நீங்கள் குதிரைப் பந்தயத்துக்குப் போவதை அறவே நிறுத்திவிட்டீர்களா? வீட்டிலிருந்தபடியே, பந்தயத்துக்குப் போகிறவர்களுடன் கூட்டுச் சேர்ந்து அதில் கலந்து கொள்ளுவது உண்டா?" என்று கேட்கிறேன்.

திரு நாராயணசாமியும் அவரது மனைவியும் ஆறு பிள்ளைகளுள் ஒருவரும்.



"ஒரு வேளை பெண் குழந்தை பிறந்திருந்தால் ரேஸுக்குப் போவதைப் பல வருஷங்களுக்கு முன்னமேயே நிறுத்தியிருப்பேனோ என்னவோ!"

"போகிறதுமில்லை. தனிப்பட்ட 'ரேஸ்'களில் கூட்டுச் சேர்ந்து விளையாடுவதும் கிடையாது. 'ஜாக்பாட்' பந்தயங்களில் மட்டுமே கூட்டுச் சேர்ந்து ஆடியிருக்கிறேன். ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை நாட்களில் நடக்கும் பந்தயங்களுக்கு மட்டுமே போவேன். 'ரேஸ்' நடக்கிற எல்லா நாட்களுக்குமே போய்க் கொண்டிருக்க மாட்டேன். 'சீசன்' டிக்கெட் கூட வாங்கி வைத்துக் கொள்வேன். ஆனால் விடுமுறை நாட்களில் நடக்கிற பந்தயங்களுக்கு மட்டுமே போவேன். என் வேலைக்கு 'மட்டம்' போட்டுவிட்டுக் குதிரைப் பந்தயத்துக்குப் போகும் அளவுக்கு வெறி கிடையாது. ரேஸுக்குப் போகிற தினங்களில்கூட, நடைபெறும் எல்லாப் பந்தயங்களிலும் பணம் கட்டிப் பங்கு கொள்வதில்லை. குறிப்பாக மூன்று பந்தயங்களைத் தேர்ந்தெடுத்து ஆடுவேன். தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் பிறருடைய புத்திமதி, ஆலோசனைகளைக் கேட்டு அதற்கேற்றபடி வெல்லாம் ஆடிக் கொண்டிருக்க மாட்டேன். என் மனத்துக்குப் பிடித்தமான இரண்டு மூன்று பந்தயங்களில் மட்டுமே ரூபாய் நூறுவரை பணம் கட்டி ஆடுவேன். குதிரைகள் ஓடும்பொழுது அந்த ஓட்டத்தையும் ஆரம்பம் முதல் இறுதிவரையில் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். 'போட்டோகிராஃபர்' ஸ்டாண்டுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு அமைதியாகக் கவனிப்பேன். நான் பணம் கட்டும் குதிரை வெற்றி பெறும்போது துள்ளிக் குதிப்பதுமில்லை; தோற்றால் மனம் உடைந்துபோய் விடுவதும் இல்லை. கடன், உடன் வாங்கிப் பந்தயத்துக்குப் போவது எனக்குப் பிடிக்காது."

"சில கொள்கைகள், கட்டுப்பாடுகளை வகுத்துக் கொண்டு அவற்றை உறுதியாகக் கடைப்பிடித்து வந்திருக்கிறீர்கள். பாராட்டவேண்டியதுதான். நீங்கள் வெற்றியடைந்த பந்தயங்களுள் உங்க

ளுக்குக் கிடைத்த உயர்ந்த பட்சத் தொகை எவ்வளவு?''

''ஒரு தடவை 'ஜாக்பாட்'டில் ரூ. 4500 'ஷேர்' (என் பங்கு) வாங்கினேன். அதுதான் குறிப்பிடத் தக்கது.''

''இவ்வளவு வருடங்களாக இதில் ஈடு பட்டிருந்திருக்கிறீர்களே — மொத்தத்தில் உங்களுக்கு இலாபமா, நஷ்டமா?''

''லாபமும் நஷ்டமும் சரி சமமாக இருந்திருக்கும். நான் சரியாகக் கணக்கு வைத்துக் கொள்ளவில்லை. மொத்தமாக எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால், நஷ்டத்துக்கு லாபம் சரிக்கட்டியிருக்கும். கையைக் கடிக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.''

''ஒரு நாள் ஆட்டத்தில் நீங்கள் இழந்த உயர்ந்தபட்சத் தொகை என்ன இருக்கும்?''

''இருநூறு ரூபாய்.''

''கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்த பணத்தில் இருநூறு ரூபாய் போய்விட்டதே என்ற வருத்தம் ஏற்படவில்லையா?''

''வருத்தமே இருக்கவில்லை என்று சொல்ல முடியுமா? கொஞ்சம்சங்கடமாகத்தான் இருக்கும். ஆனால் அடுத்த தடவை லாபம் வரும் போது அது ஈடுகட்டி விடுகிறதே?''

''சரி, குதிரைப் பந்தயத்துக்குப் போகும் பழக்கத்தை எவ்வாறு நிறுத்தினீர்கள்? சிறிது சிறிதாகக் குறைத்து நாளடைவில் கைவிட்டீர்களா, அல்லது....?''

''குதிரைப் பந்தயம் விஷயத்தில் அப்படிச் செய்வது சாத்தியமே இல்லை. சிகரெட் பிடிப்பவர்கள் சிகரெட்டின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டே வந்து நாளடைவில் நிறுத்திவிட முடியும். ஆனால் ரேஸ் அப்படி இல்லை. நான் ஒரு நாள் தீர்மானம் செய்தேன். அறவே நிறுத்திவிட்டேன். வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு சொல்பத் தொகைதானே 'பென்ஷன்' வருகிறது? அதில் குதிரைப் பந்தயத்துக்கும் செலவழிப்பதென்றால் முடியுமா? முன்பு நான் வேலையிலிருந்தபோது நஷ்டம் வந்தால் சமாளிக்க முடியும். இப்போது அது முடியாது அல்லவா? தவிரவும் ஒரு நாள் என் மூத்த பையன் என் மனைவியிடம் ரகசியமாக 'ஏன் அம்மா! அப்பா இப்போ ரிடையர் ஆன பிறகும் வழக்கம்போல் ரேஸுக்குப் போய்க் கொண்டிருக்கிறாரே...' என்று மெல்லச் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். உடனேயே முடிவு செய்து விட்டேன்: 'இனி மேல் குதிரைப் பந்தயத்துக்குப் போகவே கூடாது. அதை நிறுத்திவிடுவதுதான் நமக்கு மரியாதை' என்று. அதை இன்றளவும் கடைப்பிடித்து வருகிறேன். இனி அந்தச் சபலம் என்னிடம் தலைகாட்டாது!'' என்று உறுதியாகச் சொல்கிறார் திரு நாராயணசாமி.

அவர் வழக்கமாகக் குதிரைப் பந்தயத்துக்குப் போய்க் கொண்டிருந்த காலத்தில் அதுபற்றி அவரது மனைவி, மக்களுக்குத் தெரியுமாம். ஆனால் யாரும் அவர் போக்கில் குறுக்கிட மாட்டார்களாம். குடும்பச் செலவுக்கு ஆகும் பணத்திலிருந்து ஒரு பைசாக் கூடக் குதிரைப் பந்தயச் செலவுக்கு எடுத்துச் செலவழிக்காமல் கண்டிப்புடன் இருந்து வந்திருக்கிறார். இது எல்லோருக்கும் சாத்தியமில்லையே?


அவர் சொல்லுகிறார்: ''ரேஸ் மைதானத்தில் பார்த்திருக்கிறேன் — கணிசமான பணத்தை இழந்தவர்கள் சிலர் பித்துப் பிடித்தமாதிரி தனக்குத் தானே பேசிக் கொண்டு அலைவார்கள். பொருளை இழந்த வேதனையால் மனம் நொந்து போனவர்கள் இப்படி எத்தனையோ வகையினர். இன்று நான் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள நிலையில் இப்படி நஷ்டம் வந்தால் தாங்காதே? ஒருகால் அந்த நஷ்டத்தைச் சகித்துக்கொள்ள முடியாமற் போய் 'ஹார்ட்' எங்கே நின்று போய்விடுமோ என்ற பயமும் தோன்றியது. என்னுடைய சொந்த நலனை மட்டுமின்றிக் குடும்ப நலனையும் மனத்திலே கொண்டு, குதிரைப் பந்தயத் தொடர்பை அறவே துண்டித்து விட்டேன். இந்த வயசிலே ஏன் சார் 'ரிஸ்க்' எடுக்கணும்? ஒருகால் எனக்குப் பெண் குழந்தைகள் பிறந்திருந்தால் பல வருஷங்களுக்கு முன்பே நிறுத்தியிருப்பேனோ என்னவோ? பெண் என்றால், கல்யாணச் செலவெல்லாம் இருக்கிறதல்லவா? அந்தச் செலவு இல்லாததால்தான் இவ்வளவு வருஷங்கள் இதில் தொடர்ந்து ஈடுபாடு கொண்டிருந்திருக்கிறேன். பொதுவாகச் சொன்னால், வேலையிலிருந்து ஓய்வுபெற்று வருமானம் குறைந்த நிலையில் யாருமே குதிரைப் பந்தயத்தில் ஈடுபாடு கொள்வது விரும்பத் தக்கதல்ல'' என்கிறார் நாராயணசாமி. அனுபவத்தில் தோய்ந்த அவரது அறிவுரை பலருக்குப் பயன்படுமல்லவா?

பேட்டி: 'பாணன்'



ஸ்க்ரூ டிரைவர், ஆணிகள், கத்தி, குறடு இம் மாதிரி சாமான்களைப் போட்டு வைக்கும் டப்பாவில் ஒரு கரித் துண்டைப் போட்டு வையுங்கள். கரி, ஈரப் பசையை இழுத்துக் கொண்டு விடுமாதலால் அந்தச் சாமான்களில் துருப் பிடிக்காது.

பெங்களூர் -- சரோஜா ராமச்சந்திரன்



காஸ் அடுப்புக்கான சிலிண்டரில் காஸ் எந்த அளவு உள்ளது எனச் சோதித்துப் பார்க்க, ஒரு சிறிய கல்லை சிலிண்டரின் மேல் பாகத்திலிருந்து கீழ்வரை தட்டினால், காஸ் இருக்கும் பாகம் வந்ததும் ஒலி குறைவாகக் கேட்கும். இது காஸ் தீர்ந்துவிட்டதா என அறியச் சுலபமான வழி.

ஆதாரம்: ''ஹிந்து''
தமிழில்: சரோஜா நரசிம்மன்


சுஜாதா
குறுநாவல்

A Police officer must hit the exact line between excess and failure of duty and is guilty of criminal neglect if he fails to judge rightly.

– Wade and Philips
Constitutional Law

ராஜா இறந்து போய் இரத்தம் சிந்தும் இடத்தில் ரோஜா மிகச் சிவப்பாய்ப் பூக்கும் என்று எண்ணுகிறேன்.

—உமார்கய்யாம்

பெரிய பள்ளம் : ஒரு முன்னுரை

பெரிய பள்ளம் டவுனாக முயற்சி செய்து கொண்டிருந்த கிராமம். அதில் வி.கே.எஸ். கோ ஆப்பரேடிவ் ஷுகர் மில்ஸ் என்ற ஒரு சர்க்கரை ஆலை இருந்தது. புழக்கத்தில் 'கோப்-ரேட்டி' என்று அழைக்கப்பட்ட அந்த ஆலையின் வருகையால் பெரிய பள்ளத்தில் மாறுதல்கள் ஏற்பட்டன. டூரிங் டாக்கீஸ், விவித பாரதியின் தினசரி இரைச்சல், டவுனுக்கு மணிக்கு ஒரு தடவை பஸ், அண்ணா நூலகம், கடவுள் இல்லை கட்சிக் கொடிகள், லோகல் பண்ட் ஆஸ்பத்திரி, கவிழ்ந்த முக்கோணங்கள், அகர்சந்த் அடகுக் கடை, ஒரு நடுநிலைப்பள்ளி, பஞ்சாயத்து யூனியன் தலைவரின் வீட்டுத் தாழ்வாரத்தில் வழவழ வென்ற சிமெண்ட் தளம், சிகரெட் டான்ஸ், பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் வியாழக்கிழமை தோறும் பிளாஸ்டிக் சாமான்களும் பஞ்சு மிட்டாயும் வண்ண வண்ணச் சேலைகளும் மாட்டுத் தீவனமும் விற்கும் சந்தை.

பெரிய பள்ளத்தில் பெரும்பாலான மக்களுக்கு ஆதாரம் உழவே. நெல் நெல் என்று சுற்றிலும் பச்சை விகசித்த சூழ்நிலையை ஆலையின் கரும்புப் பசி மாற்றிவிட்டது. கரும்பு தந்த துரிதக் காசினால் அவர்களிடம் நாகரிகம் புழங்க ஆரம்பித்துவிட்டது. சட்டை இல்லாமல் உழுதவர்கள் காக்கிச் சட்டை அணிந்து ஆலைக்குச் சென்றார்கள். சினிமாப் பார்த்தார்கள். பேசினார்கள். செய்தித் தாள் படித்தார்கள். தொழிற்சங்கம் அமைத்தார்கள். எனவே :

முதல் தினம் - மாலை : 4-30

ஆலைக்கு வெளியே கொடி நட்டுத் தாற்காலிக மேடை அமைத்திருந்தது. ஒலி பெருக்கி, ''பச்சைக் கிளி!'' என்று உலகம் சுற்றிய வாலிபத்தனமாக அலறியது. சுற்றிலும் சில சில்லறைச் சிறுவர்களுடன் சோம்பேறித்தனமாக ஒரு கும்பல் சேர ஒரு பொதுக்கூட்டத்தின் ஆரம்ப நிலையில் இந்தக் கதை தொடங்குகிறது.

''இன்று துரை பேசுவார்'' என்று போஸ்டர் அறிவித்தது. துரை வருவதற்குமுன் ஒருவன் டேப் அடித்துப் பாடிக் கொண்டிருந்தான். கூட்டம் மெதுவாகச் சேர்ந்து கொண்டிருந்தது. ஆலை ஷிப்ட் முடிந்ததும் வெளிவரும் தொழிலாளிகளை மடக்கி மடக்கிச் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் துரையின் பேச்சைக் கேட்கத்தான் குந்தியிருந்தார்கள். துரை மேடையில் இல்லை. டேப் முடிந்ததும் ஒரு ஜிப்பா ஆசாமி, 'தாய்மார்களே! நண்பர்களே!' என்று மைக்கைப் பற்றிக் கொண்டு தன் ஆவேசத்துக்குத் தாண்டில் போட்டுக் கிளப்பிக் கொண்டிருந்தான்.

அப்போது ஒரு ஜீப் வந்து நிற்க, ''அதோ, பார்ரு துரை!'' என்று கூட்டத்தில் சுற்றிச் சலசலப்பு ஏற்பட்டது. கூட்டம் சற்று இறுகலாயிற்று.

துரை படிய வாரிக் கொண்டு ஜிப்பா தொள தொள என்று அணிந்து கொண்டிருந்தான். இருபத்தி எட்டு வயது இருக்கும். அடர்த்தியான கேசம், கன்னத்தில் படர்ந்த கிருதா, கழுத்தில் தெரியும் தங்கச்சங்கிலி. அவன் கண்கள்



கலங்கி இருந்தன. காரணம் சற்று முன் அவசரமாக விழுங்கிய சாராயம். அது இல்லாவிட்டால் துரைக்குப் பேச வராது.

துரை தன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு எதிரே பொதுக் கூட்டத்தை நோக்குகிறான். அங்கங்கே நின்று கொண்டிருந்தவர்களை அமுக்கி அமுக்கி உட்கார வைத்துக் கொண்டிருந்தார்கள். ஜிப்பா பேச்சாளரின் சிலப்பதிகாரம் தடைப்பட்டு, 'இத்துடன் என் சிற்றுரை'யை முடித்துக் கொண்டார்.

துரை தன் அருகில் இருந்த யூனியன் சாரியதரிசி பெருமாள் என்பவருடன் பேசினான். இருவரும் சிரித்தனர். துரையின் பற்கள் வரிசையாக, துல்லியமாக இருந்தன. கண்களில் கயமை தெரிந்தது.

துரைக்குக் கட்சி கிடையாது. துரை ஒரு பேச்சுக்குப் போக வரச் செலவு போக நூறு ரூபாய் வாங்குவான். அரசியல் அவன் தொழில்; அவன் ஆயுதங்கள் வார்த்தைகள். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்து ஆரம்பித்த தமிழர் நாகரிகம் அவனுக்குச் சாராயக் காசு தந்தது. திருக்குறள், சங்க காலம், புரட்சிக் கவிஞர், எதுகை ததும்பும் தமிழ், நம் முன்னோர்களின் கற்பு, பொற்பு இவையெல்லாம் அவனுக்குச் சோறு போட்டன. இருட்டில் நிழலான இடங்களில் அழகான பெண்களைத் தேடி அலைய வாய்ப்பளித்தன.

துரை ஒரு திறமையான அரசியல் வேசி அல்லது வேசன். அவன் பேச்சைக் கேட்கலாமா? நம் கதைக்குத் தேவை உள்ள வரையில் கேட்கலாம்:

கனைத்துக்கொள்கிறான். மைக்ரோபோனின் 'ஃபீட்பாக்' சீட்டி துவங்குகிறது. ஒலி பெருக்கி ஆசாமியை முறைத்துப் பார்க்கிறான். அவன் சீர்படுத்தும் வரையில் காத்திருக்கிறான். மைக்கைத் தன் உயரத்துக்கு ஏற்பச் சரி செய்து கொள்கிறான். சற்று நேரம் மௌனம் நிலவுகிறது. கத்தினும் 'ஆ' என்று வாய் திறந்து அவன் பேசக் காத்திருக்கும் மக்களை நோக்குகிறான்.

''நாடு வாழ்க!'' என்கிறான். ''தலைவர் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!....'' இவை எல்லாம் கிடையாது.

''இன்று தண்டலம் கிராமத்தின் வழியாக வந்தேன். கரும்பு காற்றில் அசைவதைப் பார்த்தேன். கரும்பின் இனிமையை யோசித்தேன். அது நமக்கு எதிரே நிற்கும் ஆலையின் சக்கரங்களுக்கு இடையில் அகப்பட்டுச் சக்கையாகப் பிழியப்பட்டு நம் நாடு இனிக்க இன்னுயிர்த் தியாகம் செய்வதை யோசித்தேன். அது செங்கரும்பு. மற்றொரு கரும்பு இருக்கிறது. அதுவும் ஆலையில் பிழியப்படுகிறது. தினம் தினம் பிழியப்படுகிறது. இந்தக் கரும்பில் இருப்பது சர்க்கரை இல்லை, இரத்தம். அந்தக் கரும்பு வயலில் நடப்பட்ட கரும்பல்ல, வீட்டுக் கரும்பு..... நீங்கள்....!''

துரை தன் சட்டையை மடக்கிக் கொண்டான். அவனுக்கு ஆவேசம் பிறந்துவிட்டது. துரையின் குரல் ஆழமானது. அதற்கு அவன் தந்த ஏற்ற இறக்கங்களும், லய வின்யாசங்களும் அந்தக் கூட்டத்தை ஒருவித மோகத்தில் ஆழ்த்தி முழுவதும் கட்டுப்படுத்தியது. அவர்கள் உள்ளத்தில் முதலாளி வர்க்கம் பெரிதாகச் சவுக்கும் கையுமாக உருவெடுத்தது. டைரக்டரின் காரில் பெட்ரோலுக்குப் பதில் அவர்கள் இரத்தம் ஓடியது. துரை சொன்னதெல்லாம் அந்தக் கணத்துக்குச் சத்தியங்களாயின.



துரை அந்தக் கூட்டத்துக்கு வந்திருப்பது அந்த ஆலையில் நான்கு நாட்களில் யூனியன் சார்பில் நடைபெறப் போகும் வேலைநிறுத்தத்துக்கு ஆள் பக்கபலம் சேர்ப்பதற்கு. அந்த ஆலையின் தொழிலாளர் யூனியன் பெரும்பான்மையினரை அங்கத்தினராகச் சேர்க்க மிகவும் முயன்று கொண்டிருந்தது. சந்தா கொடுக்கும் அங்கத்தினர் எண்ணிக்கை சட்ட எல்லைக்குக் குறைவாக இருந்தது. அதன் சக்தியை நிரூபிக்க ஒருவித பலப் பரீட்சைக்காக வேலைநிறுத்தம் தேவையாக இருந்தது. அதற்காக மானேஜ்மெண்டுக்கு அளிக்கப்பட்ட நோட்டீஸை மானேஜ்மெண்ட் நிராகரித்துவிட்டது; நோட்டீஸ் சட்ட விரோதமானது, டிரிப்யூனலில் தீர்த்து வைக்க வேண்டிய கோரிக்கைகள் என்று!

இவையெல்லாம் தொழிற்சங்கச் சிக்கல்கள். நிச்சயம் இந்தக் கதை அவை பற்றி இல்லை. துரை எப்படியாவது அந்த வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாகச் செய்து காட்டுகிறேன் என்று சவால் ஏற்றுக் காசு வாங்கியிருக்கிறான். அதற்கான முதல் முஸ்தீபாக நிகழ்ந்த அந்தக் கூட்டம் நிறைவேறியபின் துரை செய்தது நம் கவனத்துக்குட்பட்டிருக்கிறது.

எல்லாரையும் திட்டிவிட்டுத் தேசிய கீதம் பாடப்பட்டுக் கூட்டம் இனிதே முடிந்தது.

துரை மாலையைச் சுமந்து கொண்டு, செண்டை முகர்ந்து கொண்டு தன் சிஷ்யன் பன்னு என்கிற பத்மநாபனுடன் ஜீப்பில் ஏறிக் கொண்டான் (ஜீப் துரையின் சிநேகிதன் எம். ஏ. வேலுச்சாமி என்கிற ஒயின் வியாபாரியினுடையது) யூனியன் காரியதரிசி கவருக்குள் ரூபாய் வைத்து அவன் கையில் கொடுக்கத் துரை அதைக் கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

''நல்லாப் பேசினீங்க !''

''கவலைப்படாதீங்க ! பதினெட்டாம்தேதி ஒரு ஈ உள்ளே நுழையாமல் நான் பார்த்துக்கறேன் !''

'' போலீஸ்காரங்க கிட்ட ஏற்கனவே அவங்க சொல்லிட்டாங்க. தினம் ஷிப்ட் முடியறபோது வானிலே வந்து, பதினஞ்சு பேர் நிக்கறாங்க. 144 கொண்டு வந்தாலும் கொண்டு வருவாங்க !''

''ரொம்ப சந்தோஷம்! பெருமாள், நீங்க புதிசு. நான் இந்தமாதிரி எத்தனையோ பார்த்திருக்கேன். இந்த ஏரியா எஸ். ஐ. யாரு?''

''ராஜசேகரன்னு ஒருத்தரு புதுசா மாத்தி வந்திருக்காரு. சின்னப் பையன்தான். கூட்டத்திலே நின்னுக்கிட்டு இருந்தாரே இன்ஸ்பெக்டரு.''

''கவனிக்கலே. அப்புறம் பெருமாள், இப்படிக் கொஞ்சம் வாங்க !''

துரை ஜீப்பிலிருந்து இறங்கித் தனியாகப் பெருமாளுடன் நடந்தான். கொஞ்சம் குரலை இறக்கி, ''பதினெட்டாம் தேதி தேவை இருந்தால் ஒரு ஐம்பது ஆளுக்கு பந்தோபஸ்து செஞ்சுக்கலாம். கன்னப் பசங்க நல்லா கட்டுமஸ்தா உடம்பை வைச்சிருப்பாங்க''என்றான்.

'' எதுக்கு?''

''எதுக்கு.... என்ன இப்படிக் கேட்கிறீங்க? மானேஜ்மெண்ட் என்ன செய்வாங்க தெரியுமா ? அன்னிக்கு வேலைக்கு வரேன்னு சொல்றவங்களை யெல்லாம் வண்டி வைச்சு அழைச்சுக்கிட்டுப் பின் வழியா கொண்டு வந்துடுவாங்க. ஒரு அஞ்சாறு கல்லாவது வீச வேண்டாம் ?''

'' அதெல்லாம் தேவை இருக்காதுன்னு நினைக்கிறேன். அமைதியாகவே நடத்தலாம். உங்க பேச்சிலே அவங்களுக்குச் சூடு ஏறி இருக்கும்.''

''உங்களுக்குத் தொழிலாளர்களைத் தெரியாதுன்னு தெரியுது. பெருமாள், சூடு சட்டுன்னு ஆறிடும். நாளைக்கே மானேஜ்மெண்ட் தமிழிலே எழுதி நோட்டீஸ் ஒட்டுவான். டேய்! அவன் சொல்றதும் நியாயம் தான்டா. போயிடலாம்ன்னு டிபன் பாக்ஸை எடுத்துக்கிட்டுக் கிளம்பிடுவாங்க. அவங்களுக்குக் கொஞ்சம் பயம் ஏற்படுத்தணும். அப்புறம் பஸ் ஸ்டாண்டிலே ஒரு கூட்டம் வைச்சுக்கணும். அப்புறம் சின்னப் பசங்களை விட்டுச் சுவத்திலே ராவோட ராவா பெரிசா எழுதச் சொல்லுங்க: '18ந் தேதி ஆலைக்குச் சென்றால் உன் மனைவி தாலி அறுபடும்'னு.''

''அதிலே ரொம்ப அனுபவம் உள்ளவர் போலிருக்கு நீங்க?''

''எதிலே, தாலி அறுக்கிறதிலியா?'' என்று கேட்டுச் சிரித்தான்.

''இல்லே. வேலை நிறுத்தங்களிலே.....''

''பதினெட்டு வேலைநிறுத்தங்கள் நடத்தி வைச்சிருக்கேன்..... ஒரு எஸ்.பி. என்னாலே அந்தமானுக்கு மாத்திட்டுப் போயிட்டான். போலீஸ்காரங்க என்னைக் கண்டா நடுங்குவாங்க....... துரை வரான்னு கொஞ்சம் ஒதுங்கிக்குவாங்க..... இவருதான் ராஜசேகரனு ? நம்மைப் பார்க்கத்தான் வராரு!''

பெருமாள் திரும்பிப் பார்க்க இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் அவர்களை அணுகுவதைக் கவனித்தான். ''இவருதான்.... புதுசு; கொஞ்சம் முறைப்பு அதிகம். கார்வார் அதிகம்.... வணக்கங்க.''

ராஜசேகரன் மிகவும் சலவை செய்து விறைப்பான யூனிஃபார்ம் அணிந்து அப்போதுதான் குளித்தவர் போல் துல்லியமாகத் தோன்றினார். அவர் மூக்கு முகத்தில் பிரதானமாக இருக்கச் சிறிய கண்களும் அடர்த்தியிருந்த புருவமும் ஊடுருவும் பார்வையுமாகப் போலீஸ் அதிகாரத்தின் சந்நிதானம் அவரைச் சூழ்ந்திருந்தது.

'' நீங்கதானே செக்ரட்ரி!'' அவர் துரையைக் கவனிக்கவில்லை.

''ஆமாம்.''

''உங்களுக்கு மீட்டிங் நடத்தறதுக்கு இந்த இடத்திலேயா பர்மிஷன் கொடுத்திருந்தது?''

பெருமாள் சற்று மென்று விழுங்கினான்.

''உங்களுக்குக் கொடுத்திருந்தது, தொழிற்சாலையிலிருந்து ஐந்நூறு அடிகள் தள்ளி. இங்கே வைச்சுக்கினீங்க. அதுக்காகவே உங்களைக் கைது பண்ணலாம். நீங்க கூட்டம் வையுங்க, பேசுங்க, திட்டுங்க, அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. டிராஃபிக் முழுக்க நின்னு போச்சு. நாற்சந்தியிலே ஜனங்களை வைச்சு அடைச்சிட்டீங்க.''!

''இன்ஸ்பெக்டர்! கூட்டம் அமைதியா நடந்ததுன்னு நீங்க சந்தோஷப்படணும், தெரியுமா ?'' என்றான் துரை.

''நான் உங்ககிட்டே பேசலே!'' என்றார் ராஜசேகரன் கடுமையாக.

''நான் உங்ககிட்டேதான் பேசறேன் !'' என்றான் துரை.

ராஜசேகரன் இப்போது அவனை முழுதும் பார்த்தார்.

இருவர் பார்வைகளும் சந்தித்துக் கொண்டு பிடிவாதமாக நின்றன.

''இன்ஸ்பெக்டர்! என் பேரு துரை...... என்னைப் பத்திக் கேள்விப்பட்டிருப்பீங்க.''

''என் பேரு ராஜசேகரன். என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீங்க ! பெருமாள், அந்த ஸ்டிரைக் நடந்தா அமைதியா நடக்க வேண்டியது உங்க பொறுப்பு. என் பொறுப்பு....'' என்று மிடுக்குக் குரலில் கூறி விட்டு, துரையைப் பார்த்துக் கொண்டு, ''ரௌடிப் பசங்களை வெச்சுக்கிட்டுக் கலாட்டா ஏதாவது நடந்தா நாங்க பார்த்துக்கினு சும்மா இருக்க மாட்டோம்!'' என்றார் ராஜசேகரன் உறுதியாக.

''என்னை ரௌடிங்கிறீங்களா?''

''சே ! உங்களை எனக்குத் தெரியாது. ஆனால் நீங்க குடிச்சிருக்கீங்க !''

''பதினெட்டாம் தேதிக்குள்ளே என்னைத் தெரிஞ்சு போகும், உங்களுக்கு!''

ஜீப்பில் போய் ஏறிக் கொண்டான் துரை.

''என்னையும் தெரிஞ்சு போகும் உங்களுக்கு!'' என்றார் ராஜசேகரன்.

ஜீப் சீறிக்கொண்டு புறப்பட்டது.

* * *

பெரிய பள்ளத்துக்கு அருகில் தண்டலம் கிராமம் இருந்தது. பத்துப் பதினைஞ்சு வீடுகள். நான்கு நாய்கள். சுற்றிலும் நெல், கரும்பு நிலங்கள். அந்தக் கிராமத்திலிருந்து சற்று ஒதுக்குப்புறமாக வயலை ஒட்டி ஒரு குடிசையில் ரத்தினவேலு தம் பேத்தி லட்சுமியுடன் இருந்தார்.

ரத்தினவேலு பிடிவாதமாகத் தம் சொந்த ஏக்கராவில் இன்னும் பழைய ஞாபகத்தில் நெல் பயிரிட்டுக் கொண்டிருந்தார். சொந்தமாகக் களை பிடுங்கிச் சொந்தமாக நாற்று நட்டுச் சொந்தமாக அறுவடை செய்து வந்தார். மற்றவர்கள் கரும்பங் காட்டின் நடுவில் அவர் வயல் ஒரு சிறிய மரகதப் போர்வையாக இருந்தது, லட்சுமி போல்'

லட்சுமி 'இஸ்கோலு'க்குப் போகவில்லை. தாத்தாவுக்கு ஒத்தாசையாக இருந்தாள். பதினேழு வயசு நிரம்பிச் சற்று வயதுக்கு அதிக வளர்த்தியான பெண். அந்தக் குடிசையும் அந்த நிலமும் அந்தத் தனியான சூழலும் லக்ஷ்மி ராஜ்யம். தாத்தாவுக்கு அன்பாகச் சமைத்து, மண் பாத்திரங்களைத் தேய்த்துத் துப்புரவாக்கிக் குடிசையைக் கண்ணில் ஒற்றிக் கொள்ளும்படி சுத்தப்படுத்தி, விரல்விட்டுக் காசு கணக்குப் பார்த்து.... மரத்தில் கயிறு கட்டிப் பாவாடை விரிய ஊஞ்சலாடி.... 'எப்பனுச்சி'யும் பாப்பா வந்தாள் என்றால், மாட்டினி ஆட்டம் சினிமாப் பார்த்து.... ('பொழுதோட வந்துடும்மா') பாப்பா தரும் பொம்மைப் புஸ்தகங்களையும், பதினைஞ்சு பைசா நகைகளையும் அந்தரங்கத்தில் வைத்துக் கொண்டு, கையகலத்துக் கண்ணாடியில்



விருந்தாளி: அம்பி, எட்டு நாளைக்கு ஒரு தடவை சாவி கொடுக்கும் கடிகாரமா இது ?

அம்பி: நீங்க இங்கே வந்து எத்தனை நாளாச்சு?

விருந்தாளி: ஆறு நாட்கள் ஆச்சு!

அம்பி: இன்னும் இரண்டு நாட்கள் இருந்து பார்க்காமலா கிளம்பிடப் போறேள் !

தன் வடிவமும் உடலும் இனம் புரியாமல் மாறுவதைப் பார்த்துக் கொண்டு.... இப்பவும் அவள் ஓர் இடத்திலிருந்து மற்ற இடத்துக்குத் துள்ளித்தான் சலங்கை சலங்கச் சலங்க ஓடுவாள்....

''தாத்தா ! நான் ஓடைப் பக்கம் போய் வரேன். கேரையைக் கடைஞ்சு வை. துணி துவைச்சுட்டு ஓடியே வந்துடறேன்.....''

''நேரமாக்கிடாதேம்மா, இருட்டறதுக்குள்ளாற வந்துடு'' என்று சொன்னது லட்சுமிக்குப் பாதிதான் கேட்டது. அவள் சிட்டாக ஓடி விட்டாள்.

லட்சுமி வயல் ஓரமாக ஒட்ட நடையில், பழகிய பாதையில் சென்றாள். சிறுபிள்ளைத்தனமாக நெளிந்து சலசலக்கும் பாசன வாய்க்காலுடனேயே நடந்தாள். அவளுக்கென்று பிரத்தியேகமான ஒரு தனியிடம் இருந்தது. வாய்க்கால் வளைந்து தென்னந்தோப்பை அணைத்துக் கொண்டு செல்லும் பகுதியில் ஒரு கன்னிப் பெண் குளிப்பதற்குச் சௌகரியமாக ஓர் ரகசியமான துறை.

லட்சுமி மறைவிடத்தில் வந்து தன் தாவணியைக் களைந்து, சொக்காயைக் கழற்றிப் பாவாடையை மார்பு வரை உயர்த்திக் கொண்டு, கல்லில் வந்து உட்கார்ந்து துணிகளை நனைத்து, மெதுவாகச் சவுக்காரக் கட்டி தேய்க்க ஆரம்பித்தாள்.

* * *

துரை சீட்டுக்கடியில் இருந்த பாட்டிலை எடுத்து ஒரு மடக்கு விழுங்கிக் கொண்டான்.

''என்னடா நேராத்தானே ஓட்டறே?''

''ஆமாம், துரை !''

''எப்படிப் பேச்சு இன்னிக்கு?''

''ஃபர்ஸ்ட் ஷோக....ஆமாம், அந்த இன்ஸ்பெக்டர் என்ன கொஞ்சம் ரஃபா பேசினர் ?''

''அவரு கிடக்கிறரு.... துரையைத் தெரியாது அவருக்கு..... இன்னும் ரெண்டு மாசத்திலே அவரை இந்த சர்க்கிள்ளேயிருந்து விரட்டி, எங்கேயாவது தின்னவேலி ஜில்லாவிலே போட்டுடும்படியா செஞ்சுடறேன்.... புது ஆளு, என்னைத் தெரியாத ஆளு!''

''அதானே !''

''சேலத்துப் பக்கம் இந்த மாதிரிதான் ஒரு மறியல்லே கம்பைச் சுத்தினரு ஒருத்தரு. என்னைக் கைது பண்ணிக்கிட்டுப் போனரு.... அப்புறம் நம்ம பெரியசாமி இல்லே....அவருதான் போன் பண்ணி இருக்காரு.... 'துரை! துரை! என்னே மன்னிச்சுடுங்க.... தெரியாத்தனமா நீங்க யாருன்னு தெரியாம அவசரமா கைது பண்ணிட்டேன்'னு ஜீப்பிலேயே திருப்பி அனுப்பிச்சாரு. இவரு கிடக்காரு பூச்சி !''

பன்னு சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

''பன்னு, மூணு நாளாச்சுடா இன்னே போட !''

''என்ன துரை ?''

''என்ன? தெரியாத மாதிரி கேக்கறதைப் பாரு ! சிதம்பரத்திலே ஹோட்டல்லே ஒரு குழிசடையைக் கூட்டி வந்தே பாரு! எங்கே போய்டா புடிச்சே அதை ?''

''ஏன் சரியா இல்லையா, துரை ?''

''சாவு கிராக்கி. மரக்கட்டை. கொசு கடிக்குது!''

''அதுக்கெல்லாம் மெட்ராஸ்தான் சரி, துரை ?''

''ஏன் பாண்டிச்சேரியிலே ஒரு தடவை.... சும்மா கொடுத்த காசுக்கு மத்தாப்பூ மாதிரி துள்ளி விளையாடிடிச்சு.''

''உங்களுக்கு வேறே வேலே கிடையாது துரை! பாட்டில், பொம்புளே!''

''இந்த உலகமே அதுலேதாண்டா சுத்துது !''

* * *

லெட்சுமி துணிகளைத் துவைத்து விட்டுத் தண்ணீரில் அமிழ்ந்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒரு பிராணி இல்லே. துல்லியமான நீர் அவள் உடலில் மாலைச் சூரியனின் மஞ்சள் வெய்யிலில் தங்க முத்துக்களாக மின்னியது. தலையை அலைத்துக் கொண்டு மூழ்கி நீராடினள்.

* * *

"எங்கேடா, வயக்காட்டுப் பக்கம் ஓதுங்கறே..... ?''

''குறுக்கு வழி துரை. மூணே பர்லாங்கிலே மெயின் ரோட்டைப் புடிச்சுடலாம். உங்களுக்கு இன்னெரு கூட்டம் இருக்குதே,—டவுன்லே !''

''என்ன பாதைடா இது, உதறுது !''

''கொஞ்ச தூரந்தான் துரை !''

* * *

லெட்சுமி உடலை உருவிக் கொண்டு ஏதோ ஒரு பாட்டுப் பாடிக் கொண்டு குளித்தாள். நனைந்த உடை அவள் உடலுடன் ஒட்டிக் கொண்டது........

''டேய், பன்னு! நிறுத்துடா !''

''என்ன துரை ? ஏன் துரை ?''

''நிறுத்துன்னு !''

ஜீப்பை நிறுத்தினன்.

''பின்னலே போ; மெள்ளப் போ.''

'' என்ன துரை ?''

''நான் சொல்றதைக் கேளு. உனக்கு ஒன்னு காட்டறேன்,பாரு! பின்னலேபோ!''

ஜீப் ரிவர்ஸில் சென்றது. ''நிறுத்து !''

வாய்க்கால் கரைப் பக்கம் மேடாக இருந்தது. சற்றுத் தூரத்தில் வாய்க்காலின் தெளிவு தெரிந்தது.

''அங்கே பாரு, மேக்காலே பாரு !'' என்றன் துரை.

''என்ன துரை, மேக்காலே. சூரியன் !''

''மேலே பார்க்காதே! கீழே பாரு. அதோ பாரு, வாய்க்கால் பக்கம் தனியாஒதுங்கலா.''

''பொம்பளே குளிக்குது !''

''பன்னு ! கொஞ்சம் இங்கேயே இரு. குரல் கொடுத்தா வா ! அது வரை ஜீப்பிலேயே இரு.'' துரை இறங்கிவிட்டான்.

''துரை அண்ணே ! வேண்டாம், வேண்டாம், வேண்டாம். அண்ணே ! கிராமத்துப் பயலுவ. கம்பும் கழியுமா வந்துடுவாங்க !''

''நான் மூகம் கழுவிக்கப் போறேண்டா. பயப்படாதே !''

''மூகம் இங்கேயே கழுவிக்கலாமே ? ஆறு இங்கே கூடத்தான் ஓடுது !''

''அங்கே இன்னும் சுத்தமா ஓடுதுடா முட்டாள்!''

துரை சற்றுத் தள்ளாடி மேடேறி வாய்க்கால் பக்கம் இறங்குவதைக் கவனித்தான் பன்னு. 'பாவிப் பய புள்ளே! ராத்திரி பகல் கிடையாது. எப்ப பார்த்தாலும் இதுதானு?' சே ! — பன்னுவுக்குத் 'திக்கு திக்கு' என்றது. 'குடிக்க வேறே குடிச்சிருக்கான் !'

துரை லட்சுமியைப் பின்புறமாக அணுகினன். அவன் வரும் சத்தம், செருப்பு காய்ந்த இலைகளில் மிதிக்கும் சத்தம் காற்றின் ஓசை ஓடையின் சலசலப்பு இவற்றுக்கிடையில் அவளுக்குக் கேட்கவில்லே. மிக அருகில் வந்து பின்னல் நின்றன்.

லட்சுமிக்கு முதுகில் குறுகுறுத்திருக்க வேண்டும். சட்டென்று திரும்பினள். துரை நிற்கிறன். அவள் நனைந்த மார்பில் அவன் பார்வை தயங்குகிறது. விருட்டென்று தன் துணிகள் அத்தனையும் அள்ளிக் கொண்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தாள். குடத்தை விட்டு விட்டாள். மறுபடியும் அந்தக் குடத்தைக் கவர்ந்து கொள்ளத் திரும்பினள்.

துரை அவள் கையைப் பற்றி, ''என்னம்மா! புல் புல்'' என்றன்.

பன்னுவுக்குத் தூரத்தில் அவள் ஓடுவதும், அவளுக்குப்பின் துரை ஓடுவதும் தெரிந்தது. அவர்கள் அவன் பார்வையிலிருந்து மறைந்து விட்டார்கள். மிகவும் நிசப்தமாக இருந்தது. பன்னுவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லே. போய்ப் பார்க்கலாமா என்று ஓர் ஆசை இருந்தது. துரைக்குக் கோபம் வந்துவிடும். அவன் கூப்பிட்டால்தான் போகலாம்.

துரை மேல் கோபம் இருந்தது; பொறாமை இருந்தது. நிசப்தம். தூரத்தில் லாரி போகும் சத்தம் கேட்டது.

"தாத்தா!" என்று கீச்சுக் குரலில் ஓர் அலறல் கேட்டது. பறவைகள் சில சிறகடித்துப் பறந்தன.

* * *

தாத்தா சிராகக் கீரையை அரிந்து கொண்டிருந்தார்.

* * *

"என்ன ஆச்சு துரை, ஏன் உடம்பெல்லாம் இப்படி.......!"

"என்னமோ ஆச்சுடா, ஓட்டு!"

"கன்னத்திலே ரத்தம் வருது துரை!"

துரை பாட்டிலை எடுத்து மறுபடியும் ஒரு மடக்கு விழுங்கிக் கொண்டான். "ஓட்டுடா முதல்லே சோமாறி! அப்புறம் அலம்பிக்கலாம்!"

"துரை! எனக்குப் பயமா இருக்குது!"

"நீ என்னடா செஞ்சே, பயப்படறதுக்கு?"

"பல்லுப்பட்டிருக்குது பாரு. கையிலே!"

துரையின் உடம்பெல்லாம் நடுங்கியது......

"செத்த தள்ளி நிறுத்துடா. மூகம் கழுவிக்கிட்டு வந்துடறேன்!"

துரையின் சட்டை முழுதும் மண்ணுக, சேறுக இருந்தது. "பன்னு! உன் சட்டையைக் கொடுடா.... அங்கே கூட்டத்திலே போய் நிக்கணும்! அப்புறம் மருந்துக் கடையிலே கொஞ்சம் நிறுத்து. பிளாஸ்திரி வாங்கிக்கலாம்!"

"துரை, என்ன நடந்தது? சொல்லுங்க அண்ணே! ஏன் இப்படி நடுங்குது, உடம்பு உங்களுக்கு?"

"அப்புறம் சொல்றேன். நீ ஓட்டு!"

* * *

தலைவர் அவனை, "என்னங்க காயம்?" என்று கேட்டார்.

துரை புன்முறுவலுடன், "மூந்தின கூட்டத்திலே ஒரு சின்ன கலாட்டா. அடிதடி! இதெல்லாம் சாதாரணமுங்க!" என்றான்.

துரை மைக் அருகில் வந்து அதைத் தன் உயரத்துக்கு ஏற்ப அட்ஜஸ்ட் செய்து கொண்டான். "என் இனிய நண்பர்களே! தாய்க் குலமே.....! என் உடன் பிறவாச் சகோதரிகளே!"

* * *

'என்ன, இன்னும் இந்தப் பெண்ணைக் காணும்?' என்று தாத்தா அரிக்கேன் விளக்கைப் பெரிதுபடுத்திக் கொண்டு குடிசைக்கு வெளியே வந்தார். மெதுவாகத் தடுமாறித் தடுமாறி நடந்தார். இருள் கவிந்திருந்தது. வாய்க்கால் ஓரமாக நடந்து சென்றார். வழக்கமாக அவள் துணி துவைக்கச் செல்லும் துறை அவருக்குத் தெரியும். "லட்சுமி! லட்சுமி!" என்று கூப்பிட்டுக் கொண்டே தட்டுத் தடுமாறி அந்த இடத்துக்கு வந்தார்.

பூச்சிகளின் சத்தம் சிராகக் கேட்டது.

தாத்தாவின் காலடியில் என்னவோ இடறியது.



"வரும் தீபாவளிக்கு உனக்கு 500 ரூபாயில் ஒரு புடவை எடுத்துக் கொடுப்பது போல் சொப்பனம் கண்டேன். அதிலிருந்து என்ன தெரிகிறது?"

"தூங்கும்போதுதான் உங்க மூளை சரியாக வேலை செய்கிறதுன்னு தெரியறது!"

அரிக்கேன் விளக்கைத் தாழ்த்திக் கீழே பார்த்தார்.

லட்சுமி!

இரண்டாவது தினம்

இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் காலையில் எழுந்து பல் விளக்கித் தம் மனைவியை (பெயர் சரளா) எழுப்பாமல் காப்பி போட்டுக் கொண்டு கையில் ஆவி பறக்கும் காப்பியுடன் செய்தித் தாளை மேம்போக்காக மேய்ந்து விட்டு அதன் கடைசிப் பக்கத்தில் இருக்கும் குறுக்கெழுத்துப் பகுதியின் வார்த்தைச் சிக்கல்களில் சற்று நேரம் ஆழ்ந்தார்.

சரளா கண் விழித்தபோது அவளை நோக்கிப் புன்முறுவல் செய்தார்.

"என்னங்க இது! எழுப்பக் கூடாதா? இன்னிக்கு விடுமுறையாச்சேன்னு கொஞ்சம் தூங்கிப் போயிட்டேன்" என்றாள்.

"இன்னும் கொஞ்சம் தூங்கு!" என்றார்.

அவள் எழுந்து மூகம் கழுவிக் கொண்டு அவருடன் ஒட்டி உட்கார்ந்தாள்.

"இன்னிக்காவது சினிமா போகலாமா?"

"டிக்கெட் வாங்கிக் கொண்டு போகலாம்" என்றார்.

"நம்மை டிக்கெட் வாங்க விடமாட்டாங்களே!"

"அப்ப சினிமா வேண்டாம்."

"நீங்க ஒருத்தர்தான் இப்படி இருக்கீங்க! ஜீப்பிலே நான் உட்காரக் கூடாது..... கோயிலிலே எல்லாரையும் போல் 'க்யூ'விலே நிக்கணும் .... சினிமாவுக்கு டிக்கெட் வாங்கணும்......."

"என்ன செய்யறது? அப்படிப்பட்ட அப்பாவியைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டிருக்கே!"

"அப்பாவி! நீங்களா அப்பாவி! இதோ பாருங்க. டிக்கெட் வாங்கியோ வாங்காமலோ இன்னிக்குக் கட்டாயம் சினிமாவுக்குப்

போய்த்தான் ஆகனும். எனக்கு வீட்டிலே முடங்கிக் கிடந்து அலுத்துப் போச்சு!''

''இன்னிக்குப் போயிரலாம்,... என்ன?''

'என்ன?' என்றது. அவசரம் அவசரமாக வீட்டுக்குள் ஓடி வந்து தள்ளி நின்று ஸல்யூட் அடித்த ஒரு பி.ஸி.யை நோக்கி.

''ஏட்டையா அனுப்பிச்சாருங்க. பாசன வாய்க்கால் பக்கத்திலே ஒரு பொம்பளெ செத்துக் கிடக்குதாம்.''

''உடனே வரேன், இரு! சரளா, ஸாரி !''

சரளாவின் முகத்தில் ஏமாற்றம் எழுதி இருந்தது. அதே சமயம் பீதியும் தோன்றியது. ராஜசேகரன் உள்ளே சென்றார்.

''பொம்பளேயா?''

''ஆமாங்கம்மா ! தண்டலம் கிராமத்துப் பொண்ணு!''

''என்ன வயசிருக்கும்?''

''சின்னப் பொண்ணும் !''

''கொலே செஞ்சிட்டாப்பலேயா?''

''தெரியலீங்க. ஐயா வந்தா மேலே வேலே நடக்கும் !''

''என்னப்பா இது, அக்கிரமமா இருக்கு?''

''சரளா நான் வரதுக்கு லேட் ஆனாலும் ஆகும். நீ வேணு.......''

''பக்கத்து வீட்டுப் பாட்டியைக் கூட்டிக் கிட்டுச் சினிமாப் போய் வா. அதானே சொல்ல வந்தீங்க? எத்தனே தடவை கேட்டாச்சு, இதை !.... ராஷ்டிரபதி பதக்கம் கிடைச்சா சரி !''

''ஸாரி, ஸாரி, ஸாரி சரளா !''

''மூணு ஸாரி வாங்கிக்கப் போறேன்.''

* * *

ராஜசேகரன் ஜீப்பில் ஏறிக் கொண்டார்.

''ஸ்டேஷனுக்குப் போகணுமா ஸார் ?''

''வேண்டாம். நேரே போ !...

''ஹெட் கான்ஸ்டேபிள் அங்கே போயிருக்காரா ?''

''ஆமாங்க!''

''உடல் அங்கேயே இருக்குதா?''

''இல்லீங்க !'' என்று பின்னாலிருந்து ஒரு கான்ஸ்டேபிள் பதில் சொன்னான்.

''உடலே ஏண்டா, எடுத்தீங்க ?''

''இல்லீங்க..... அந்தப் பெண்ணோட தாத்தாக் கிழவன் ஒருத்தன் ராத்திரியே பார்த்திருக்கான் ! அதை எடுத்துத் தடு மாறிக் கொண்டு வந்து குடிசையிலே போட்டுக்கிட்டு இராப்பூரா அழுதுக்கிட்டே இருந்திருக்கான். காத்தாலேதான் தகவல் வந்துது.... மாட்டுக்காரப் பையன் ஒருத்தன் வந்து சொன்னான்.... உடல் குடிசையிலே இருக்குதுங்க !''

''அங்கே முதல்லே போகலாங்களா?''

''போகலாம்.''

* * *

குனிந்து குடிசைக்குள் நுழைந்தார் இன்ஸ்பெக்டர் ராஜசேகரன்.

கிழவன் தலேயை முழங்கால்களுக்கு இடையில் வைத்துக் கொண்டு விசும்பிக் கொண்டிருந்தான். கிழவன் அயர்ந்திருக்க வேண்டும். ராஜசேகரன் அருகில் பார்த்தார். கால்கள் தெரிந்தன. கால்களில் கொலுசுகள் தெரிந்தன. உடல் ஒரு வெப்புத் துணியால் மூடி இருந்தது. சீராக....

''தாத்தா !'' என்றார் ராஜசேகரன்.

''தாத்தா ! இன்ஸ்பெக்டர் ஐயா வந்திருக்கார். அவர்கிட்டே சொல்லுங்க!''

தாத்தா கலங்கிய கண்களுடன் அவரைப் பார்த்தார் !

''அய்யா ! அய்யா !'' என்று குரல் கண்ணீரில் கரையப் பேச ஆரம்பித்தார்.

''அய்யா ! பதினேழு வயசுங்க! எந்தக் கொலேகாரப் பாவியோ அப்படிச் சேதம் பண்ணி உடம்பெல்லாம் .....'' தாத்தா அந்தத் துணியை விலக்கி முகத்தைக் காட்டினார். அமைதியான முகம். மண்டை மயிரில் ரத்தத் திட்டு உறைந்திருந்தது. முகத்தில் நகக் கீறல் தெரிந்தது..... ''இந்த மாதிரியே பூரா காயம் ! இந்தப் பொண்ணே ஒண்ணும் தெரியாம வளர்த்தேன்.... இந்தத் தை மாசம் கட்டிக் கொடுக்கலாம்னு குருவி மாதிரி பணம் சேர்த்தேன். இதோ பாருங்க.'' பாயேக்குள்ளிருந்து ஒரு மரப் பெட்டியை எடுத்து அதைத் திறந்து அதிலிருந்த பத்து ரூபாய் நோட்டுக்களே இறைத்தார்! குலுங்கிக் குலுங்கி அழுதார்.

ராஜசேகரன் தம்முடைய கண்களில் நிறைந்த நீரைப் பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டார் !

தாத்தாவின் முதுகில் தட்டி, ''தாத்தா ! உங்களுக்கு ஆறுதல் சொல்ல என்னாலே எவனாலேயும் முடியாது! இதைச் செஞ்சவங்களேக் கண்டு பிடிச்சுத் தண்டனே கொடுக்கப் பார்க்கலாம் !''

''இனி மேல் என்ன தம்பி! என் லட்சுமி போயிடுத்து. அந்தப் பேமானிப் பயலேக் கண்டுபிடிச்சு அவனேச் சுட்டுப் பொசுக்கினுக் கூட..... அந்தப் பொண்ணுக்கு உயிரு வருமா !''

''தாத்தா ! நான் அப்புறம் உங்களேப் பார்க்கிறேன் !''

ராஜசேகரன் வெளியே வந்தார். உடன் ஹெட்கான்ஸ்டேபிளும் வந்தார். வெளியே கிராமத்து ஜனங்கள் அறுபது பேர் நின்று கொண்டிருந்தார்கள்.

''அருணசலம், எந்த இடத்திலே கிடந்ததாம்?''

''இங்கிருந்து ஒன்னரை மைல் இருக்குங்க. வாய்க்கால் ஓரமா ! குளிக்கப் போயிருக்குது! கிழவன் சரியாப் பதில் சொல்லலே. இன்னும் கொஞ்சம் நேரம் ஆகும்!''

''சரி ! அங்கே போகலாம் வாங்க ! அப்புறம் அந்தத் தாத்தாகிட்டே சொன்னீங்களா? உடலே ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கிட்டுப் போக வேண்டியிருக்கும்னு!''

''சொன்னேனுங்க! கொடுக்கமாட்டேன் கிறாரு !''

''கேஸ் எழுதிக்கிட்டயா ?''

'' எழுதிக்கினேனுங்க !''

''எப்படியும் எடுத்துட்டுப் போய்த்தான் ஆகணும். பெரியவர் கொஞ்ச நேரம் கழித்துச் சமாதானமாயிடுவார்னு நெனேக்கிறேன். ஹெட்குவாட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு வேறே போன் பண்ணனும். முதல்லே அங்கே போய்ப் பார்க்கலாம் !''

வெளியில் தொங்கிய கயிற்று ஊஞ்சல் காற்றில் ஆடியது. வேலியிலிருந்து மரக் கிளை வரையில் ஒரு தாவணி உலர்த்தி இருந்தது. லட்சுமி வளர்த்த குட்டி நாய் ஒன்று தரையில் மூலையில் கட்டப்பட்டுச் சுழன்று சுழன்று வந்து வாலை ஆட்டிக் கொண்டிருந்தது.

*   *   *

ராஜசேகரன் நிதானமாகத் தண்ணீர்த் துறையிலிருந்து துணி துவைக்கும் கல், சற்று மேல் ஏறும் கரை என்று விடாமல் ஆராய்ந்து கொண்டே நடந்தார். அவர் கையில் உடைந்த வளையல் துண்டுகள் சில இருந்தன. குடம் ஒன்று ஓரமாகத் தலை கவிழ்ந்து கிடந்தது. சகதியில் சிக்கிச் சில துணிகள் கிடந்தன. பதினைஞ்சு பைசா நகை ஒன்று கிடந்தது.....

கல்லில் உட்கார்ந்து அந்த இடத்தின் சுற்றுப்புறத்தை நோக்கினார்.

''மறைவான இடங்க! இங்கிருந்து உரக்கச் சத்தம் விட்டாக்கூடக் கேக்காது. எவனோ, தினம் இது இங்கே வருதுன்னு தெரிஞ்ச ஆள் தான் செஞ்சிருக்கணும்!''

''கிராமத்திலே விசாரிச்சீங்களா?''

''கிராமமே கிழவன் வீட்டுக்கு வந்திருச்சே! எல்லாரையும் விசாரிச்சேன். சின்ன கிராமங்க. நாற்பது அம்பது பேர் இருப்பாங்க! இளம் பயலுக ஒரு எட்டுப் பத்து பேர் இருக்காங்க! எல்லாரும் ஆலையிலே வேலை செய்யறவங்க.

''நேத்து சாயங்காலம் துணி துவைக்க இங்கே வந்திருக்குதுங்க! ஏழு மணி சுமாருக்கு கிழவன் போய்ப் பார்த்திருக்கான். கிழே கிடந்துச்சாம்! நேத்து சாயங்காலம்தான் நடந்திருக்கு!''

'' அப்படியா?'' என்றார் ராஜசேகரன்.

''இளம் பயலுகளையெல்லாம் முதல்லே விசாரிச்சேன். எல்லாரும் ஆலையிலேருந்து ஷிப்ட் முடிஞ்சு கூட்டத்துக்குப் போயிருந்தாங்களாம்.''

''கூட்டமா?''

''நேத்து கூட்டம் நடக்கலே? துரை பேசலே?''

''ஓ, அதுவா?'' ராஜசேகரன் மனத்தில் ஒரு கணம் துரையின் பிம்பம் படிந்து சட்டென்று மாறியது. ஊர்த்தால் வேறே இருக்குது. பதினெட்டாம் தேதி! அது நடுவிலே இந்தக் கொலை வேறே! எஸ்.பிக்கு போன் பண்ணணும். ராஜசேகரன் உடைந்த வளையலைப் பார்த்தார். பலாத்காரம்!.... நிச்சயம்.... அப்புறம் சாவு.... யார்?

''இந்த இடத்துக்கு வர்றதுக்கு ஒத்தையடிப் பாதைதானு அருணாசலம்?''

''ஆமாங்க! வழி தெரியாதவன் இலேசிலே வர முடியாது. அதான் அந்த அப்பாவிப் பொண்ணு இங்கே குளிக்க வந்திருக்கு! இங்கே தான் தினம் வருமாம்! கிழவன் சொன்னான்!''

''மறைவான இடம்தான். இந்த இடத்தைப் பற்றி முன்பே தெரியாமல் இங்கே வர முடியாது.

''சின்னக் கிராமந்தானே! ஒவ்வொருத்தரையும் விசாரிக்கடு! நேத்திக்குச் சாயங்காலம் எங்கே இருந்தாங்கன்னு! கிராமத்திலே மைனர் மாதிரி அல்லது வேலை இல்லாம சுத்தற பசங்க யாராவது இருக்கானுன்னு பாரு!''



''நாங்கள் வாக்களித்தபடி உங்களுக்குச் சோஷலிசத்தைக் கொடுத்து விட்டோம். உணவு, உடை, உறைவிடம், வேலை, கல்வி, மருந்து இவைகளைக் கொடுக்க இனி முயல்கிறோம்.''

— ஓர் அரசியல்வாதியின் பேச்சு

- இல்லஸ்டிரேட் வீக்லி - பாலி.

''எல்லாம் வயலிலே வேலை செஞ்ச பசங்க சார். இப்ப கோப்ரேட்டி வந்தப்புறம் ஆலையிலே வேலை செய்யறாங்க. எல்லாம் அறியாத பயலுக. 'ஏட்டையா! எங்க லட்சுமியைக் கொன்னவனைக் கண்டதுண்டமா வெட்டிப் போடறோம்'னு அருவாளும் கையுமா இருக்காங்க.... இது வெளி ஆளு வேலைங்க!''

''வெளி ஆளுக்கு இந்த இடம் எப்படித் தெரிஞ்சிருக்கும்?''

'' அதான் எனக்கும் ஆச்சரியமா இருக்குதுங்க.''

''எதுக்கும் எல்லோரையும் விடாம விசாரியுங்க!''

''சரிங்க!''

இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் கம்ப இருந்தவர் மறுபடியும் அந்தப் படித்துறைக்கு வந்து நின்றார். குற்றம் நடந்த இடத்துக்கு எதிரே சுற்றிலும் பார்த்தார். வாய்க்கால் சலசலக்கிறது. எதிரே அந்தக் கரையின் மேடு இயற்கையாக இருக்கிறது......

''ஆழம் அதிகம் இருக்குமா?''

''இருக்காதுங்க!''

''சரி! அந்தப் பக்கம் போகலாம்'' என்றார். இருவரும் வாய்க்காலைக் கடந்து எதிரே மேட்டின் மேல் சற்றுச் சிரமப்பட்டு ஏறினர். அங்கிருந்து கீழே பார்த்தனர்.

''இது என்ன மண் ரோடு போறது, அருணாசலம்?''

''இது ஒரு குறுக்கு வழிங்க. வண்டிப் பாதை மாதிரி. மெயின் ரோட்டைப் பிடிக்கலாம். டவுனுக்கு இப்படியும் போகலாம்.''

''சரி! திரும்பிப் போகலாம்'' என்றார்.

அவர்கள் மறுபடியும் வாய்க்காலைக் கடந்து எதிர்ப்புறம் வந்து குடிசைக்கு நடந்து சென்றனர். சில பெண்கள்,



''சமீபத்தில் நீங்க எழுதின நாவலைப் படிக்க ஆரம்பிச்சேன் பாருங்க! அடடா! அதைக் கீழே வைச்சா கையிலெடுக்கவே மனசு வர்றதில்லே!''

''சீவி முடிச்சியோ சிங்காரம் பண்ணியோ
பாவி யமராசன் பிரிந்துக்கொண்டு போவ''

என்று மாரில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருந்தார்கள். தாத்தா திக்பிரமையாக ஒரே பக்கம் நோக்கி உட்கார்ந்திருந்தார். அந்த ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்தது.

''அருணாசலம்! ஒரு கான்ஸ்டேபிளை இங்கேயே இருக்கச் சொல்லு. நாம் போகலாம். ஆஸ்பத்திரிக்குப் போன் பண்ணி விட்டு, எஸ். பி. கிட்டேயும் சொல்லணும். மத்தியானம் இவங்களை ஒவ்வொருத்தரா விசாரிக்கலாம்.......''

ஜீப்பில் திரும்பும்போது ராஜசேகரன் மனம் அலைந்தது. அவருக்குக் கிராம ஜனங்களைத் தெரியும். அவர்கள் எளிதானவர்கள். பயம் உள்ளவர்கள். இந்த மாதிரிக் குற்றத்தில் நகர வாசனை தெரிகிறது..... டவுன் வாசனை! டவுனுக்குப் போகும் வழி....!

''அருணாசலம், அந்தக் குறுக்கு வழி சொன்னீங்களே...அந்த வழியா ஜீப் போகுமா?''

''ஓ!''

''அந்தப் பக்கம் கொஞ்சம் ஓட்டுங்க பார்க்கலாம்.''

''அங்கேயிருந்து ஒருத்தரும் பார்த்திருக்க முடியாதுங்க. மேடு மறைச்சிருக்கும்!''

''எவனாவது சோம்பேறி மேட்டு மேலே ஏறி இருக்கலாம் இல்லையா?''

ஜீப் குதித்துக் குதித்து அந்தப் பாதையில் சென்றது.

பெரும்பாலும் வாய்க்காலை மறைத்துக் கொண்டிருந்த மேட்டுக்கரை, ஓர் இடத்தில் மட்டும் சரிந்திருந்தது. வாய்க்கால் தெரிந்தது. ''கொஞ்சம் நிறுத்துங்க!'' என்றார்.

''இங்கே யிருந்து தெரியுது பாருங்க, அதோ பாருங்க, தூரத்திலே கல்லு! அந்தப் படித்துறைகூடத் தெரியுது பாருங்க!''

''ஆமாம், ஸார்! இங்கேயிருந்து பார்த்தால் இந்த மாதிரி தெரியும்னு நினைக்கக் கூட முடியாதுங்க!''

''அருணாசலம்! இங்கே கொஞ்சம் உன் விப்பாத் தேடுங்க!'' ராஜசேகரன் இறங்கி வாய்க்காலை நோக்கி நடந்தார். அங்கே அவர்கள் அரை மணி நேரம் தேடினார்கள். 'என்ன எதிர்பார்க்கிறேன்? பர்ஸா! பர்ஸ் ஒன்று அகப்பட்டு அதில் ஒரு விலாசச் சீட்டும் போட்டோவும் இருந்தால் எவ்வளவு சுலபம்! அவ்வளவு எளிதாக முடிந்து விடுகிற காரியமா?' ஒன்றும் அகப்படவில்லை!

''சரி, போகலாம் வாங்க.''

ஜீப் நகர்ந்து மெதுவாக முன் சென்று இரண்டு மூன்று தடவை முன்பின் சென்று திரும்பும்போதுகூட ராஜசேகரனின் கண்கள் மூடிக் கொண்டிருந்தன....

''கொஞ்சம் நிறுத்தப்பா!''

ராஜசேகரன் மறுபடியும் இறங்கிவிட்டார். பாதை ஓரத்தில் முட்புதர்களில் ஒரு ரோஜா மலர் சிக்கிக் கொண்டிருந்தது. அதை மிக ஜாக்கிரதையாக எடுத்தார். சற்று வாடிய ஒரே ரோஜா!

''ரோஜாப் பூ சார்! நம்ம கண்ணிலே இதுவரையில் படலியே?''

''ஜீப் மறைச்சிருக்கு!'' ராஜசேகரன் மறுபடியும் அந்த ரோஜாவைப் பார்த்தார். முழுவதும் கருகவில்லை. சற்று வாடிய ரோஜா.... நேற்றைய ரோஜா.... அந்த மலரின் மேல் பிடிவாதமாக ஒரே ஒரு ஜரிகை இழை ஒட்டிக் கொண்டிருந்தது.....

இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் பத்திரமாக அதைத் தம் கர்ச்சிப்புக்குள் சுற்றிப் பைக்குள் வைத்துக் கொண்டார்.

''போப்பா!''

*   *   *

ஸ்டேஷனுக்கு வந்ததும் எஸ்.பிக்குப் போன் செய்தார் ராஜசேகரன். எஸ். பி. (அப்தாப் ஹுஸேன்) எடுத்த உடனே, ''ராஜசேகரன் உங்களைத்தான் நான் காண்டாக்ட் செய்ய வேண்டும் என்று இரண்டு தடவை முயன்றேன். 18ந் தேதி ஸ்டிரைக்குக்கு ஸெக்ஷன் 144 போட வேண்டுமா? நிலைமை எப்படி இருக்கிறது....?'' என்று கேட்டார்.

''சார்! 18ந் தேதிக்கு முன்னாலே வேறே ஒரு விஷயம் நடந்து விட்டது! ஒரு மர்டர்!''

''ஓ! நோ! போலிடிக்கல் மர்டரா? ஒருத்தனுக்கு ஒருத்தன் அடிச்சுக்கிட்டான்களா?''

''இல்லே, சார்! இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லே. ஒரு பெண். கிராமத்துப் பெண். ரேப் மர்டர்!''

''என்னய்யா நடக்குது, உங்க ஏரியாவிலே! நான் உடனே வரணுமா? மத்தியானம் வந்தாப் போதுமா? மந்திரி வேறே அந்தப் பக்கம் போறார்!''





''நீங்க மத்தியானம் வந்தாப் போதும் ஸார். ப்ரிலிமினரியா பார்த்திருக்கேன். ஆடாப்ஸிக்கு அனுப்பிடறேன்....''

''ஏதாவது கிடைச்சுதா? லோக்கல் ஆளுங்களைத் தட்டிப் பாருங்க! சின்னப் பொண்ணுன்னு காதல் கீதல் இந்த மாதிரி ஏதாவது இருக்கும்.''

''இல்லே, ஸார்! இது கொஞ்சம் சிக்கலான கேஸ். மத்தியானம் சொல்றேனே!''

''நான் ஃப்ரீயானவுடனே வந்துடறேன்!''

'' நல்லது ஸார்!''

டெலிபோனை வைத்ததும் சிதரன், அவர் வீட்டு வேலைக்காரப் பையன், அரை வாசலில் நின்று கொண்டிருப்பதைக் கவனித்தார்.

'' என்னடா?!''

''அம்மா நீங்க சாப்பிட வீட்டுக்கு வருவீங்களா? இல்லே டிப்பன்பாக்ஸிலே அனுப்பணுமான்னு கேட்டுக்கிட்டு வரச் சொன்னாங்க!''

ராஜசேகரனுக்கு அப்போதுதான் வயிற்றில் பசி தெரிந்தது.

''வந்துடறேன்னு சொல்லு. எனக்காகக் காத்திருக்க வேண்டாம். அம்மாவைச் சாப்பிடச் சொல்லிடு!''

'' சாப்பிடமாட்டாங்கய்யா!''

'' சரி! நீ போ, வந்துடறேன்.''

ஆஸ்பத்திரிக்குப் போன் பண்ணினார்.... இருப்பது ஒரே ஒரு ஓட்டை ஆம்புலன்ஸ் வண்டி. அது கிளம்பி.... கிராமத்துக்குச் சென்று உடலை எடுத்துக் கொண்டு போய் அது பரிசோதிக்கப்பட்டு.... நாளைதான் ரிப்போர்ட் கிடைக்கும்.

''பெருமாள்! அருணாசலம்! நீங்க ரெண்டு பேரும் சாப்பிட்டுட்டு அப்படியே ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வந்துடுங்க!''

* * *

சரளா வாயிற்படியிலேயே கேட்டாள். ''மறுபடியும் போகணுமா?''

''ஆமாம், சரளா! சாப்பிட்ட உடனே போகணும். எஸ். பி. வரார்!''

''ஏதாவது கண்டுபிடிச்சீங்களா?''

''ம்?''

''அந்தக் கொலை பத்தி ஏதாவது தெரிஞ்சுதா? இந்தாங்க துண்டு!''

ராஜசேகரன் தன் பைக்குள்ளிருந்து கைக் குட்டையை எடுத்து அதைக் கவனமாகப் பிரித்து அந்த ரோஜா மலரைக் காட்டினார். ''கண்டு பிடிச்சேன்'' என்றார்.

''பூ எனக்கா?'' என்றாள் சரளா.

''எனக்கு!'' என்றார் ராஜசேகரன்.

* * *

சாப்பிட்ட உடனேயே ஸ்டேஷனுக்குத் திரும்பி விட்டார். எஸ்.பிக்காகக் காத்திருந்தார். அஃப்தாப் ஹுஸேன் வந்தபோது மணி மூன்றரை இருக்கும். ஹுஸேன் சற்றுக் குட்டையானவர். நரம்புகள் தெரியும் விசால நெற்றி. வருஷக் கணக்கில் யோசித்து யோசித்துச் சுருங்கின புருவங்கள். ஒரு தழும்பு. ''என்ன ராஜசேகரன்! என்னதான் நடக்குது இந்த ஊரிலே? ஏதாவது கைது பண்ணும்படியா இருக்குதா கேஸு?''

''இன்னும் இல்லே ஸார்.''

''பொண்ணுக்குத் தெரிஞ்சவங்க,'லவர்ஸ்' இப்படி ஏதும் உண்டா?''

''சின்னப் பொண்ணுங்க. உடலை ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி இருக்குங்க.''

''பதினெட்டாம் தேதி ஸ்டிரைக் வேறே இருக்குது. துரை வரானுமே!''

''துரையைத் தெரியுமா உங்களுக்கு?''

''தெரியும். வம்புக்காரன். அவனை உள்ளே தள்ளிட்டா எல்லாம் ஒழுங்கா நடக்கும்.''

''வேண்டாங்க. தேவை இருக்காது.''

''ரிஸர்வ்வுக்கு ஏற்பாடு செய்திருக்கேன். எதுக்கும் நாளைக்குச் சாயங்காலம் 144க்கு மாஜிஸ்டிரேட் ஆர்டர் ஒண்ணு வாங்கி வெச்சுடலாம்...... என்ன?''

''இல்லீங்க. 'மானேஜ்' பண்ணிடுவோங்க. கூட ஆள் அனுப்பி வைச்சால் போதும். அந்தச் சமயத்திலே. முன்னாலேயே அதிகமா கைது பண்றது நமக்குக் கூட ஒரு 'டிஸ் அட்வான்டேஜ்'. ஒவ்வொரு கைதிக்கும் ஒரு போலீஸ்காரர்...எத்தனை எழுதணும்...பயத்திலேயே கொண்டு வந்துடலாம். பெரும்பாலும் கிராமத்து ஜனங்கள் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவங்க!''

''உங்களுக்குத் துரையைத் தெரியாது..!''

''தெரியாதுங்க. தெரிஞ்சுக்கப் போகிறேங்க..... எனக்கு மறியலைப் பத்திக் கவலை இல்லீங்க. இந்தப் பொண்ணுதான் உறுத்துது. ஸென்ஸ்லெஸ் மர்டர்!''

''மர்டர்தானே! அடாப்ஸி ரிப்போர்ட் வந்துடுச்சா?''

'' நாளைக்குத்தான் கிடைக்கும்னு தோணுது. இப்பத்தான் போயிருக்குது.''

''ஏதாவது 'க்ளூ' கிடைச்சுதா? வாங்க அங்கே போகலாம். இடத்தைப் பார்க்கலாம்......''

அந்த ரோஜா மலரைப் பற்றி ராஜசேகரன் சொல்ல விரும்பவில்லை. அதற்கு இன்னும் வேளை வரவில்லை.

''ஏதோ ஒண்ணு ரெண்டு தெரிஞ்சுதுங்க. இன்னும் தீர்மானமா ஒண்ணும் தெரியலே. நாளைக்கு ரிப்போர்ட்டைப் பார்த்ததும்தான் தெரியும். அவ எப்படிச் செத்திருக்கான்னு தெரியணும் முதல்லே.''

''போகலாமா?''.

மூன்றாவது தினம்

"மணி ஏழரை." சரளாவின் குரல். ராஜசேகரன் விழித்தார். "ஆஸ்பத்திரிக்குப் போகணும், சரளா !"

சரளாவின் முகம் வாடியது. "கொஞ்ச நேரம் அந்தக் கேஸை மறந்துக்குங்களேன்."

"மறக்க முடியலையே ! அந்தப் பெண் முகத்தைப் பார்த்துட்டேன்! அதை மறக்க முடியலையே!" படுக்கையில் உட்கார்ந்து கொண்டார். "அந்த இளமையை அவ்வளவு கோரமா அழிச்சவனுக்கு நம்ம சட்டங்களிலே இருக்கிற தண்டனை போதுமான்னு எனக்கு யோசனையா இருக்குது! என்ன ஜனங்க, சரளா !"

" காப்பி " என்றாள். அதைக் குடிக்க ஆரம்பித்தார் ராஜசேகரன்.

"பல் தேய்க்காமலே ?"

"ஓ! மறந்துவிட்டேன் !" என்று எழுந்தார் !

"அந்தக் கேஸைத் தவிர வேறு ஏதாவது ஞாபகம் இருக்குமா உங்களுக்கு ?"

* * *

ஜீயில் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் பழுப்பான பாரத்தை நிரப்பிக் கொண்டே சொன்னார்: "மேஜர் இன்ஜுரீஸ் மூன்று; மைனர் ஒன்பது. அவள் இறந்தது கன்கஷனினாலே என்று சொல்லலாம். பின்பக்கமாகப் பாறையில் விழுந்து பின் மண்டையில் அடிபட்டு ஸ்கல் உடைந்திருக்கிறது. மார்பில் நகம் பட்ட காயங்கள். ரிப் ஒன்று உடைந்திருக்கிறது. ரொம்ப லேட்டா கொண்டு வந்திருக்கீங்க. வெட்டறது கஷ்டமாக இருந்தது."

"டாக்டர், வஜைனல் ஸ்வாப் எடுத்தீங்களா !"

" ஓ எஸ்! ரேப்! க்ளியர் ரேப்! எவிடென்ஸ் நிறைய இருக்கிறது."

" தாங்க்ஸ் டாக்டர் !"

"இழவன் ஒருத்தன் உடலைக் கேட்கிறான். அறை வாசலிலேயே உட்கார்ந்திருக்கான் ! க்ளீனாத்தான் செஞ்சேன். திருப்பிக் கொடுக்கும்படியாத்தான் இருக்கிறது..."

* * *

ஸ்டேஷனுக்குத் திரும்பிச் சென்றதும் அவர் தம் அறையில் மேஜையின் மேல் அந்த ரோஜா மலரை வைத்துக் கொண்டு சற்று யோசித்தார்.

"அருணாசலம், கொஞ்சம் வாங்க !

"முந்தா நேத்திக்கு வேறே எங்கேயாவது மீட்டிங் நடந்ததா தெரியுமா உங்களுக்கு?"

"இல்லே, ஸார்! ஆலை வாசல்லே நடந்ததே அது மட்டும்தான்."

"அருணாசலம்! அந்தக் கூட்டத்துக்கு நானும் போயிருந்தேன். நீங்களும் வந்திருந்தீங்க. நான் அந்தக் கூட்டத்திலே என்ன பார்த்தேன்னு சொல்றேன். ஏதாவது தப்பா இருந்தா நீங்க சொல்லுங்க !"

"சரி, ஸார் !"

"நாலரை மணிக்குக் கூட்டம் தொடங்கியது. ஆமாம், சங்கு ஊதின உடனே. முதல்லே ஜிப்பா போட்டுக்கிட்டு ஒருத்தர் பேசினார்."

"சரி, ஸார் ! அதுக்கு முந்தி ஓர் ஆள் டேப் அடிச்சப் பாடினான். சாமானியனின் யூனியன்னு."

"குட்! நல்லா கவனிச்சிருக்கீங்க !

"அப்புறம் துரை வந்தான். வந்த வுடனே அந்தப் பேச்சுக்காரன் நின்னுவிட்டான். துரை உடனே பேச ஆரம்பிச்சான். துரை ஒரு மணி நேரம் பேசி இருப்பான். அப்புறம் அந்த யூனியன் காரியதரிசி வந்தனம் சொன்னாங்க. ஜன கண மன வாசிச்சாங்க !"

"அவ்வளவுதாங்க !"

"ஒண்ணும் விடலியே ?"

"இல்லீங்க !"

"இல்லே, அருணாசலம், உங்களுக்கு இன்னும் 'ஆப்ஸர்வேஷன்' வேணும். ஒரு விஷயத்தை நான் விட்டுட்டேன்!"

அருணாசலம் யோசித்து "இல்லீங்களே! வேறே ஒருத்தரும் பேசலீங்களே !" என்றார்.

"பேச்சு இல்லே. நடுவிலே துரைக்கு மாலை போட்டாங்களே! ரோஜா மாலை. அப்புறம் ஒரு செண்டு கொடுத்தாங்களே!"

"ஆமாம்! எல்லாக் கூட்டத்திலேயும் தானே மாலை போடறாங்க. அதனாலே அதை மறந்துட்டேன்."

"இந்தக் கூட்டத்திலே போட்ட மாலை கொஞ்சம் விசேஷமான மாலை...."

அருணாசலம் அந்த ரோஜாப் பூவைப் பார்த்தான்.

"ஸார் ! நீங்க சொல்றது இந்தப் பூ வந்து......."

"அருணாசலம்! அது வெறும் ரோஜா இல்லே. அதோட ஒரு ஜரிகை இழை இருந்தது. என்ன அர்த்தம்.... அது மாலையிலே இருந்த ரோஜா ! அன்னிக்குக் கூட்டத்திலே யார் மாலை போட்டுக்கிட்டாங்க?"

"துரை !"

"அப்புறம் கூட்டத்திலே போனாங்களா ! போற போது மாலையை எடுத்துக்கிட்டுப் போறதைப் பார்த்தேன்."

"இதை வெச்சுக்கிட்டுச் சொல்லிட முடியுமா, ஸார் ! எவனாவது பூக்கடைக்காரன் மாலை கட்டிக்கிட்டு இந்தப் பக்கம் போயிருந்தாக்கூட பூ விழுந்திருக்கலாம்."

" வாஸ்தவம்தான். எனக்கு ஒருவித சந்தேகம்தான் தோணுது. பூ விழுந்து கிடந்தது. பூ ரோஜாப் பூ. மாலைப் பூ. அன்னிக்கு மாலை போட்டுக்கிட்டவங்கள்ளே ஒருத்தன் துரை! இப்ப நாம் அந்தத் துரையைப் போய்ப் பார்க்க வேண்டியது. அவ்வளவுதான். அவன் எந்த ஊர்க்காரன் தெரியுமா?"

"அவன் டவுன் ஆசாமி. ஆனா இன்னிக்குப் பெரிய பள்ளத்துக்கு வரான். நாளைக்கு மறியல் இல்லையா? யூனியன் ஆபிஸிலே மத்தியானம் இருப்பான்...."

"அவனை அன்னிக்குச் சந்திச்சேன். கொஞ்சம் முறைப்பா இருந்தான். குடிச்சிருந்தான். அவனை மறுபடியும் சந்திக்க எனக்குக் கொஞ்சம் ஆவலாகக்கூட இருக்குது, அருணாசலம்!"

"ஸார் ! இந்தக் கேஸை கண்டு பிடிச்சுடலாம்னு நீங்க நினைக்கிறீங்களா ?"

''முயற்சி பண்ணிப் பார்க்கலாம்னு நினைக்கிறேன்.....''

''கிராமத்திலே கொஞ்ச ஆளுங்ககிட்டே ஸ்டேட்மெண்ட் வாங்கி இருக்கேன். எஸ்.பி. இன்னிக்கு மறுபடியும் வர்றாரா ?''

''ஆமாம்! மத்தியானம் வருவார். அவருக்கு ஒரு ரிப்போர்ட் கொடுக்கணும். அதுக்குள்ளே இந்தத் துரையை ஒரு தடவை போய்ப் பார்த்துடலாம்னு தோணுது....''

'' சாப்பிட்ட உடனே கிளம்பிடலாம், ஸார் !''

''சரி ! நீ என் சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போ ! சீக்கிரம் திரும்பி வா. இந்தா, ஒரு ரூபாய். ஹோட்டல்லே போய் ஃப்ரீயா சாப்பிடறேன்னு கேள்விப்பட்டேன். அது வேண்டாம்.''

* * *

யூனியன் ஆபீசில் ஆயுத பூஜைக்கு இட்ட சந்தனமும் குங்குமமும் இன்னும் இருந்தன. ரிஜிஸ்தர் நம்பர், பெயர் இவை எழுதப்பட்ட வர்ணங்களிலிருந்தே யூனியன் ஏ.ஐ.டி.யூ.ஸியா அல்லது ஐ. என். டி.யூ.ஸியா என்று சொல்லிவிடலாம். உள்ளே அறையில் மேஜை போடப்பட்டு அதனருகில் பெஞ்சில் சிலர் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்கள். சுவரில் சர்க்குலர்கள்... தலைவர்களின் படங்கள், வாசகங்கள்.

துரை ஓரத்தில் மேசையருகில் நான்கு பேருடன் கூடிப் பேசிக் கொண்டிருந்தான். பன்னு வெளியே நின்று கொண்டு நேவி ப்ளூ சிகரெட்டைப் பிடித்துக் கொண்டிருந்தான்.

''காலை ஷிப்ட் எத்தனை மணிக்கு?''

''ஏழரைக்குங்க!''

''ஆறரைக்கே பத்து ஆளுங்க தொழிற்சாலை வாசல்லே நிக்கட்டும். சில பேர் முன்னாலே வந்தாலும் வந்துடுவாங்க. முதல்லே 'சகோதரர்களே, உள்ளே போகாதீர்கள்'னு தான் கேட்டுக்கணும். நாறடி தள்ளியே இது நடக்கட்டும்......''

''நான் டவுன் ஹால்லேயிருந்து ஆறு மணிக்கு ஊர்வலம் ஆரம்பிச்சு ஏழு மணிக்குத் தொழிற்சாலைக்கு வந்துடறேன். என்னடா பன்னு ?''

''துரை, அந்த இன்ஸ்பெக்டரு வந்திருக்காரு !''

''யாரு, ராஜசேகரனு ?'' என்றான் பெருமாள்.

''எதுக்குடா ?''

''உங்களைப் பார்க்கணுமாம் !''

''என்னேயா?'' என்றான் துரை.

''ஆமாம் !''

''இரு பெருமாள், வரேன்!''

துரை தன் லுங்கியை அரைக் கட்டாகக் கட்டிக் கொண்டான். விரலிடுக்கில் பிடித்த சிகரெட்டை மிதித்து அணைத்தான்.

வெளியே வந்தான்.

ராஜசேகரன் ஜீப்பில் உட்கார்ந்திருந்தார்.

துரை வாசலிலேயே நின்றான்.

ராஜசேகரன் இறங்கி வந்தார்.

'' உங்களைத்தான் பார்க்கணும்னு வந்தேன் !''

'' எதைப் பத்தி....?''

''நாளைக்கு ஸ்டிரைக்கைப் பத்தி. அப்புறம் இன்னும் சில விஷயங்களைப் பத்தி....''

''இன்னும் சில விஷயங்களா? புரியலே!''

''முந்தா நாள் நீங்க இங்கே கூட்டம் முடிஞ்சப்புறம் எங்கே போனீங்க?''

'' டவுனுக்குப் போனேன். அங்கே இன்னொரு கூட்டம் இருந்தது.''

''எப்படிப் போனீங்க?''

''ஜீப்பிலே!''

'' எந்த வழியா ?''

''எனக்கு அதெல்லாம் ஞாபகமில்லே. நீங்க எதுக்கு இதெல்லாம் கேக்கறீங்க....?''

'' உங்க மூகத்திலே என்ன காயம்?''

துரை தன் முகத்தைத் தடவிக் கொண்டான். உடனே தன் ஜிப்பாவின் மடக்கியிருந்த பாகத்தை விடுவித்துக் கொண்டு தன் வலது கையை மூடிக் கொண்டான்.

'' கையிலேகூட காயம் ஏதாவது ?'' என்றார் ராஜசேகரன்.

''இன்ஸ்பெக்டர்! நீங்க எதுக்கு இதெல்லாம் என்னைக் கேக்கறீங்கன்னு புரியலே.''

'' என்ன ? உங்களோட எனக்கு விளையாட்டா ? எனக்கு வேலை நிறைய இருக்குது!

''மிஸ்டர் துரை ! தண்டலம் கிராமத்திலேயிருந்த ஒரு பெண்ணை யாரோ ஓர் ஆள் வந்து பலாத்காரம் பண்ண அவள் இறந்து போய்விட்டாள். முந்தா நேத்து சாயங்காலம்!.....''

''என்னது இறந்து போயிட்டாளா ?''— அவன் கேள்வியில் உண்மையான ஆச்சரியம் இருந்தது.

'' ஆம் !''

''பென்னு ! ச்சச்ச் ! பேய், பன்னு, கேட்டியாடா, இதை !.... இந்த மாதிரி அக்கிரமங்களெல்லாம் நடக்குது!''

பன்னு என்கிற பத்மநாபன் முகத்தில் ரத்தம் இழுந்து நிற்பதைக் கவனித்தார் ராஜசேகரன் !

''இன்ஸ்பெக்டர் ! நான் ஊரூரா பேச்சு பேசன்னு சுத்தறவன். தண்டலம் கிராமம் எங்கே இருக்குதுன்னு எனக்குத் தெரியாது... அந்த வாய்க்கால் எங்கே இருக்குதுன்னும் எனக்குத்தெரியாது. ஏதாவது தெரிஞ்சா...''

''மிஸ்டர் துரை ! வாய்க்காலா ?''

''நீங்கதானே! சொன்னீங்க... ஏதோ...''

'' வாய்க்காலைப் பத்தியா ? இல்லவே இல்லையே !''

''பின்னே, யார் சொன்னாங்க, வாய்க்காலோ என்னவோன்னு..... பெருமாள்! பெருமாள்தான் யாரோடயோ இதைப் பத்திப் பேசிக்கிட்டிருந்தான்..... எனக்கு வேறே வேலை இருக்குது. வேறே ஏதாவது கேக்கணுமா ?''

ராஜசேகரன், ''இல்லே. உங்களுக்கு வேலை இருக்கும். நீங்க போங்க !'' என்றார்.

துரை யூனியன் ஆபீசுக்கு உள்ளே சென்று விட்டான். அவனுக்குப் பாட்டில் தேவையாக இருந்தது.

ராஜசேகரன் ஜீப்பில் வந்து உட்கார்ந்து கொண்டார். ''அருணாசலம்! அவன்கூட ஒரு பையன் இருந்தானே! அதோபார், அங்கே போறானே, அவனை ஞாபகம் இருக்குதா ?''

''அவன் எப்பவும் துரைகூடவே வருவான் ஸார். அன்னிக்கு ஜீப் ஓட்டி வந்தான்.''

பன்னா விடுவிடுவென்று நடப்பதைப் பார்த்தார். கடைத் தெருவின் கூட்டத்தினூடே அவன் திரும்பித் திரும்பிப் பார்ப்பதைக் கவனித்தார்.

நேராக ஜீப்பைச் செலுத்தினர், பன்னாவின் பின்னாலேயே சென்று அவன் அருகில் நிறுத்தி, ''இந்தாப்பா, இங்கே வா!'' என்றார்.

பன்னா பயத்துடன், ''என்னா ஸார் !'' என்றான்.

''எங்கே போறே ?'' என்றார்.

''அதோ, அந்தச் சினிமா கொட்டகை வரைக்கும் போறேன் ஸார் !''

''ஏறு. நான் கொண்டு விடறேன்!''

''இல்லை, ஸார்! நானே போய்க்கிறேன்!''

''ஏறு !''

பன்னாவை அருணாசலம் பின்னால் தூக்கி உட்கார வைத்தான். ஜீப் புறப்பட்டது.

* * *

துரை யூனியன் ஆபீஸின் பின் பக்கத்தில் தனியாக உட்கார்ந்து குறைந்த அளவு சோடா சேர்த்து 'இங்கிலீஷ்' அடித்துக் கொண்டிருந்தான்.

பெருமாள், ''என்ன கேட்டாரு ?'' என்றான்.

''பொதுவாகத்தான் கேட்டான். அன்னிக்கு ஏதோ கொலையாமே!''

''ஆமாம், துரை! பாவம் ஒரு சின்னப் பொண்ணு !''

''ஏதாவது கண்டு பிடிச்சாங்களாமா ?''

''எங்கே ?''

துரை தன் கையிலிருந்த சிகரெட் பாக்கெட்டை உதற, அது காலியாக இருக்க, ''பன்னா'' என்றான். ''வெளியே நம்ம பய பன்னா நிப்பான் கூப்பிடுறீங்களா?''

பெருமாள் வெளியே போய்ப் பார்த்துவிட்டு, ''இல்லையே !'' என்றான்.

''எங்கே போய்ட்டான்? அங்கேதானே நிக்கச் சொன்னேன் !''

துரைக்குச் சற்றுக் கவலை ஏற்பட்டது. வெளியே வந்தான். சுற்றிலும் பார்த்தான். எதிரே நாயர் கடையில் போய்ச் சிகரெட் வாங்கிக் கொண்டான். ''நம்ம பையன் ஒருத்தன் வெட வெடன்னு உயரமா இங்கே நின்னுக்கிட்டிருந்தானே நாயர், அவனைப் பார்த்தீங்களா ?''

''ஆ யாளா ? அவன் ஜீப்பிலே போயி!''

''ஜீப்பா ?''

''போலீஸ்காரங்க வந்ததில்லே, அவரு அழைச்சுப் போயி!''

துரையின் போதை தெளிந்துவிட்டது. உடனே உள்ளே ஓடினான். ''பெருமாள் ! பெருமாள் !'' என்றான்.

''என்ன துரை ?''

''நாலு ஆளுங்களைக் கூட்டி வாங்க.... போலீஸ் ஸ்டேஷன் எங்கே இருக்குது?''

''ஏன் துரை ?''

''பன்னாவை அழைச்சுட்டுப் போயிருக்காணாம் அந்த இன்ஸ்பெக்டர் !''

* * *

துரை போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தபோது ராஜசேகரன் மேஜை விளிம்பில் உட்கார்ந்து தேநீர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். எதிரே பவ்யமாகப் பன்னா நின்று கொண்டிருந்தான்....

''இன்ஸ்பெக்டர், என்ன இது ! இந்த ஆளை நான் ஊர் முழுதும் தேடிட்டிருக்கேன். பன்னா வாடா !''

''இருங்க, இருங்க ! இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்துடுவார் உங்க ஸ்நேகிதர் !''

''இன்ஸ்பெக்டர், எந்த ஆதாரத்திலே எந்தச் சட்டத்திலே நீங்க இந்த ஆளை இங்கே அழைத்து வந்து வைச்சிருக்கீங்க?''

''அதை நீங்க கேட்கக் கூடாது!''

''ஏன் கேட்கக் கூடாது? இவனை எப்படி நீங்க ஸ்டேஷனுக்கு அழைச்சு வரலாம்? கைது பண்ணினீங்களா ? வாரண்ட் கொண்டு வந்தீங்களா ! என்ன இது சர்வாதிகாரத்தனமா இருக்குது.......!''

''நான் என்ன செஞ்சுட்டேன்னு இப்படிக் கத்துறீங்க? அவராத்தானே ஜீப்பிலே வந்தாரு! என்யா பத்மநாபன், நாங்க உங்களை....?''

''டேய், பன்னா ! எப்படிடா இங்கே வந்தே ?''

''சினிமாக் கொட்டகைக்குப் போறேன்னு சொன்னேன், துரை ! ஜீப்பிலே போட்டுக்கிட்டு இங்கே கூட்டி வந்தாங்க.....''

''இன்ஸ்பெக்டர் ! இது தகாது. நான் கம்ப்ளெய்ண்ட் கொடுக்கப் போறேன்.....''

ராஜசேகரன் இதைக் கவனிக்கவில்லை. எஸ்.பி. அஃப்தாப் ஹுஸேன் உள்ளே நுழைய அவர் எழுந்து நின்று 'ஸல்யூட்' அடித்தார்.

''என்ன ராஜசேகரன் ! என்னப்பா, துரை! ஒரே இரைச்சலா இருக்குது. நாளை கலாட்டாவுக்கு ஒத்திகையா ?''

''ஹுஸேன் ஸார், நீங்க வந்துட்டீங்க ! இந்த ஸ்டேஷனிலே அக்கிரமம் நடக்குது ! அராஜகம் நடக்குது. சென்ற மூணு மணி நேரமா இந்த ஆளை உங்க இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்குள்ளே 'டிடெய்ன்' பண்ணி வைச்சிருக்காரு. ஒருவிதமான வாரண்ட் ஏதுவும் இல்லாமே!''

''என்ன இது, ராஜசேகரன் ?''

''டேய், பன்னா ! உன்னை அடிச்சாங்களாடா? தைரியமா சொல்லுடா !''

''புடிச்சுத் தள்ளினாங்க ஸார் !''

''அடிச்சிருக்காங்க! சொல்லப் பயப்படறான்...... !''

''என்ன இது, எனக்கு ஒண்ணுமே புரியலை. யார் இந்த ஆள்?''

'' ஸார் ! நேத்து மர்டர் விஷயமா, இந்த ஆளைக் கொஞ்சம் கேள்வி கேட்டேன்.... அது தான் !''

''ஸ்டேஷனுக்கு எப்படி வந்தான் ?''

'' நான் கூட்டி வந்தேன் !''

''இல்லீங்க. அடிச்சு உதைச்சு மிரட்டி இழுத்து வந்திருக்காங்க ! என்னடா, பன்னா சொல்லேண்டா !''

''ஆமாங்க !''

''பொய் ! பொய் சொல்லாதே !'' என்றான் அருணாசலம்.

'' அவன் முகத்தைப் பாருங்க, வீங்கி இருக்குது !''

'' ஸார் ! நாங்க அவனைத் தொடக்கூட இல்லை !''

"ஹாலேன் ஸாப்! நான் கம்ப்ளெய்ண்ட் கொடுக்கிறேன்!"

"இருங்க! இருங்க! என்ன நடந்துது இப்ப! சும்மா அலட்டிக்காதீங்க!"

"ஹாலேன், ஸாப்! இந்த மாதிரி ஸ்டேஷனிலே ஒரு ஆளை நிறுத்தி வெச்சு உதைக்கிற காலமெல்லாம் பிரிட்டிஷ்காரனோட போயிடுச்சுன்னு உங்க இன்ஸ்பெக்டர் கிட்டே சொல்லுங்க! அது ஊரிலே பரவிச்சுன்னு நாளைக்கு என்ன ஆகும்கிறதை என்னாலே சொல்ல முடியாது. ஏற்கனவே இவரைப் பத்தி என்கிட்டே நிறையப் பேர் புகார் சொன்னாங்க! வாரிக்காரங்கள்ளாம் ரொம்பச் சொன்னாங்க....."

"துரை! உங்களுக்கு என் மேலே ஏன் வெறுப்பு இருக்குதுன்னு எனக்கும் தெரியும். உங்களுக்கும் தெரியும்."

"இருங்க ராஜசேகரன். இந்தாப்பா, உன் பேர் என்ன?"

"பத்மநாபன்!"

"உன்னே அடிச்சாங்களா?"

"ஆமாங்க!"

"என்ன இது ராஜசேகரன்!"

ராஜசேகரன் பத்மநாபனை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

"துரை! நீங்க இந்த ஆளை அழைச்சுக்கிட்டுப் போங்க! உங்களுக்கு 'கம்ப்ளெய்ண்ட்' இருந்தா இந்த ஆள் எழுதிக் கொடுக்கட்டும். விசாரிக்கிறேன். நீங்க எல்லாம் போங்கப்பா! போங்கப்பா! ராஜசேகரன், கொஞ்சம் வாங்க!"

அவர்கள் சென்றதும், "ஸார்! அவன் ஆடின நாடகத்தை எல்லாம் நீங்க நம்பறீங்களா?" என்று கேட்டார் ராஜசேகரன்.

"என்ன இது, ராஜசேகரன்! எல்லாத்துக்கும் ஒரு முறை இருக்குது! யார் இந்தப் பத்மநாபன்......?"

"துரையோட ஆளு!"

"அவனே எதுக்கு இங்கே கூட்டிக்கிட்டு வந்தீங்க?"

"உங்களுக்கு முதல்லேயிருந்து விவரமாக சொல்றேன் ஸார்!"

* * *

துரை, பன்னுவைத் தனியாக ஒரு காப்பி ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான். ஒரு மூலையில் காலியாக இருந்த மேஜையில் இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள். இரண்டு காப்பி ஆர்டர் செய்து அது வந்ததும் பில்லை வாங்கிக் கொண்டு ஸர்வர் போனதும்,—"சொல்லுடா!" என்றான்.

பன்னுவின் விரல்கள் நடுங்கக் காப்பி கீழே சிந்தியது.

"துரை! அந்த ஆள் உன்னைச் சந்தேகப்படறாரு!"

"என்ன கேட்டான், நீ என்ன சொன்னே?"

"அன்னிக்குச் சாயங்காலம் கூட்டம் முடிஞ்சதே, அதுக்கப்புறம் எங்கே போனேன்னு கேட்டான். நான் டவுனுக்குப் போனேன்னு சொன்னேன். ஜீப்பை யார் ஓட்டினா? அந்த மாலையை எங்கே வைச்சுக்கிட்டிருந்தீங்க.... என்றெல்லாம் கேட்டான்."

"மாலையா?"

"ஆமாம். கூட்டத்திலே மாலை போட்டாங்களே, அதைப் பத்தித் திருப்பித் திருப்பிக் கேட்டான். அப்புறம் நம்மகூட ஜீப்பிலே வந்த மாதிரி அவ்வளவு கரெக்டா சொல்றான் துரை!"

"என்ன சொல்றான்?"

"ஜீப்பை வாய்க்கால் கரைப் பக்கம் நிறுத்தினியா? அங்கே ஒரு பொண்ணு குளிச்சிக்கிட்டிருந்ததைத் தூரத்திலேயிருந்து பார்த்தீங்களா? அங்கே ரெண்டு பேரும் போனீங்களா, துரைமட்டும் தனியாகப் போனானா..."

"அதுக்கெல்லாம் நீ என்னடா சொன்னே?"

"நானா! சே! நான் அப்படி எல்லாம் ஒண்ணுமே நடக்கலே, இல்லேன்னு நான் சொன்னேன். பெரிய பள்ளத்தைவுட்டு நேரா டவுனுக்குப் போனோம். அவ்வளவு தான்னேன். ஆனால் அவன் கேக்கறவிதமே வேறே மாதிரி இருந்தது. எல்லாம் நடந்தது. அதுக்கப்புறம் என்ன செஞ்சீங்கன்னு திருப்பித் திருப்பி அந்த இடத்தைப் பத்தியே கேக்கறான்!"

"நீ என்னடா, சொன்னே?"

"தெரியாதுன்னுதான் சொன்னேன்..... இருந்தாலும் கொஞ்சம் முன்னே பின்னே ஆயிடுச்சு! துரை, அவனுக்கு எப்படித் தெரிஞ்சுது துரை?"

"போடாத்....." கையை ஓங்கினான்.

"அடிக்காதே துரை! துரை, நீ பார்க்கறது சரியாயில்லே. நான் சத்தியமா ஒன்



அசத்தும் கரோ

தவ.....றா

பலமில்லாதவன்

புவி ஈர்ப்பு

நன்றி: இலாமூ
தகவல்: " பாலி "

ணும் சொல்லலே, துரை! துரை! என்னை இதிலே மாட்டி விட்டுடாதே, துரை !"

"மாலேன்னு சொன்னான்! மாலே என் கிட்டேதான் இருந்தது. ராத்திரி திரும்பி வரபோது ரெண்டு மாலே இருந்துதே!"

"பூ ஏதாவது விழுந்திருக்குமோ ?"

"சொன்னானா?"

"நாம அந்த இடத்திலே இருந்ததுக்கு ஆதாரம் இருக்குதுன்னு சொல்றான்!"

"சும்மா விட்டிருக்கான். அப்படி ஏதாவது இருந்தா என்னை ஏன் கைது பண்ணலே யாம்? அவன்கிட்டே ஆதாரம் இல்லே. சந்தேகம்தான் இருக்கு. பன்னு! உன்னை எப்பவாவது போலீஸ்காரங்க மறுபடியும் வந்து இதைப் பத்திக் கேட்டா நீ ஸ்பஷ்டமா.... எழுதிக்கிட்டாங்களாடா அப்ப?"

"இல்லே, துரை! ரொம்பச் சிநேகமாகத் தான் கேட்டான். தொடலே!"

" எல்லாத்தையும் மற ! உன்னை..... ஸ்டேஷன்லே அடிச்சாங்க. தெரியுமா ? அடிச்சு ஸ்டேட்மெண்டிலே கையெழுத்துப் போடச் சொன்னாங்க. தப்பு தப்பா சொல்லச் சொன்னாங்க. அதுக்குள்ளே நாங்க வந்துட்டோம். தெரியுமா ? அதுதான் உண்மை ! அதுதான் நிஜம். தெரியுதா!"

"தெரியுது துரை ! அந்தப் பொண்ணு போயிடுச்சாம் துரை! என்னதான் செஞ்சே, துரை ?"

"எக்கச் சக்கமா விழுந்துடுச்சு! அம்பாயுக! பன்னு, அந்தப் பொண்ணுக்கு ஆன கதி உன் தங்கச்சிக்கும் ஆக வேண்டாம். புரியுதா?"

"புரியுது துரை!"

"உண்மையா நடந்தது என்ன?"

"ஸ்டேஷன்லே என்னை அடிச்சாங்க!.... ஸ்டேஷன்லே கையெழுத்துப் போடச் சொன்னாங்க !"

"சபாஷ்..... ராசசேகரா! என்கிட்ட விளையாடுறியா நீ? உன்னைக் கவனிக்கிற விதத்திலே கவனிக்கணும்....." துரை யோசித்தான். "பன்னு! இன்னொரு காரியம் செய். நேரா டவுனுக்குப் போ. நம்ம பேட்டைக்குப் போ. அங்கே வெங்கடசாமிகிட்ட போய் நான் சொன்னதா சொல்லு! நாளைக்கு விடியக் காலையிலே ஒரு அம்பது ஆளாவது வேணும்னு சொல்லு......!"

* * *

அஃப்தாப் ஹுசேன் சற்று நேரம் ராஜசேகரனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"அவனைக் கைது பண்ணணுமா? எதற்கு?"

"அவன்தான் ஸார் !"

"என்ன எவிடன்ஸ் இருக்கிறது உங்களிடம், நம்மிடம்? இந்த ரோஜாப்பூ? ஜரிகை இழை!"

"அந்தப் பத்மநாபனுடன் நான் பேசினேன் ஸார் !"

"டோட்டலி இம்மெட்டீரியல்! அவன் ஒவ்வொரு வார்த்தையையும் டினை பண்ணுவான். ரிகார்ட் பண்ணினீங்களா? இல்லே. பேசினீர்கள். அவ்வளவுதான் ! அவன் என்ன சொன்னான்.... முன்னுக்குப்பின் முரணாகச் சொன்னான்....."

"ஸார் ! எல்லாம் பொருந்துகிறது ! அவன் கூட்டத்தை விட்டுக் கிளம்பின சமயம் சென்ற பாதை..... அவன் கன்னத்தில் நகக் கீறலைப் பார்த்தேன். அவன் கையில் காயம் இருக்கிறது. அந்த ரோஜாப்பூ!...."

"ராஜசேகரன்! நீங்கள் சற்று நேரம் இந்தக் கேஸை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடத்தப் போகும் ப்ராஸிக்யூட்டிங் இன்ஸ்பெக்டராக உங்களை நினைத்துக்கொள்ளுங்கள். எப்படி நடத்துவீர்கள்? மெட்டீரியல் எவிடன்ஸ் என்ன? ஒரு பூ! இட் கன் பி எவிடென்ஸ்! எப்படி அந்தப் பூ அந்தச் சமயத்தில் அவன் வைத்திருந்து அங்கு விழுந்தது என்று நிரூபிப்பீர்கள்? அப்புறம் என்ன? இரண்டு காயங்கள்! காயங்கள் அந்தப் பெண்ணால் ஏற்பட்டது என்று எப்படி நிரூபிப்பீர்கள்? யார் பார்த்திருப்பார்கள்? அந்தப் பத்மநாபன் கூட இருந்தானா? அவன் பார்த்தானா ? பார்த்தால் 'நான்' பார்த்தேன். அவன் அந்தப் பெண்ணைப் பலாத்காரம் செய்

தான்' என்று சாட்சியம் சொல்வானு?.... எதற்காகச் சொல்ல வேண்டும்? நீங்களே சற்றுமுன் பார்த்தீர்கள். நீங்கள் தொட வில்லே. 'அடித்தான்' என்று சொன்னுன் ! அவன் எதற்காக உண்மை சொல்ல வேண்டும்? நீங்கள் தரப் போகும் சாட்சியங்கள் எத்தனே? ஒரு ரோஜா. இரண்டு காயங்கள்! போதுமா ?''

ராஜசேகரன் யோசித்தார்.

''போதாது!'' என்ருர். ''அவன்தான் ஸார்! அவன்தான்! அவன்தான் ! எனக்குக் குற்றவாளிகளேத் தெரியும். அவன் கண்ணில் தெரிகிறது. உடம்பினுள் ஒவ்வொரு எலும்பிலும் நான் உணர்கிறேன், அமானுஷ்யமாக அவன்தான், அவன்தான் என்று !''

''போதாது! நீங்கள் இதுவரையில் கண்டு பிடித்ததன் மூலம் நான் என்ன நினேப்பேன் தெரியுமா ?...... துரை என்பவன் அதைச் செய்திருக்கலாம். அவ்வளவுதான் !''

''நம் சட்டங்கள் மிகவும் குறைபட்டவை.''

''இல்லே! நம் சட்டங்கள் பெரும்பான்மையான சமயங்களில் பெரும்பான்மையான குற்றங்களேத் தண்டிக்க உதவுகின்றன...... எல்லாக் குற்றங்களுக்கும், எல்லா நல்ல காரியங்களுக்கும் தாக்குப் பிடிக்கக் கூடியவர் ஒருவரே ஒருவர். அல்லா! நாளே மறியலேப் பற்றிக் கொஞ்சம் பார்க்கலாமா?''

நான்காம் தினம்

ராஜசேகரன் கனவில் அந்தத் தாவணி, ஊஞ்சல், அந்தச் சலங்கை, அந்தக் கிழவன் விசிறி எறிந்த நோட்டுக்கள், உடைந்த வளே யல்கள், ஒற்றை ரோஜா !

ரோஜா ரத்த மலராக விரிந்தது. ஒரு புதிய உயிருடன் அதன் இதழ்கள் மெதுவாக விரிந்து கொண்டன.

ஆளரவமே இல்லாத மிகக் காலியான தெருவில் அவர் தம் கால் பூட்ஸ்கள் ஒலிக்க நடந்து கொண்டிருந்தார்.

எதிரே சூரியன் மெதுவாகத் தண்ணீரில் அமிழ்ந்து கொண்டிருக்க அது முழுவதும் மூழ்கியதும் அவருக்கு அதிக சோகம் ஏற் பட்டது.

அலாரம் கடிகாரம் அடித்து விழித்தார். சரளா முன்பே எழுந்து விட்டிருந்தாள். அவள் சப்தம் சமையல் அறையில் கேட்டது.

இன்று வேலே நிறுத்தம் என்ற ஞாபகம் வந்ததும் உடனே பல் தேய்த்து முகம் கழுவிக் கொண்டு வந்தார்.

''என்னங்க, இன்னிக்குத்தானே மறியல்?''

''ஆமாம், ஸ்டிரைக்!''

''அடிதடி நடக்குமா ?''


''ம்ஹூம். நடக்காதுன்னு நினேக்கிறேன்.''

''எத்தனே மணிக்குத் திரும்பி வருவீங்க?''


''சாப்பிட வந்துட்டு மறுபடியும் போறேன். ஆனல் எனக்காகக் காத்திருக்காதே !''

''..............''


''ஏன் பேசலே? எனக்காகக் காத்திருக்காதே ! புருஷன் சாப்பிட்டுட்டு அப்புறம் தான் மனேவி சாப்பிடணும் என்பதெல்லாம் திருவள்ளுவரோட போயிடுச்சு !''




★ காதலேக் குறிக்க இந்தச் சின்னத்தை உபயோகிக்கிறோம். இதே சின்னத்தை இன்னும் எப்படி எப்படி எல்லாம் உபயோகிக்கலாம்? ●




பழங்காலக் காதல்




1973 காதல்




சோகக் காதல்



முன்ஜாக்கிரதைக் காதல்




கல்நெஞ்சக் காதல்




இதயமில்லாக் காதல்



குழப்பக் காதல்



திருமணமான காதல்



மானசீகக் காதல்

நன்றி: லைப் ஆர்ட்.
இதயங்கள்: மாலி.

''சரிங்க!''

அவள் குரலில் அலுப்பு தொனித்தது.

''இத பாரு! நாளைக்கு இதெல்லாம் முடிஞ்ச உடனே..... லீவு எடுத்துக்கப்போகி றேன். எக்கேடு கெட்டுப் போகட்டும்..... எவன் எவனைக் கொன்னு எனக்கு என்ன? ஒரு நாளைக்கு..... உனக்காக ஒரு நாள்..... நாளைக்கு!''

''சாயங்காலம் மறுபடியும் ஞாபகப்படுத்த றேன். அப்ப இதைச் சொல்லுங்க!''

''நீ வேணும் பாரேன்! எனக்கும் அலுத்துப் போச்சு! அந்தப் பொண்ணைக் கொன்னவன் யாருன்னு எனக்குத் தெரியுது.... மத்தவங் களுக்குத் தெரிவிக்க முடியலே! சட்டத்துக்கு, கோர்ட்டுக்கு அதைத் தெரிவிக்க முடியலே!''

''யாருங்க அது?''

''எவனோ ஒருத்தன்! அவனை நான் கைது பண்ண முடியாத வரைக்கும் எவனு இருந் தால் என்ன? ஸி.ஆர்.பி.ஸி. புஸ்தகத்திலே அவனைக் கைது பண்றதுக்கு விதி இல்லே! பத்தலே! விடு!''

''நீங்க அந்த ஆளைக் கண்டுபிடிச்சுட் டீங்களா?''

''கண்டு பிடிச்சேன். பிரயோசனமில்லே! சாட்சிகளே கிடையாது. நாளைக்கு என் சரளாவோட முழு நாளும் வீட்டிலேயே இருக்கப் போறேன்.

''தேவலையே! என் ராஜா!''

* * *

ஆலைக்கு வெளியே அரை வட்டமாக ஹெல்மட் அணிந்த போலீஸார் நின்றுகொண் டிருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் கையில் கழி வைத்திருந்தார்கள். சிலரிடம் துப்பாக்கி இருந்தது. அருகே போலீஸ் ஜீப்பில் ரேடியோ அமைத்திருந்தது. கருநீல வானில் மேலும் சிலர் உட்கார்ந்து கொண் டிருந்தார்கள்.

ராஜசேகரன் ஜீப்பின் அருகில் நின்று கொண்டு ஹுஸேனுடன் பேசிக் கொண் டிருந்தார். கண்ணீர்ப் புகை ஷெல்கள் தயா ராக இருந்தன. துப்பாக்கிகளில் தோட் டாக்கள் இருந்தன.

பெரிய பானர்களும் அட்டையில் எழுதிய வாசகங்களுமாகச் சுமார் நூறு பேர் கத்திக் கொண்டிருந்தார்கள்.

''இன்குலாப்....''

''ஜிந்தாபாத்!''

''தொழிலாளர் ஒற்றுமை...''

''வாழ்க!''

ஆலையின் டைரக்டர் உள்ளே இருந்தார். ஆலையின் பாதுகாப்பு அதிகாரி ஹுஸேனுடன் நின்று கொண்டிருந்தார். ஆலையின் கம்பிக் கதவுகள் மூடியிருந்தன. சுவர்களில் ஆளுயர எழுத்துக்கள் எல்லோரையும் திட்டின.

இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் போலீஸ் காரர்கள் மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு எதிரே இருப் பது ஒரு கூட்டம். பெயரில்லாத கூட்டம். அந்தக் கூட்டத்தைப் பொறுத்தவரை எதிரே இருக்கும் காக்கிச் சட்டை ஒரு ராமனோ, முத்துக்கிருஷ்ண நாயுடுவோ, இஷக் பாஷாவோ இல்லை! அரசாங்கம்! அரசாங் கத்தின் மேல், அதிகாரத்தின் மேல் அவர்க ளுக்கு இருக்கும் ஏமாற்றம், பயம், வெறுப்பு எல்லாம் ஒன்று சேர்ந்த உருவகம்!

இவர்களிடம் ஆயுதம் இருக்கிறது: அவர் களிடம் ஆயுதம் இல்லை. இவர்கள் குறைந்த எண்ணிக்கை; அவர்கள் எண்ணிக்கையில் அதி கப்படியானவர்கள். இந்தச் சூழ்நிலையின் அடிப்படையில் ஒரு வெடிகுண்டு போன்ற ஆபத்தான அமைப்பு இருக்கிறது.

நான் ஒரு போலீஸ்காரராக இருந்தால் எனக்கு எதிரே இருக்கும் முகமற்ற நூற்றுக் கணக்கான தலைகளையும் அவை ஒன்றுசேர்ந்து செய்யும் கோஷத்தையும் கண்டு கலவரப் பட்டிருப்பேன். அவர்கள் நிதானமாக இருந் தார்கள். ஹுஸேன் சிகரெட் பிடித்தார். ராஜசேகரன் தரையில் பூட்ஸ் காலால் வட் டங்கள் வரைந்து கொண்டிருந்தார்... தம்மை யறியாமல் ஒரு வட்டத்தின் நடுவில் கையிலி ருந்த கோலால் ஒரு ரோஜா வரைந்தார்.

அப்போது ஜீப்பின் மேல் நடுநாயகமாக உட்கார்ந்து கொண்டு, கழுத்தில் மாலை அணிந்து கொண்டு, சேவித்துக் கொண்டு, துரை ஊர்வலமாக அவர்களை நோக்கி வர... அவனைச் சூழ்ந்து அவன் பின்னே சுமார் ஆயிரம்பேர், தருவிக்கப்பட்ட ஆவேசத்துடன் வாழ்க கூச்சல்களும், ஒழிக கூச்சலுமாக வந்தார்கள்.

போலீஸ்காரர்கள் தயாரானார்கள்.

துரைக்கு வெகு அருகிலே இருந்தவர்கள் உள்ளூர்க்காரர்கள் இல்லை. அவர்கள் கையில் கம்பும் கழியும் வைத்திருந்தார்கள். இரும்புப் பூணும், முரட்டுச் செருப்பும் அவர்கள் நல்ல காரியத்துக்காக வரவில்லை என்பதைத் தெரி வித்தன.

துரை குனிந்து அவர்களைக் கூப்பிட்டான். ''வேங்கடசாமி!'' என்றான்.

''என்ன துரை?''

''அதோ பார், அந்த ஜீப்புக்குப் பக்கத்தில் தனியா நிக்கிறானே கிழே குனிஞ்சுக்கிட்டு! தெரியுதா?''

''தெரியுது துரை!''

''அவன்தான்.''

''சரி துரை. டேய் சங்கிலி!...''

போலீஸின் அரை வட்டச் சங்கிலி இறு கியது. புதிதாக வந்தவர்களின் உற்சாகத் தில் சோர்ந்து போயிருந்தவர்களின் குரல் எழும்பியது.

இங்கிலீஷில், தமிழில் எழுதப்பட்ட அட் டைகள் நடனமாடின! அந்தத் தலைகள்... கொஞ்சம் கொஞ்சமாகக் கிட்டக் கிட்ட நெருங்கின. போலீஸ் அமைத்த அரை வட் டம் சற்றுக் குறுக ஆரம்பித்தது. குறுகிய அரை வட்டத்தைப் பெரிதுபடுத்த அவர்கள் முயன்றார்கள். மனித வெள்ளத்தை நடுவே பிரித்துத் துரைக்கு வழி விட்டார்கள். துரை யின் பின்னால் பெருமாள் வந்தான். ராஜ சேகரன் சற்றுப் பின்தங்கி வந்தார்.

அந்த அரை வட்ட இடத்தை ஸ்திரமாக வைத்திருப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. அடிக்கடி அதன் வடிவம் மாறிக் கொண் டிருந்தது. எல்லோருக்கும் எச்சில் உலரக் கத்தும் ஆவேசம் ஏறியிருந்தது.

இப்பவும் நிலைமை மோசமாகவில்லை.

துரை அவர்களிலிருந்தும் விடுபட்டு முன் வந்தான். அவன் மட்டும் ராஜசேகரனைப்



கல்கி காரியாலயத்தைச் சேர்ந்த ஸ்ரீ எம்.எஸ். வெஸ்வாமியின் குமாரத்தி சௌபாக்கியவதி உமாமகேச்வரிக்கும், ஸ்ரீ டி. ராமச்சந்திரய்யரின் குமாரன் சிரஞ்சீவி டி. ஆர். சந்திரமௌளிக்கும் ஜுலை 13ம் தேதி தியாகராயநகர் லலிதா கல்யாண மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. உறவினர்களும், நண்பர்களும் பிரமுகர்களும் மணமக்களை ஆசிர்வதித்தனர்.

வாழ்க மணமக்கள்.

பார்த்து, "வணக்கம்!" என்றான். தன் மாலையிலிருந்து ஒரு ரோஜாவை எடுத்து அவருக்கு அளித்தான். ஜனங்கள் கை தட்டினார்கள்.

துரையை மிக ஆழமாக நோக்கினார் ராஜசேகரன். 'உன்னை யார் பெற்றார்கள், யார் வளர்த்தார்கள்? எந்தப் பள்ளியில் படித்தாய்? எப்படி ஒரு பெண்ணைச் சேதம் செய்துவிட்டு, கொன்றுவிட்டு இரண்டு நாட்களில் புன்முறுவலுடன் தெரிந்தே அந்த ரோஜாவை எனக்கு அளிக்கிறாய்? எப்படிப்பட்ட மிருகம் நீ!...'

"வணக்கம் உசேன் ஸார்! நாங்க கலாட்டாச் செய்ய வரவில்லே. பத்தே பத்துப் பேரு டைரக்டரைப் போய்ப் பார்க்க விடுங்க போதும்! இந்தப் பெட்டிஷனைக் கொடுத்து விட்டால் போதும்!"

"யூனியன் காரியதரிசி மட்டும் போனால் போதும் ஸார்!" என்றார் ராஜசேகரன்.

"இல்லீங்க. துரையும் வருவார்!" என்றார் பெருமாள்.

"என்னடா சொல்லுங்க போலீஸு?" ஏதோ ஒரு குரல்.

"உள்ளே விட மாட்டார்களாம். நம்ம நியாயமான கோரிக்கையைக் கொடுக்க விட மாட்டாங்களாம்பா!"

"ஏய்!" என்றான் ஒருவன்.

அவர்களுக்கு மிக அருகில் இருந்தவர் ராஜசேகரன். அவர் பதற்றப்படவில்லை.

"ஒருத்தர், ரெண்டு பேர் போனாப் போதும்."

"பத்துப் பேர் போகணும்!" என்றான் துரை.

"சங்கிலி, முன்னே வாடா!"

ஹெல்மெட் போலீஸார் மிகவும் கஷ்டப்பட்டு அந்த மனித அலைக்கு அணை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஹுஸேன், "ராஜசேகரன்! பத்துப் பேரை விடுங்க! கூட கான்ஸ்டபிள்களை அனுப்பி உள்ளே கூட்டிப் போகலாம்!" என்று உத்தரவிட்டார்.

ராஜசேகரன் ஹுஸேனை ஏமாற்றத்துடன் பார்த்தார். போலீஸ் சங்கிலி கொஞ்சம் விலக்கப்பட்டுத் துரை, பெருமாள் உள்படப் பத்து பேர் தபதபவென்று வட்டத்துக்குள் வந்தனர்.

பத்துப் பேருடன் நிற்கவில்லை. பதினைந்து பேர்... இருபது... ஐம்பது...

விடுபட்டவர்கள் உள்ளே ஆலையை நோக்கி ஓடினார்கள். அவர்களைச் சில போலீஸ்காரர்கள் துரத்தினார்கள்.

போலீஸ் சர்க்கிள் சிதறுண்டது. அங்கங்கே பிய்த்துக் கொண்டு மக்கள் உள்ளே வந்துவிட்டார்கள்.

இப்போது அந்த இடம் கலைக்கப்பட்ட தேனீக் கூடுபோல் மாறிவிட்டது.

ஹுஸேன் எச்சரிக்கை தந்தார். ராஜசேகரன் உரத்த குரலில் கத்தினார். தடியடிப் பிரயோகத்துக்கு ஆணையிட்டார். எங்கிருந்தோ கற்கள் பறந்தன. பாதுகாப்பு அதிகாரியின் முகத்தைச் சிதைத்தது ஒன்று. ராஜசேகரன் முரட்டுத்தனமாகத் தம்மை அந்தச் சூழலிலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றபோது தம்மைச் சுற்றிச் சுமார் ஐம்பது பேர் கவிந்திருப்பதைப் பார்த்தார்.

ஹுஸேன் உடனே நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து, "ஷூட்! ராஜசேகரன்! ஷூட்!" என்றார்.

ராஜசேகரன் தம் ரிவால்வரால் வானத்தை நோக்கிச் சுட்டார்.

அவர் மண்டையில் இரும்புப் பூண்போட்ட கம்பு வெடித்தது. தோளில், உடம்பில், மார்பில்.....

இப்போது நிலைமையை விவரிப்பது கஷ்டமாக இருந்தது. கண்ணீர்ப் புகையின் வெண் மேகங்கள், துப்பாக்கி ஒலி, எதிரொலி!

கன்னா பின்னா வென்று ஓடும் ஜனங்கள்...

நெற்றியில் வழிந்த இரத்தம் ராஜசேகரனின் கண்களை மறைத்தது. இருந்தும் எதிரே ஓடும் துரையைப் பார்த்துவிட்டார்.

ராஜசேகரன் குறி வைத்தார்.

சுட்டார்.

ஓடும் துரை அப்படியே மடங்கி விழுவதைப் பார்த்ததும்தான் அவர் ஞாபகம் தப்பியது.

முடிவுரை

மாலை. பெரிய பள்ளத்தில் இருபத்து நாலு மணி நேர ஊரடங்கு உத்தரவு போட்டிருந்ததால் பெரும்பாலான கடைகள் மூடிக் கிடந்தன. தெருவில் நடமாட்டம் இல்லை. ஒரே ஓர் ஆள்மட்டும் வேகமாக நடந்து பாதி மட்டும் திறந்திருந்த ஒரு ஹோட்டலுக்கு உள்ளே குனிந்து நுழைந்து கூப்பிட்டான்.

ஹோட்டல் முதலாளி வேஷ்டியை மடக்கிக்கொண்டு ஓர் அறையை விட்டு வெளியே வந்து, "இன்னிக்குக் கடை யெல்லாம் பந்த். ஒண்ணும் கிடையாது!" என்றார்.

"நான் சாப்பிட வரவில்லே அய்யரே! கொஞ்சம் ரேடியோ போடுங்க. மாநிலச் செய்திகளை சொல்லுவாங்க இன்னிக்குக் காலையிலே நடந்த மறியல் பத்தி!"

"அப்படியா?" என்று அவர் ஒரு ஸ்டூலை எடுத்துப் போட்டுக் கொண்டு அதன் மேல் ஏறி ரேடியோவை இயக்கினார்.

அது சூடுபெற்று அதன் பச்சைக் கண் ஒன்று சேர்ந்ததும் பேசியது: "....ல்லாவில் பெரிய பள்ளத்தில் இன்று காலை ஒரு சர்க்கரை ஆலையின் முன் நடந்த ஆர்ப்பாட்டத்தில் போலீசார் சுட்டதாகத் தகவல் தெரிகிறது. இரண்டு பேர் இறந்ததாகவும் பதினெட்டுப் பேருக்குக் காயம் என்றும் சொல்லப்படுகிறது. இறந்தவர்களில் ஒருவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் என்றும் மற்றொருவர் தொழிலாளர் தலைவர் திரு ஏ. கே. துரை என்றும் தெரிகிறது. முதலமைச்சர் அது பற்றிய அவசரப் பிரேரணையில் சட்டசபையில் பேசும்போது அந்தச் சம்பவம் பற்றி நீதி விசாரணை செய்யப்படும் என்று அறிவித்தார்...."

முற்றும்

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

சதைப்பற்றுள்ள செல்லக்கிளியான இரட்டைக் குழந்தைகள்

நாங்கள் வெளிநாட்டிலிருந்து வந்தபோது, நமக்கு இதமான ஒரு குழந்தை உணவு கிடைக்காது என்றே நினைத்தோம்.

ஆனால் அமுல்ஸ்ப்ரே எங்களை வென்றுவிட்டது



அமுல்ஸ்ப்ரே தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது

கைரா டிஸ்ட்ரிக்ட் கோ-ஆப்பரேடிவ் மில்க் ப்ரொட்யூஸர்ஸ் யூனியன் லிட்., ஆனந்த், குஜராத்.

ASP-AS-23A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka ஸ்ரீலங்காவில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

